R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road , London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential , Commercial Conveyancing ,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
# புதினம்
PUTHINAM

3 p/min
Vectone mobile Connect for less
Call to Sri Lanka Mobile
When you buy UK Pocket Saver for only £10 you get:
• 500 UK Minutes • Unlimited UK texts
• 1000 MB Data • Unlimited calls and texts Vectone to Vectone
www.vectonemobile.co.uk

மலர் 18 MARCH 2015 இதழ் 2


SNM PAWN BROKERS
அனைத்து தங்க நகைகளும் இங்கே அடகு பிடிக்கப்படும்.
MITHUS JEWELLERS
லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகைமாளிகை
நியாயமான விலை, உறுதியான வேலைப்பாடு
பழைய நகைகளுக்கு அதிக விலை அல்லது புதிய நகை
322 LONDON ROAD, CROYDONCRO 2TJ 020 8683 1756

# ஏமாற்றுவோர் இருக்கும்வரை..!

'அப்பா எங்கே?' என்று அரசிடம் கேட்ட மகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். 'கணவன் எங்கே?' என்று கேட்ட மனைவி அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

மகிந்தர் காலத்து ஒடுக்குமுறை மைத்திரி காலத்திலும் நீடிக்கிறது!

மைத்திரியின் 100 நாள் சனநாயக நாடகத்தில் 'விடுதலை' காட்சிகள் இல்லை.

ஐ.நா. அறிக்கையை ஒத்திவைத்ததுதான் நாடகத்தின் ஹைலைட் !

இருந்து பாருங்கள் நாடாளுமன்றத் தேர்தல் முடியும் வரை எதுவும் நடக்காது.

'மகிந்தன் வந்துவிடுவான்' என்று சொல்லியே எல்லாவற்றையும் சமாளித்து விடுவார் 'வித்துவான்' ரணில்.

'ஓமோம்... ரணில் ஐயா சொல்வது நியாயந்தான்' என்பார்கள் முழு மந்திரிக் கனவில் வாழும் தலைநகர்வாசிகள்.

இப்போது புதிதாக ஒரு பிரச்சினை. அதுதான் வடமாகாணசபையின் 'இன அழிப்பு' தீர்மானம்.

விக்கினேஸ்வரனின் வில்லங்கமான தீர்மானத்தால் பலர் ஆடிப்போயுள்ளார்கள். சுரேஷ் வரவேற்றாலும், மும்மூர்த்திகள் மூச்சுவிடவில்லை!

சிங்களத்தைப் பொறுத்தவரை, 'சீனாவுடன் கோபம்' என்பதுபோல் காட்டி பக்கத்து வீட்டோடு இருந்த வேலியைச் சரி செய்தாயிற்று.

வேலியில் பல கதவுகள் போடப்பட்டுள்ளன. அதில் ஒன்று அணுசக்திக் கதவு.

'உலை' வைக்காமல் ,செய்முறையை மட்டும் சொல்லித்தர தயார் என்கிறார் ந.தா.மோடி.

மீனவர் பிரச்சினைக்கு கூட்டு (பயிற்சி) ரோந்து செய்யலாமா? என்று மீண்டும் கேட்கிறது சிங்களம். எவன் கொழும்பில் ஆட்சிக்கு வந்தாலும், இந்தக் கோரிக்கை மட்டும் மாறாது. சிங்களத்தின் சனநாயக முகமாக இருந்தாலென்ன, எதேச்சாதிகார முகமாக இருந்தாலென்ன, ஊளையிடும்போது அது நரியென்று தெரிந்து விடும்.

அது நரியல்ல, சனநாயகத்தின் 'காவல் நாய்' என்று எம்மவரே விளக்கம் கொடுக்க ஆரம்பித்துவிடுவார்கள். ஆனால் நரியைப் பரியாக்கும் (குதிரை) கதை நிஜவாழ்வில் நடக்காது. எதையாவது பிடித்து நிமிர்வதைத்தவிர வேறுவழியில்லை என்று சொல்லி, விசப்பாம்புகளை பிடித்த கதையாகிவிடப் போகிறது நம்மவர் வாழ்க்கை.

சிங்களம் தெளிவாகத்தான் இருக்கிறது.

இந்த மாதம் இந்தியா, அடுத்த மாதம் சீனா, பிறகு அமெரிக்கா என்று ஒரே இராஜதந்திர ஊர்வலந்தான்.

மைத்திரி அரசிற்கு விழுந்து விழுந்து உபசரிக்கும் உலக மெகா அமெரிக்காவைப் பார்த்தால் பலருக்கு சந்தேகமும், சிலருக்கு ஆச்சரியமும் வரும்.

ஏதோ... இதற்குள் எமக்கும் ஏதாவது கிடைக்குமென்று நம்மவர் சிலருக்கு நப்பாசை வேறு. ஐ.நா. அறிக்கை ஒத்திப்போடப்பட்டபோதே நிலைமை என்னவென்று புரிந்திருக்க வேண்டும். மேலதிக சாட்சிகளைத் திரட்ட கால அவகாசம் கிடைத்திருக்கிறது என்கிறார் ஒரு அரசியல்வாதி.

ஒன்றுமட்டும் உண்மை. இக்காலத்தில், இருப்பதும் அழிக்கப்படலாம். ■

குடிவரவு விண்ணப்பங்கள் & மேன்முறையீடுகள்
Immigration Application and Appeals
- அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் Fresh Applications
- உங்கள் உறவினர்களை வரவழைக்கும் விண்ணப்பம்
- இலங்கை-இந்தியாவில் பிரித்தானிய விசா நிராகரிப்புக்கு எதிரான மேன்முறையீடு
- குழந்தைகள் 7 வருடம் தொடர்ச்சியாக வசித்திருப்பின் வதிவிட விசா விண்ணப்பம்
- பிரித்தானிய குடியுரிமை விண்ணப்பங்கள்– நிரந்தர குடியுரிமை விண்ணப்பங்கள்
- நாடு கடத்தலுக்கு எதிரான விண்ணப்பங்கள்
- ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருவோர், திருமணம் செய்வோருக்கான EEA விண்ணப்பங்கள்

Visitors & Dependent Visa – Human rights Claim – Immigration Detention Matters – Bail Applications
- Social Welfare Benefits – Visa Extension
- Entry Clearance Applications (Spouse -- Family Reunion Visitor -- Settlement -- Student – Prospective Student)
- Point based Applications : Tier 1 – Tier 5 (Student / Entrepreneur Visas)

மொழிபெயர்ப்பு சேவை தமிழ் - சிங்களம்
Kulendran Immigration Law Chambers, 90 High Street, Colliers Wood, SW19 2BT, 0208 682 4494 / 0208 542 8222 / 07769185592, email: kilc_work@yahoo.co.uk

CALL US 24x7 on 0207 132 32 32
Colombo பயணமா?
எங்குமில்லாத சிறப்பு சலுகை.
LycaFly
PLUS £20 FREE
LYCAMOBILE TOP-UP WHEN YOU BOOK WITH US


தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

# LONG-AWAITED NEW MALDEN BRANCH

# NOW OPEN !







**Sambal**
Express

**100, BURLINGTON ROAD, NEW MALDEN, KT3 4NT**
+44 (0) 20 8942 3622
newmalden@sambalexpress.couk

**EAST HAM**
+44 (0) 20 8472 3357

**BARKINGSIDE**
+44 (0) 20 8550 3778

**SOUTH HARROW**
+44 (0) 20 8423 5210

**SOUTHALL**
+44 (0) 20 8571 3637

**COLINDALE**
+44 (0) 20 8201 3098

**KITCHEN & DINER (RESTAURANT)**
+44 (0) 20 8422 5353

Another Venture of **RUBY'S**


Vectone
mobile Connect for less
3p/min
Call to
Sri Lanka
Mobile
When you buy UK Pocket Saver for only £10 you get:
• 500 UK Minutes
• 1000 MB Data
• Unlimited UK texts
• Unlimited calls and texts Vectone to Vectone
To buy UK Pocket Saver, dial *1001#
Get your Free SIM at www.vectonemobile.co.uk
or call 02071790134
Terms & conditions apply and may be varied. For more information please visit www.vectonemobile.co.uk

# புதினம்
PUTHINAM


லண்டன் தமிழர்களின்
அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு நிறுவனத்துக்காக 18 ஆண்டுகளாக வெளிவரும் இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான 25 பவுண்களை மட்டும் Puthinam என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

## வில்லிசை சக்கரவர்த்தி சின்னமணி மறைவு

வில்லிசை என்றால் ஈழத்தில் சின்னமணியின் பெயர்தான் நினைவுக்கு வரும். அச்சுவேலியை சொந்த இடமாகக் கொண்டு வாழ்ந்த வில்லிசைச் சக்கரவர்த்தி சமீபத்தில் தனது 79வயதில் காலமானார். கனடா போன்ற புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடுகளில் அவர் வில்லிசை நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருக்கின்றன. தாயகத்தில் செய்தியாளராகவும் அவர் நீண்டகாலம் செயல்பட்டிருக்கிறார். தாயகத்திற்குப் பெருமை சேர்த்த முத்துக்களில் ஒன்றான சின்னமணியின் ஆத்மசாந்திக்கு 'புதினம்' தலைசாய்த்து அஞ்சலியைத் தெரிவிக்கிறது.


அச்சகத் தொழில் செய்வோர்,
பத்திரிகை நடாத்துபவர்கள்,
புத்தகங்கள் வெளியிடுவோர்,
மாதாந்திர சஞ்சிகை
நடாத்துபவர்களுக்காக....

புத்தக வடிவமைப்பு, டி.டி.பி.,
திருமண அழைப்பிதழ்கள், சிறப்பு மலர்கள், உங்கள் வீட்டு விஷேச நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள் என சிறந்த வேலைகளை இந்தியாவிலிருந்து வழங்குகிறோம்

Call: 9551395516
www.satyanlayout.com



Looking for an
ACCOUNTANT ?
We are next to you!
We provide solutions for your Accountancy needs



உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார
ACCOUNTANCY
தேவைகளுக்கு
LONDON இல்
இயங்கும் தனித்துவமான ஸ்தாபனம்

Initial consultation is free
No fee for first three months

P & K
ASSOCIATES
CIMA
PRACTISING CERTIFICATE HOLDER

183, Burnt Oak Broadway,
Edgware. Middlesex.
HA8 5EH

020 8958 8883
079 1613 4976
(Mr.P. Navendran)

www.pandkgroup.co.uk
pandkassociates@aol.com






தேவை

லண்டன் வெம்பிளி நகரில்
உள்ள பிரபலமான
நகைக் கடையில் பணியாற்ற
மேலதிக ஊழியர்கள் தேவை
ஆங்கிலம், தமிழ் மொழிகளில்
உரையாடக் கூடியவர்களாக
இருக்க வேண்டும். ஆண், பெண்
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

அழையுங்கள் 07529425566



# விமலின் பக்கம்



சுமார் இரண்டு வாரங்களுக்கு முன் ஒரு நாள் இரவு பிரெஞ்சு தலைநகர் பாரீஸில், நிலத்தின்கீழ் சுரங்கப் பாதையில் ஓடிக்கொண்டிருந்த 'மெத்ரோ', சுரங்க ரயில் தரிப்பில் போய் நின்றது; எங்கும் எப்போதும் நடப்பதுபோல சுரங்க ரயில் நிலையத்தில் ரயிலுக்காகக் காத்திருந்தவர்கள் ரயிலில் ஏற ஆரம்பித்தார்கள்.

ரயில் கதவுகள் திறந்ததும், குறிப்பிட்ட ஒரு பெட்டியில் நின்ற பிரிட்டிஷ் இளைஞர்கள் சிலர், "செல்ஸீ–செல்ஸீ" என்று கைதட்டி, ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தார்கள். லண்டனின் செல்ஸீ உதைப்பந்தாட்டக் குழுவினர் பாரீஸில் நடாத்திய உதைப்பந்தாட்டப் போட்டியைப் பார்க்கப் போய்க் கொண்டிருந்த கும்பல் அது. அளவுமீறி பஞ்சாமிர்தம் - தீர்த்தம் ஆகியவற்றை இந்த வானரங்கள் அருந்தியிருக்கலாம் என்பதில் எவருக்குமே சந்தேகம் இருக்காது.

இந்தக் கும்பல் நின்ற பெட்டியில், கறுப்பு நிற பிரெஞ்சுப் பயணி ஒருவர் ஏற முற்பட்டார். அப்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது!

ரயிலுக்குள் இருந்த விஷமக் கும்பல், அந்தக் கறுப்பு இன பிரெஞ்சு மனிதரை ஏறவிடாமல் தடுத்து, வெளியே தள்ளிவிட்டது.

"நாங்கள் இன வெறியர்கள்தான்- நாங்கள் அப்படியே இருக்க விரும்புகிறோம்" என்று கூட்டமாகக் குரல் கொடுத்த அவர்கள், அந்த மனிதர் மீண்டும் ஏற முற்பட்டபோது, மீண்டும் அவரை வெளியே தள்ளிவிட்டார்கள்.

அதே ரயில் நிலையத்தில் இச்சம்பவத்தைப் பார்த்து திகைப்படைந்த ஒரு பிரிட்டிஷ்காரர் (இப்போது பாரீஸில் வாழ்ந்து வருபவர்) தமது கைத் தொலைபேசியில், இச்சம்பவத்தைப் படம்பிடித்து லண்டன் கார்டியன் பத்திரிகைக்கு அனுப்பிவைத்தார்.

மறுநாள் காலை, இலண்டனில பிரதமர் கமரன் அவர்களின் 10 டவுனிங் தெருவிலும், எல்லா ஊடகங்களிலும், இந்த இனவெறிச் சம்பவமே முக்கிய இடம்பெற்றது. பிரதமர் கமரன் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் பேசும்போது, "இது பிரெஞ்சுப் பொலீஸார் நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு விஷயம். ஆனால் பிரிட்டிஷ் பொலீஸ் சகல உதவிகளையும் புரிவார்கள்" என்று விளக்கினார்.

இனத்துவேஷ-இனவெறிச் சம்பவங்கள் கடுமையாகத் தண்டிக்கப்படும் பிரிட்டன் போன்ற ஐரோப்பிய நாடுகளில், இது ஒரு தனித்துவமான - தனியொரு சம்பவமாக எடுக்கப்பட்டு, மக்களால் மறக்கப்பட்டிருக்கும் - இரண்டு வாரங்களுக்கு முந்திய



டென்மார்க் கலவரங்களும், ஒரு மாதத்திற்கு முந்திய பிரெஞ்சு சார்ளி ஹெப்டோ தாக்குதல் சம்பவங்களும் நடந்திருக்காவிட்டால்...

இந்த இரு சம்பவங்களும், முன்னேற்றமடைந்த நாகரீக மேலைநாடுகளில் நடந்திருக்கின்றனவே என்ற அதிர்ச்சியும் அது ஏற்படுத்திய உணர்வலைகளும் அடங்க முன்னரே பிரெஞ்சு ரயில் தரிப்பில், பிரெஞ்சு மண்ணில், ஆங்கிலக் காடையர்களினால், கறுப்பு இன மனிதர் தாக்கப்பட்டிருக்கிறார்! இந்த வெள்ளை இனக் காடையர்கள், தாங்கள் இன்னமும் ஹிட்லரின் ஆட்சியின்கீழ் வாழ்வதாக நம்பியிருக்கிறார்கள்.

இந்தப் பாரீஸ் ரயில் நிலையத் தாக்குதல் நடத்தப்படுதற்கு சில தினங்களுக்குமுன், டென்மார்க் நாட்டின் தலைநகர் ஹொபன்ஹேகனில், 'கலைகள் -தெய்வ நிந்தனை-கருத்துச் சுதந்திரம்' என்ற தலைப்பில் மாநாடு ஒன்று ஏற்பாடாகியிருந்தது.

நபிகள் நாயகம் அவர்களின் உருவப் படத்தை, 2007ஆம் ஆண்டில் வரைந்து பிரசுரித்தவர் என்ற குற்றத்தின்கீழ் இஸ்லாமியவாதிகளால் தேடப்பட்டுவரும், லாஸ் வில்க்ஸ் என்ற சுவீடன் நாட்டு ஓவியக்கலை நிபுணர் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தார்.

சர்ச்சையைத் தேடி, வாங்கி தன்னுடன் வைத்துக்கொள்வது வில்க்ஸ் ஓவியருக்கு இனிப்புச் சாப்பிடுவது போல! 2007இல் முகமது நபியின் உருவப்படத்தை வரைந்தமைக்காக பல கொலை முயற்சிகள் இவர்மீதும், இவரது வீட்டினர் மீதும் எடுக்கப்பட்டுள்ளன. இதனால் சல்மான் ருஸ்டிக்கு வழங்கப்பட்டதுபோல, நிரந்தர பொலீஸ் பாதுகாப்பு இவருக்கு வழங்கப்பட்டு வருகிறது!

இவரைக் கொலை செய்ய முயற்சி செய்தமைக்காக, அமெரிக்கச் சிறையொன்றில் பெண் கைதி ஒருத்தி, பத்து ஆண்டுகாலம் சிறைத்தண்டனை பெற்று, அடைக்கப்பட்டு இருக்கிறாள். சுவீடன் நாட்டில் வில்க்ஸின் வீட்டை கொளுத்தி, எரிக்க முயற்சி செய்த இரு சகோதரர்கள், 2010இல் கைது செய்யப்பட்டார்கள்.



இப்படிச் சர்ச்சைக்குக் மேல் சர்ச்சைகளுடன், மரண அச்சுறுத்தல்களுடன் வாழும் வில்க்ஸ் டென்மார்க் ஹோபன்ஹேகனில் 'கலைகள் - தெய்வ நிந்தனை - கருத்துச் சுதந்திரம்' என்ற தலைப்பில் மாநாடு நடத்த அவரைத் தூண்டியது என்ன? சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர், பிரான்சின் பாரீஸ் நகரில், 'சார்ளி ஹெப்டோ' என்ற நையாண்டி சஞ்சிகையின் பணிமனைக்குள் புகுந்து, முஸ்லீம் தீவிரவாதிகள் இருவர் நடத்திய மின்னல் தாக்குதலே. பாரீஸ் நகரில் மூன்று நாட்கள் தொடர்ச்சியாக நடாத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களின் முடிவில் பதினேழு பேர் உயிரிழந்தார்கள்!

'சார்ளி ஹெப்டோ' பத்திரிகை மீது முஸ்லீம்கள் நடத்திய வன்முறைத் தாக்குதல், 'கருத்துச் சுதந்திரத்தின் மீதான தாக்குதல்' என்று வில்க்ஸ் கருதுகிறார். இதனாலேயே பல வாரங்களுக்குப் பிறகு டென்மார்க்கில் தமது மாநாட்டை ஒழுங்கு செய்தார். இந்த மாநாட்டின்மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். பொலீஸ்காரர் இருவருக்குக் காயம் பட்டது.



ஓவியர் வில்க்ஸை இலக்கு வைத்து நடாத்தப்பட்ட இத்தாக்குதலில், வில்க்ஸ் பாதுகாவலர்களால் 'பக்குவமாக அப்புறப்படுத்தப்பட்டார்.

கருத்துச் சுதந்திரம் (பேச்சுத் சுதந்திரம்), தெய்வ நிந்தனை, மதஉணர்வுகள் இவற்றுக்கிடையிலான பிரிவுக் கோடுகள் மிக மிக நுண்ணியமானவை. அந்தக் கோடுகளைத் தாண்டும்போது, பெரும் விபத்தே நடக்கிறது. மேலை நாடுகளில் மோட்டோவே அல்லது ஓட்டோபாண் எனப்படும் அதிவேக சாலைகள் போன்றவை இவை!

யாரும் வேகமாக ஓடலாம்; படுவேகமாக ஓடலாம். ஆனால் விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். தப்பித்தவறி மற்றவர்களின் ஒழுங்கைக்குள் நீங்கள் புகுந்துவிட்டால் விபத்து - மரணம்; இவை நிச்சயம்!



பாரீஸ் சுரங்க ரயிலில் பிரிட்டிஷ் வெள்ளை இனக் காடையர்கள், "நாங்கள் இன வெறியர்கள்தான் - அப்படி இருக்கத்தான் எங்களுக்குப் பிடிக்கிறது" என்று கூவியபடி, கறுப்பு இன பிரெஞ்சுக்காரர் ஒருவரை ரயிலை விட்டுத் தள்ளிவிட்ட சம்பவம், விசித்திரமான சம்பவம் என்று பலர் நினைக்கலாம். ஆனால் இது இன்றைய சமூகத்தின் பிரதிபலிப்பு. இந்த நெருப்புக்குத் தூபம் போடுபவை: மீடியாக்கள் எனப்படும் ஊடகங்கள்!

எங்கள் தாய்நாட்டைப் பாருங்கள். சிங்கப்பூரின் லீகுவான் யூவே 1950களில் பார்த்துப் பிரமித்த நாடு! லீகுவான் யூவின் கண் திருஷ்டி மிக மோசமானது. அவர் பாராட்டிய சில வருடங்களில், 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டு ஈழத் தமிழினத்துக்குச் சாவுமணி அடிக்கப்பட்டது. 1958இல் முதலாவது ரத்தக்களரி! 2009இல் முள்ளிவாய்க்கால் பேரழிவு. இப்படித் தொடர்ந்து கொண்டே செல்கிறது, தமிழர்களின் அவலம்!

யூத நாடான இஸ்ரேலும், பாலஸ்தினர்களும் சேரக் கூடும்; தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் இணையக்கூடும்; ரஷ்ய புட்டினும், அமெரிக்க அரசும் நண்பர்களாகக் கூடும்; ஆனால் -

ஈழ மண்ணில் தமிழர்கள் இழந்துவிட்ட உரிமைகளை மீளப் பெற்று, தலைநிமிர்ந்து முன்னைய நாட்களைப்போல வாழும் நாட்கள் வருமா?

முறையான ஊடகப் பயிற்சி இல்லாமல் விஷம் கக்கும் பொறுப்பற்ற பத்திரிகையாளர்கள் இலங்கையில் இருக்கும்வரை, பிக்குகள் எனப்படுவோர் புத்த ஆலய சேவையில் மட்டும் இருந்துகொண்டு அரசியலில் இருந்து வெளியேறும்வரை, சிங்களவர்களும் தமிழர்களும் ஒன்றாக முன்னர்போல் சந்தோஷமாக வாழ்வது, நடக்க முடியாத விஷயம் என்பது எனது தனிப்பட்ட கருத்து. ●

தமிழகத்திலிருந்து ஜெகாதா

# ஈழக் கனவை யாரும் வீழ்த்த முடியாது!




ஒரு பிணம் விழுந்தால் ஊரே அழும். ஊரே பிணமாகி விழுந்தது. அழுவதற்கே ஆளில்லாத சபிக்கப்பட்ட மௌன பூமியானது முள்ளிவாய்க்கால்!

'ஓயாது அழுது கொண்டிருப்பவன்' என இராவணனுக்கு புராணம் அர்த்தம் புகல்கிறது. அத்தனை வலியும் தீர்ந்து போனதால் அழுகை ஓய்ந்து போனதா இராவண பூமியில்?

தமிழ்நாடு என்னும் கண்ணியை இந்திச் சங்கிலி அறுத்துக் கைகழுவிவிட முடிவு செய்துவிட்டது. கட்சிகள் எல்லாம் லாப நட்டக் கணக்கில் இலங்கைத் தமிழனை காலனுக்குப் பலி கொடுத்துவிட்டன.

அவிழ்த்துக் கொட்டிய நெல்லிக்காய் மூட்டையாக அனைத்துக் கட்சிகளின் ஒருங்கிணைக்கப்படாத போராட்டங்கள் அனைத்தும் தெருவோரம் சிதறியோடி வாய்க்காலில் விரயமாகிப் போனது.



உலகளாவிப் பரந்த தமிழனுக்கு எல்லைக்கோடு என்றும் இல்லை. காஷ்மீரி அடிபட்டால் தமிழன் துடிதுடிப்பான். மும்பையில் குண்டு வெடித்தால் நெஞ்சம் சிதறும் தமிழனுக்கு. சீக்கியனுக்கு அவமானமென்றால் சீக்கிரம் கண் சிவப்பான் தமிழன். 'ஆசேது ஹிமாசலம்' என்று ஒருமைப்பாட்டை ஓயாத வாயும், உறங்காத நினைவுமாய் உச்சரிக்கும் தமிழன் பிணமானால் மட்டும் இந்திய மாநிலங்கள் ஏன் திசைக்கொன்றாக தலை திருப்பிக்கொள்கின்றன?

ஈழப் பிரச்சினையை தமிழகம் தாண்டி தேசிய பிரச்சினையாகக் கொண்டுசெல்ல முடியாததற்கு யார் காரணம்? 'தமிழன் இறப்பு' என்ற சொல்லுக்கு மட்டும் இந்திய அரசின் அகராதியில் ஏன் வெற்றிடம் விடப்பட்டுள்ளது?

வீட்டைக் காலி செய்து கொடுப்பதைப்போல ஈழத்தை சிங்களர் காலி செய்து கொடுக்க வேண்டும். இனி உறவுகள் சாத்தியமில்லை.

தனி ஈழம் உருவாக உலக நாடுகள் ஒன்றுகூடி இலங்கையில் முகாமிட்டால்தான் முடியும். போர்க் குற்றம் என்ற ஒரு வார்த்தை சொல்லவே புறமுதுகிட்டு ஓடும் நாடுகள் தனி ஈழம் பற்றி தனி அக்கறை கொள்வது உடனடிச் சாத்தியமா?

யார் இதனை முன்னெடுத்துச் செல்வது என வரும்போது உலக நாடுகள் இந்தியாவை முதலில் உற்று நோக்கி எதிர்பார்ப்பது இயற்கைதானே!

இந்திய அரசின் நிலைமை இரண்டுங்கெட்டான் நிலைமை. இலங்கையில் நீண்ட கால கட்டுமான உதவி, கடன் முதலீடு, வர்த்தகம் என இந்துமகா சமுத்திரம் மீது மிகப் பெரிய வலையை விரித்துப் போட்டிருக்கிறது. வலையும் இந்தியா; வலை மீனும் இந்தியா, வேடிக்கையான வேட்டையில் விழி பிதுங்கிக் கிடக்கிறது இந்தியா!



வேறு வழியில்லை.

ஈழப்போர் இடம் மாறி மூன்றாம் உலகப் போராக உருமாறும். ஈழக்கனவு இலங்கையின் வீழ்ச்சிக்கு கட்டியங்கூறும் எழுச்சி பெறும்.

ஈழத் தமிழர்களின் ஆஸ்தியெல்லாம் அஸ்தியாகிப்போன பாவ பூமி நோக்கி உலக நாடுகளின் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் புலம்பெயர்ந்த மற்றும் அகதித் தமிழர்கள் தமிழ் ஈழக் கனவில் திரும்பி வரவேண்டிய கட்டாய நிலை உள்ளது.

தமிழர் பகுதி முழுவதும் சிங்கள ராணுவம், நிரந்தர அச்சம். மீள் குடியிருப்பு நடக்கவே இல்லை. கல்வி இல்லை. வேலை வாய்ப்பு இல்லை. புலிகள் சிறை விடுவிப்பு இல்லை. நல்வாழ்வுத் திட்டம் இல்லை. உளவியல் சோர்வு, தொலைந்தவர்கள் பட்டியல் தொடர்கிறது. உலக நாடுகள் உதவி சிங்களர்களுக்கு உதவுகிறது.

ஈழக் கனவை முள்ளிவாய்க்காலும், கொடூரர்களின் ரசாயன வெடிகுண்டுகளும் முற்றிலும் பொசுக்கிவிட முடியாது.

இந்தியாவின் தலைமையில் அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளின் ஆதரவுடன் அதிரடி வைத்தியம் இலங்கைக்கு இன்றைய உடனடித் தேவையாக உள்ளது.

பொருளாதார வர்த்தகத் தடை இலங்கையைச் சுற்றிலும் கண்ணி வெடிபோல விதைக்கப்பட வேண்டும்.

விண்ணிலும் மண்ணிலும் நீரிலும் ராணுவ மிரட்டல் - அனைத்து உதவிகளையும் நிறுத்தி வைத்தல் - கொடுத்த கடனை கந்து வட்டியுடன் வசூலிக்கும் இறுக்கமான நடவடிக்கை மேற்கொள்ளல் - கட்டுமான பணிகளை கைவிடுதல் - தூதரகங்கள் அனைத்தையும் வாபஸ் பெறுதல் - இலங்கையைத் தனிமைப்படுத்துதல்



- இலங்கையின் சர்வதேச விளையாட்டு கலாச்சார உறவுகளைத் துண்டித்தல் - இலங்கைக்கு விமான போக்குவரத்தை துண்டித்தல் - ஒன்றன்பின் ஒன்றாக இவையனைத்தையும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தியா தலைமைப் பொறுப்பேற்று உலக நாடுகளிடையே ஒருமித்த கருத்தை உருவாக்க முனைந்தால் இவையனைத்தும் நிச்சயம் சாத்தியம்!

ஈழக் கனவை யாரும் வீழ்த்த முடியாது. ஆனால், வீழ்த்த நினைப்பவர்களை ஈழக் கனவு எழுச்சி பெறும்போது நிச்சயம் வீழ்த்தும்! ●





# இன அழிப்புக்கு சர்வதேச விசாரணை

## விக்னேஸ்வரனின் அக்னிப்பிரவேசம்!



சிவாஜிலிங்கத்தால் முன்மொழியப்பட்டு, செங்கோல் உடைப்போடு சில மாதங்களாக கிடப்பில் போடப்பட்ட தீர்மானமொன்று முதல்வர் விக்கினேஸ்வரன் அவர்களால் வடமாகாண சபையில் முன்வைக்கப்பட்டுள்ளது. பொருத்தமான தருணத்தில் நிறைவேற்றப்பட்ட சரியான தீர்மானம் 60 வருட கால தமிழின் அழிப்பினை சுருக்கமாகவும், தெளிவாகவும், அதுவும் ஐ.நா.வின் இனப்படுகொலை குறித்தான சாசனத்திலுள்ள பிரிவுகளை வைத்து விளக்கியுள்ளார் முதலமைச்சர். ஆட்சி மாற்றத்தின் முதலாம் அத்தியாயம் முடிந்த கையோடு தமிழ் மக்களின் பிரச்சினையை மூடி மறைக்க ஒரு அனைத்துலக வலைப்பின்னல் உருவாக்கப்பட்டது.

இனிவரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலோடு அதாவது ஆட்சி மாற்றத்தின் இரண்டாம் அத்தியாயத்தோடு ஒட்டுமொத்தமாக அவை மறைக்கப்படவிருந்த வேளையில், வடமாகாண சபையில் இன அழிப்பிற்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்கிற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதாவது அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வாலின் வருகை, பூகோள அரசியலின் சுயநலமிக்க பக்கங்களை முதல்வர் விக்கினேஸ்வரன் அவர்களுக்கு காட்டியுள்ளது போல தென்படுகிறது. அதுமட்டுமல்லாது, இரணிலின் ஆதரவு பெற்ற பிரதிப்பாதுகாப்பு அமைச்ச உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து இராணுவம் வெளியேறாது என்று தெரிவித்த 'பழைய குருடி கதவைத் திறவடி' கதையும் முதல்வரை விசனத்திற்குள்ளாக்கி இருக்க வேண்டும். இத்தீர்மானமானது தமிழினத்தின் சார்பாக சர்வதேசத்திற்கு ஒரு முக்கிய வேண்டுகோளை விடுக்கின்றது. அதாவது மார்ச் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் எல்லோராலும் எதிர்பார்க்கப்படும் 'அந்த' அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்தோடு சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். ஐ.நா. சபையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படாமல் செப்டம்பருக்கு ஒத்திவைக்கப்பட்டால், வடமாகாண சபை இன்னுமொரு தீர்மானத்தை நிறைவேற்றுமா அல்லது மாவை சேனாதிராஜா சென்ற வருடம் கூறியது போன்று மக்களை அணிதிரட்டி ஆக்கிரமிப்பிற்கு எதிராக போராட்டங்களை நிகழ்த்துமா?

தமிழக சட்டசபைபோல அடுக்கடுக்காக தீர்மானங்களை நிறைவேற்றலாம். ஆனால் அதனை செவிமடுக்க பிராந்திய - மேற்குலக வல்லரசுகள் விரும்பாதபோது, மாற்றுவழி குறித்து சிந்திப்பதே பொருத்தமானது. இருப்பினும் இக்கோரிக்கையை ஆட்சி மாற்றத்தை விரும்பிய அமெரிக்கா எவ்வாறு உள்வாங்கிக் கொள்ளும் என்பதை முதல்வர் சி.வி. விக்கினேஸ்வரன் நிஷா பிஸ்வாலுடன் பேசும்போது புரிந்து கொண்டிருப்பார். அவர்களுக்கிடையே நிகழ்ந்த உரையாடலை, அரசியல் நாகரீகம் கருதி முழுமையான வெளிப்படுத்த முதல்வர் விரும்பாவிட்டாலும். இக்காட்டமான தீர்மானம் பல செய்திகளை எமக்கு உணர்த்துகிறது. இத்தீர்மானமானது. ஆட்சி மாற்றத்திற்கு முன்பாக ஏன் கொண்டுவரப்படவில்ல என்கிற கேள்வி, மாற்றுச் சிந்தனையாளரிடம் உண்டு. அதற்கான பதிலைத் தேடினால், பூகோள அரசியலின் மூலோபாயங்களை தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படலாம்.

சுதந்திரம் பெற்ற (?) காலம் தொட்டு பெருந்தேசிய இனவாத அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்படும் இனவழிப்பு குறித்து படுகொலை செய்யப்பட்ட ரவிராஜ், தராகி சிவராம் போன்றோர் சிங்கள சகோதரர் - சகோதரிகளிடம் எடுத்து விளக்கியுள்ளனர். அதன் தொடர் முயற்சியாக முதல்வர் விக்கினேஸ்வரன் அவர்களின் இத் தீர்மானத்தையும் பார்க்கலாம். ஆனால் இத்தீர்மானம் பிராந்திய நலனை முதன்மைப்படுத்தும் வல்லரசாளர்களின் ஆட்சி மாற்ற நிகழ்ச்சி நிரலுக்கு சவாலாக இருப்பது போல் தெரிகிறது. அதாவது நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த குழுவின் வாக்குப்பலத்தினை இதுபோன்ற தீர்மானங்கள் அதிகரித்துவிடலாம் என்கிற அச்சம் அமெரிக்காவிற்கு ஏற்படும் அதேவேளை ஐ.நா. மனித உரிமைப்பேரவையின் சிறப்பு போர்க்குற்ற விசாரணை அறிக்கை மார்ச் மாத ஜெனிவா கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், வடமாகாணசபையில்





கொண்டுவரப்பட்ட 'இன அழிப்பு' தீர்மானம், இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் புதிய இராஜதந்திரச் சிக்கல்களைத் தோற்றுவிக்குமெனக் கருதப்படுகிறது.

இலங்கையில் ஆட்சிமாற்றம் முழுமைபெறும்வரை, மைத்திரி, இரணில் அணிக்குப் பிரச்சினைகளை உருவாக்கும் வகையில், தமிழர் தரப்பிலிருந்து கோரிக்கைகள் என்கிற பெயரில் நெருக்கடிகள் வருவதை நிஷா தேசாய் விரும்பவில்லை என்பதனை, தமிழ் தலைமை வெளியில் சொல்லாமல் தவிர்க்க முயற்சிக்கிறது என்பது நிஜம். ஆனால் தமிழகத்திற்குச் சென்றபோது பல விமர்சனத்திற்குரிய அரசியல் கருத்துக்களைத் தெரிவித்த விக்கினேஸ்வரன் அவர்களின் இப்போதைய நிலைமாற்றம், பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. மந்திரிசபைப் பேச்சாளர் ராஜித சேனாரெட்னாவும், இந்தியப்பெரு ஊடகங்களும் இத்தீர்மானத்தினை கடுமையாக விமர்சித்திருக்கின்றன.

நல்லிணக்க முயற்சியில் மைத்திரி அரசு ஈடுபடும்போது, தாழி உடைந்த கதையாகிவிட்டது. வடக்கின் தீர்மானம் என்று 'தி ஹிந்து' அழுது வடிகிறது. 'அவர் சொன்னார்', 'இவர் சொன்னார்' என்று, தமது கருத்தினை வாழைப்பழத்தில் ஏற்றும் ஊசி வித்தை ஹிந்துவிற்கு நன்றாகத் தெரியும்.



மகிந்தருக்கு முன்னால் சத்தியப் பிரமாணம் செய்த, இப்போதுதான் ஜனநாயக் காற்றினை தமிழ் மக்கள் சுவாசிக்கின்றார்கள் என்று கூறிய, மாகாணசபை ஊடாக மக்களின் இயல்பு வாழ்வினை மீட்டெடுப்போம் என்ற முதல்வர் விக்கினேஸ்வரன் அவர்கள், ஆட்சிமாற்றத்தின் முக்கிய காலகட்டத்தில் பெர்லின் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் (PermanentPeoplesTribunal) போன்று ஒரு அறிக்கையைத் தீர்மானமாக, அதுவும் மக்களால் ஜனநாயக முறைப்படி தெரிவுசெய்யப்பட்ட அவையில் முன்வைப்பார் என்று இந்திய தென் வளாகமும், அமெரிக்காவின் இராஜாங்கத்திணைக்களமும் எதிர்பார்த்திருக்காது. வாக்களித்த மக்கள் சொந்த இடத்திற்கு திரும்ப முடியாமல் இராணுவம் தடுக்கும்போது, எவ்வாறு மாகாணசபையை நடாத்தமுடியும்? அதிகாரத்தை தந்த மக்கள் அகதிகளாக வாழும்போது, இந்தப் பதவிகளை வைத்து என்ன செய்ய முடியும்? ஆகவே இத்தீர்மானத்தை, பெரும்பான்மை இன மக்களிடம் வரலாற்றுபூர்வ ஆதாரங்களுடன் முன்வைப்பதைத் தவிர வேறு வழி இல்லையென்கிற முடிவிற்கு முதல்வர் வந்திருக்கிறார்.

ஈழத் தமிழின வரலாற்றின் இருண்ட அரசியல் பக்கங்களைசட்டபூர்வசான்றுகளோடும், ஐ.நா.நிபுணர் குழு மற்றும் அறிவார்ந்த உலகப் பெருமக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் அறிக்கைகளோடும், யாஸ்மின் சூக்காவின் பிரத்தியேக பார்வையையும் தாங்கிவந்துள்ள இத்தீர்மானமானது, கட்டமைக்கப்பட்ட இனவழிப்பின் (Structural genocide) முக்கிய பகுதியான நில ஆக்கிரமிப்பின் வரலாற்றினை முன்வைத்திருந்தால், இன்னும் கனதியாக இருந்திருக்கும். இறைமையுள்ள ஓர் பூர்வீக தேசிய இனத்தினை ஐ.நா.வால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசொன்று படுகொலை செய்யும்போது, அதனை மனித உரிமை மீறல், மானுடத்திற்கு எதிரான குற்றம் என்று விளக்கம் கொடுக்கும் வல்லரசுகள், அத்தேசிய இனத்தின் வாழ்விடங்களை வேறொரு இனம் அடாத்தாகக் கையகப்படுத்துதலை எந்த வரையறைக்குள் வைத்துப் பார்க்கும்?

எமது பிரச்சினைகளை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்கிற முதல்வரின் நோக்கம் முற்போக்கானது, பேரினவாதத்தின் பிரமாண்டமான ஊடகங்களை ஊடறுத்து, எவ்வாறு சிங்கள மக்களிடம் இச்செய்தியைக் கொண்டு செல்ல முடியும் என்பது குறித்தும் சிந்திக்க வேண்டும். இதனை முன்வைத்து சிங்கள மக்கள் மத்தியில் ஓர் ஆழமான விவாதத்தினை ஏற்படுத்த முயன்றால், 'நமட்டுச் சிரிப்புச் சிரித்த' இரணில் விக்கிரமசிங்காவும், சிந்தனைத்தடைபோடும் 'வீட்டோ' அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் மாநாயக்க தேரர்களும் இதனை அனுமதிப்பார்களா? மும்மொழி பேசும் ரவிராஜ் போன்றவர்களின் இருப்பினையே அனுமதிக்காத பெருந்தேசிய இன அதிகாரவாசிகள், அந்த இனவாதச் சுவரினை பெர்லின் சுவர் போல் இலகுவில் உடைக்கவிடுவார்களா?

இதனை இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர் அமைப்பு (JDS) சிங்களத்தில் மொழியாக்கம் செய்து வெளியிட்டுள்ளார்கள் என்பதைத் தவிர வேறு தளங்களில் இம்முயற்சி நடைபெறுகிறதா என்று தெரியவில்லை.

'அழிப்பிற்கு மகிந்த இராஜபக்ச - அழித்தவர்களைக் காப்பதற்கு மைத்திரி' என்ற சுழலும் பேரினவாத அதிகார அச்சு, தனது இயக்கத்தையும், இயங்குதளத்தையும் மாற்றப்போவதில்லை என்பதனை முதல்வரின் தீர்மானம் மிகப் பூடகமாக வெளிப்படுத்தியுள்ளது. ஆனால் தீர்மானத்தை நிறைவேற்றிய மாகாணசபை, அடுத்து என்ன செய்யப் போகிறது? அடுத்ததாக, கட்டமைக்கப்பட்ட இனவழிப்பில் மிக மோசமாக பாதிப்புற்று கிழக்கில் இருக்கும் மாகாணசபையில், இதே போன்றதொரு இன அழிப்பிற்கு நீதி கோரும் சுயாதீன சர்வதேச விசாரணைக்கான தீர்மானத்தினை' தமிழ் தேசியக் கூட்டமைப்பு கொண்டுவருமா?

ஏனெனில் இது வடக்கின் பிரச்சினை மட்டுமல்ல, வட - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தின் பொதுப் பிரச்சினை. ●

# ஈழத் தமிழருக்கு எதிராக இலங்கை - இந்தியா மற்றுமொரு கூட்டுச்சதி!

இனவெறிகொண்ட இலங்கை மகிந்த அரசின் தமிழினப் படுகொலைக்கு, மதுரையை எரித்த கண்ணகிமாதிரி தலைவிரிகோலம் கொண்டு நீதி கேட்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்தின் மனச்சாட்சியைத் தட்டிவிடப் புறப்பட்ட உலகத் தமிழ் மக்கள் மீண்டுமொரு தடவை இந்திய அரசினால் நம்பிக்கை தகர்க்கப்பட்ட நிலையில், படுகொலையுண்ட ஒன்றரை லட்சம் ஈழத்தமிழரின் உயிர்ப்பலி இந்திய அரசினால் முக்காடுபோட்டு மூடப்பட்டிருக்கிறது! விசாரணை அறிக்கையை, இலங்கை கோரியபடி ஆறு மாத காலத்துக்கு மூடிமறைத்து திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதித்ததன் மூலம், இந்தியா உலகத் தமிழர்களுக்கு பச்சைத் துரோகம் இழைத்துவிட்டது! இதன் மூலம் 2009-ல் சோனியா காந்தியின் காங்கிரஸ் அரசு செய்துவிட்ட துரோகத்தை, இனப்படுகொலையை நிறைவேற்றிய இலங்கை மேற்கொண்ட தமிழின அழிப்பை நரேந்திர மோடி அரசும் மனசுபூர்வமாக இன்று அங்கீகரித்திருக்கிறது!



இம்மாதம் வெளியிடப்பட்டு, சிங்களம் நாதியற்று நடுக்கடலில் உயிர்ப்பிச்சைக்கு தவிக்கும் நிலை ஏற்படும் அவலம் களையப்பட, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் இலங்கை மீதான விசாரணை அறிக்கை, புண்ணிய பாரதத்தின் பிரதமர் நரேந்திர மோடி அரசின் தலையீட்டில், பூரண ஆசியுடன் ஆறுமாத காலத்துக்கு வெளியிடாமல் ஒளித்துவைத்து, மகிந்த உள்ளிட்ட குற்றவாளிகளை 'உள்ளக விசாரணை' எனும் கண்துடைப்பு மூலம் காப்பாற்ற கடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது!

இந்துப் பச்சைத்துரோகத்தை அரங்கேற்ற, ஒத்திவைக்கப்படும் ஆறு மாத காலத்தை பல்வேறு வழிகளில் பயன்படுத்தி இலங்கையை அல்ல; மகிந்த கோஷ்டியை, மகிந்த அரசில் அன்று பலன் அனுபவித்தவர்களை பாதுகாக்கும் துரோகப் பணியில் சர்வதேசத்துடன் இறங்க இலங்கையின் சிறிசேன அரசு முழுவீச்சில் இறங்கியிருப்பதுடன், பிள்ளையார் பிடிக்க மாருதி ஆனது மாதிரி கூட்டுச் சர்வதேச சதியில் இறங்கியிருப்பதுடன், இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீராவை முதலில் இந்தியாவுக்கு அனுப்பி அங்கீகாரம் பெற்று, அமெரிக்கா சென்று வெளியுறவு அமைச்சர் ஜோன் கெளரியைச் சந்தித்து ஆசி பெற்று, இந்தியா சம்மதித்துவிட்டதை விலாவாரியாக, ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூனிடமும் வெளிப்படுத்தி, அடுத்த சில நாட்களில் இந்தியப் பிரதமர் மோடியையும் தடபுடலாக வரவேற்க இலங்கை செங்கம்பள போர்வையைத் தயார் செய்துவிட்டது!



இலங்கை மீது சர்வதேச விசாரணை நடைபெறுவதை எதிர்க்கும் இலங்கை அரசுக்கு எந்த நிலையிலும் இடமளிக்கக் கூடாது எனும் அடிப்படையில் தமிழ்நாட்டின் அத்தனை அரசியல் கட்சிகளும் போர்க்கோலம் பூண்ட நிலையில் தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்கு சமம் என்பதற்கிணங்க, இரத்தக்கறைபடிந்த அத்தனை கரங்களையும் இழுத்துவைத்து அறுக்க உலகத் தமிழினம் துடிக்கும் நிலையில், இந்தியா வெளிப்படையாக ஈழத் தமிழர் எதிர்ப்பு நிலை எடுத்திருப்பது, உலகத் தமிழர்களை கொந்தளிக்க வைத்திருக்கிறது! தங்களைப் புனிதர்களாக பிரகடனப்படுத்தும் முயற்சியில் இந்தியாவுடன் கூட்டுச்சதியில் இறங்கியிருக்கும் இலங்கையின் கோர முகம் மீண்டும் உலகின் பார்வைக்கு வந்துவிட்டதோ எனும் பய நிலையில்தான், "தமிழக மீனவர்களையும், சின்னாபின்னமான அவர்களது படகுகளையும் விடுவிக்கின்றோம்... உலகம்வாழ் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் சுதந்திரக் காற்றை அனுபவிக்க இலங்கை திரும்புங்கள்... அங்கு எல்லாம் உண்டு..." என்று அழைப்பு விடுகிறது கோர சிங்கப்பல் கொண்ட இலங்கை! இதைத் திமிர் என்று சொல்வதைவிட வேறு வார்த்தை என்ன இருக்கிறது? வெந்த புண்ணில் வேல் பாய்ச்ச விரைந்து வாருங்கள் என்றால் பொருந்தும்!

இனப்படுகொலையை சோனியா காந்தியின் காங்கிரஸ் அரசுதான் நடத்தியது என்றால், இதற்கு நீதி கிடைக்க, ஐ.நா. விசாரணை அறிக்கையை குழி தோண்டிப்புதைக்க மோடி அரசு இன்று முனைப்போடு செயல்படுகிறது. இதற்கு ஐ.நா.வும் ஆதரவென்றால், நீதி எங்கு கிடைக்கும்?

தமிழினப் படுகொலையிலிருந்து இலங்கையைக் காப்பாற்ற, மகிந்த கோஷ்டியின் இரத்தக்கறையை சிவப்புத்துணியால் மூடிமறைக்க இந்தியா எத்தனை வேஷம் போட்டாலும், தாயகத் தமிழ்நாடு சேய்கள் காப்பாற்றப்போவதில்லை. உலக அரங்கில் ஆழமாகப் பதிவாகிவிட்ட ஈழத் தமிழர் இனப்படுகொலைக்கான உலக நீதி, எமது வாசல்வரை வந்துவிட்டது. சர்வதேச விசாரணை நடக்கத்தான் போகிறது. சதிகாரர்களும், குற்றவாளிகளும் முகவரி இழக்கத்தான் போகின்றார்கள். இதனைத் தடுக்க எந்த சிங்கள கூட்டுச்சதியாலும் முடியாது. ஏனென்றால் தீர்ப்பு எழுதப்பட்டுவிட்டது. உலகம் விழித்துவிட்டது!

# லண்டனில் நீதிக்கான போராட்டம்

பெப்ரவரி 24ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியிலிருந்து 6.00மணிவரை 24,Grosvenor Square, WIA 2LQ என்னும் இடத்திலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்னால் நீதிக்கான போராட்டம் நடாத்தப்பட்டுள்ளது.


சிறீலங்கா அரசு தமிழ் இனத்தைக் கருவறுப்பதைக் கண்டித்தும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் தமிழின அழிப்புக்கான சர்வதேச சுயாதீன விசாரணையை உடனடியாக நடத்தக் கோரியும் இலண்டனில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் முன்னால் இந்த எதிர்ப்புப் போராட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

மாலை 4 மணிக்கு முன்னரே மக்கள் பெருமளவில் அமெரிக்க தூதரகத்தின் முன்னால் ஒன்றுகூடினர். கைகளில் பதாகைகளையும் தமிழீழத் தேசியக்கொடிகளையும் பிடித்தவாறே கொட்டொலிகளை எழுப்பினர். "We reject Srilanka 's LLRC , Time and space for Srilanka kills tamil nation , Not just war crimes, it's planned genocide" போன்ற பல கொட்டொலிகளை அங்கு திரண்டிருந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் எழுப்பினர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சிறீலங்கா மீதான போர்க்குற்ற விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பதை மேலும் ஆறு மாதங்கள் ஒத்திவைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, உலகெங்கும் குறிப்பாகத் தமிழீழ மண்ணிலும் இன்றைய நாளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சிறீலங்கா அரச பயங்கரவாத அடக்குமுறை ஆட்சியில், திறந்தவெளிச் சிறைச்சாலைக்குள் வதைபடும் தமிழீழ மக்கள் தன்னெழுச்சியாகத் துணிவோடு போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். தமிழீழத்திலும் தமிழகத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் ஒரே காலப்பகுதியில்







போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைச் சேர்ந்த சுமந்திரன் புலம்பெயர் தமிழர்களைப் பற்றியும் அவர்களின் விடுதலை போராட்ட முன்னெடுப்புகள் பற்றியும் இழிவாகக் கூறியுள்ளமையானது புகலிடத் தமிழர்கள் மத்தியிலும் புலத்துத் தமிழர்கள் மத்தியிலும் கடுங்கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் வெளிப்பாடாக சுமந்திரனின் கொடும்பாவியை யாழ்ப்பணத்தில் தீயிட்டுக் கொளுத்தியும் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரின் உருவப்படங்களை லண்டனில் இன்றைய போராட்டத்தின்போதும் தீயிட்டுக் கொளுத்தியும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

இப்போராட்டத்தின்போது பிரித்தானியத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் திரு.கந்தையா ராஜமனோகரன் அவர்களும் தமிழ் இளையோரமைப்பைச் சேர்ந்த சஞ்சய் அவர்களும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு செயற்பாட்டாளர் திரு.நியூட்டன் அவர்களும் உரையாற்றினர். அத்துடன் நீதிக்கான போராட்டத்தின் கோரிக்கைகளை உள்ளடக்கிய மனுவும் அமெரிக்கத் தூதரகத்தில் கையளிக்கப்பட்டது. மாலை 6 மணியளவில் நீதிக்கான கவனயீர்ப்புப் போராட்டம் நிறைவு பெற்றது.

Since 1999

FAST CASH
SEND TODAY - COLLECT TODAY

The Most Trusted Name in Money Transfer to
# Sri Lanka
New Branch @ 48 Mitcham Road, Tooting SW17 9NA

## Central Bank Approved Money Transfers from the UK

Collect your money immediately at any Commercial Bank or have your funds credited swiftly to any bank account

Open 7 Days

OUR PROMISE
Your Money is Sent from the UK and not Credited Locally by Unknown Sources.
Official Transfers

SEND FASTCASH FROM 28 BRANCHES



Credit our account online with & call us for immediate transfer BARCLAYS
A/C Name : C.E.C. LTD // A/C No : 70713945 // Sort : 20-36-47


**0208 886 4488**
www.cecltd.com

FCA Fastcash is a FCA & HM Customs and Excise / registered business.
MSB 12112819 / FCA -PI 540536.

HNB NSB SEYLAN NDB bank HSBC



## QUALITY 1,2 & 3 BED APARTMENTS
for Rent in
## Mt.Lavinia
Sea Side - Close to St. Thomas & Mt.Lavinia Hotel



Prices From £25 Per Day *

- Fully Furnished with AC & Lift
- 3 min to Galle Rd, 5 Min to Beach

Contact : Mike on 07733 261 999
Visit our website
www.stayatmount.com



# BEST DEALS TO SRI LANKA
Do not book your air ticket with any other travel agent until you speak to us!



SriLankan
£475
Including Taxes
from London Heathrow

LIMITED OFFER!
Book Before
07th MARCH

Baggage 40kg + 7kg First Change Free of Charge
Outbound Travel : 01st March to 22nd March 2015
02 Months valid Ticket. Subject to Availability*

| OMAN AIR | KUWAIT AIRWAYS | ETIHAD | Emirates | QATAR AIRWAYS |
|---|---|---|---|---|
| from £448 incl. taxes | from £465 incl. taxes | from £470 incl. taxes | from £510 incl. taxes | from £485 incl. taxes |
| 1st Change Free<br>40kg Baggage + 7kg H. Carry | 40kg Baggage + 7kg H. Carry | 30kg Baggage + 7kg H. Carry | 30kg Baggage + 7kg H. Carry | 1st Change Free<br>40kg Baggage + 7kg H. Carry |

All fares are valid on off-peak season, Subject to availability. Terms and conditions apply.

130 High Street, Barnet, EN5 5XQ | www.holidayair.com
IATA **0208 440 0770**
HolidayAir
A Travel Experience to Remember

# ஒரு தேவதூதனின் நிழல்




1

அவளுக்குப் பின்னர் அந்த இராணுவ அவுட்போஸ்ட்டுக்குக் கொண்டு வரப்பட்ட பலர் விசாரணை முடிந்து வெளியே போய்விட்ட போதிலும், தன்னை ஏதும் விசாரிக்காமல் வைத்திருப்பதன் காரணம் அவளுக்குப் புரியவில்லை.

"நான் எந்தவிதமான குற்றமும் செய்யவில்லையே; என்னை ஏன் விசாரணை ஏதும் இல்லாமல் தடுத்து வைத்திருக்கிறீர்கள்?" என்று அவள் கேட்டதற்கு, அவளை விசாரிக்க ஓர் உயர் அதிகாரி வர இருப்பதாகத் தெரிவித்தார்கள்.

அவர்களிடமிருந்து சுடுநீர் பெற்று குழந்தை மோகனுக்கு பால் கரைத்துக் கொடுத்துவிட்டு அந்த உயர் அதிகாரியின் வருகையை எதிர்பார்த்திருந்தாள் ஜெயராணி.

காலை பதினொரு மணிக்கு சீருடையணிந்த வண்ணம் அங்கே வந்த இராணுவ அதிகாரியைப் பார்த்தவுடன் அவளது நெஞ்சம் திகிலடைந்தது. இவனைப் போன்றதொரு கொடுமையான, கொடூரமான மனிதனை அவள் தனது வாழ்நாளில் இதுவரை சந்தித்ததில்லை. அவன் வேறுயாருமல்ல. நேற்று மாலை முழுமாத கர்ப்பிணியாக இருந்த அவளது அருமைத் தாயாரின் வயிற்றில் - பூட்ஸ் காலால் அடித்துக் கொலை செய்த விகார முகம் கொண்ட இராணுவ அரக்கன் காப்டன் குணசேனா.

தனது கண்முன்னே தன்னைப் பெற்ற தாயை அடித்துக் கொலை செய்த அந்தப் பாதகனைக் கண்டபோது கோபம், வெறுப்பு, வஞ்சம் ஆகிய உணர்ச்சிகள் ஜெயராணியின் உள்ளத்தில் வியாபித்தன. அவனை எப்படிப் பழிதீர்க்கலாம் என்பது பற்றிச் சிந்திக்கலானாள்.

அவுற்போஸ்ட்டிலிருந்த அதிகாரிகளுடன் பேசிவிட்டு அவன் ஜெயராணியை நோக்கி வந்தான்.

சதைப்பிடிப்பில்லாத ஒல்லியான அவனது முகத்தோல் கபாலத்தோடுஒட்டிக்கொண்டிருந்தமையால், அவனது முகம் மண்டையோட்டிற்குத் தோல் ஒட்டி வைத்ததுபோல விகாரமாக இருந்தது. மேலும் அவனது இடது கன்னத்தில் பிறை நிலா வடிவில் கிடந்த தழும்பு முகத்தைக் கொடூரமாகக் காட்டியது.

'விகார முகம்' அவளைப் பார்த்துக் கேட்டது.

"உனது பெயரென்ன?"

"ஜெயராணி"

அவனது காரியர் பாக்கில் அவளது பாஸ்போர்ட் இருந்தது; அதில் அவளது பெயர் உள்ளது. பொய் சொல்லி மாட்டிக்கொண்டால் பின்னர் தப்ப இயலாது.

"எங்கே வசிக்கிறாய்?"

"இங்கே தெல்லிப்பழையில்தான்"

"ஏன் அதிகாலையில் ரோட்டுக்கு வந்தாய்?"

"எனது தம்பி மோசமான காய்ச்சலால் அவதிப்படுகிறான்; அவனை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு கூட்டிக் கொண்டு போறேன்; அதாலை பஸ் பிடிக்க வந்தேன்."

"இந்த பேபியின்ர தாய் வரல்லையா?"

"அம்மா இறந்து போயிட்டார்; நான்தான் தம்பியைப் பார்த்துக் கொள்ளுறேன்"

அவள் இவ்வாறு பதில் கூறும்போது கண்களிலிருந்து நீர் வழிந்தது.

"நீ கொட்டியா - புலிப்படையில் இருக்கிறாயல்லவா?"

"இல்லை, நான் படித்துக் கொண்டிருக்கிறேன்."

"எங்கே படிக்கிறாய்?"

"இங்கே மகாஜனாக் கல்லூரியிலை A.லெவல் படிக்கிறேன்"

"உன்னை மேலும் விசாரிக்க வேண்டியிருக்கு; என்னோடுவா"

"குழந்தைக்கு சுகமில்லை; அவனைக் கவனிக்க வேண்டும்"

"அவனை எடுத்திட்டுப்போய் டாக்டரிடம் காட்டலாம்"

ஒரு பிரம்புக்கூடை தருவித்து அதில் ஒரு ஷீட்டை மடித்துப் போட்டு அதில் குழந்தை மோகனைப் படுக்க வைத்தான். கூடையை எடுத்துக்கொண்டு தனது ஜீப்பை நோக்கி நடந்தான்.

அவர்களை ஏற்றிக்கொண்ட ஜீப் KKS வீதியில் காங்கேசன்துறை நோக்கிச் சென்றது.

2

கடந்த ஐந்து ஆண்டுகளாக மாவிட்டபுரத்தில் கந்தன் கோயிலுக்கு அருகாமையில் காங்கேசன்துறை வீதியருகே இருந்த அவரது வீட்டின் வெளிவிராந்தையில் போடப்பட்டிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு வீதியால் போவோர் வருவோரையெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பார் எழுபது வயதான ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி மேஜர் போல் ஜேசுதாஸ்.

முன்பொரு காலத்தில் தமிழர்களையும் இலங்கை இராணுவம் சேர்த்துக்கொண்ட காலத்தில் சாதாரண போர் வீரனாகச் சேர்ந்து, படிப்படியாகப் பதவியில் உயர்ந்து, இங்கிலாந்தில் ஸான்ட்ஹேஸ்ட் இராணுவ தளத்தில் உயர் பயிற்சி பெற்று மேஜராக உயர்ந்தவர் ஜேசுதாஸ். அவரது காலத்தில் இராணுவ வீரர்களிடையே கடைப்பிடிக்கப்பட்ட ஒழுங்கிற்கும், கட்டுப்பாட்டிற்கும் இன்றைய இராணுவத்தினரின் காவாலித்தனமான நடத்தைக்குமிடையே எத்தனை பேதம்? என எண்ணிக்கொண்டார்.

வேலையிலிருந்து ஓய்வு பெற்றபின் அவருக்கிருந்த நீரிழிவு நோய் முற்றியதும் அவரால் முன்பு போல சுறுசுறுப்பாக நடமாட முடியவில்லை. தினசரி மூன்று வேளை வயிற்றில் இன்சுலின் ஊசியைப் போட்டுக் கொண்டு வீட்டின் வெளி விராந்தையிலிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் கண்களை மூடிக்கொண்டு தனது இளம் பிராயத்து நினைவுகளை மனக்கண்ணில் அசை போட்டுக் கொண்டிருப்பார்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அவரது ஒரே மகள் திருமணம் செய்து கொண்டு அமெரிக்கா போய்விட்டாள். சென்ற ஆண்டில் அவரது மனைவி நோய்வாய்ப்பட்டு இறந்து போன பின்னர் அவரது மகள் அவரை அமெரிக்கா வந்து தன்னுடன் வசிக்குமாறு அழைத்தபோது அவர் மறுத்துவிட்டார். ஒரு வேலைக்காரப் பெண் தினமும் வந்து வீட்டைப் பெருக்கி, துணிகளைக் கழுவிக் காயவிட்டு, சமைத்தும் வைத்துவிட்டுப் போய்விடுவாள். அவருக்கு மாதா மாதம் கிடைக்கும் பென்ஷன் பணம் அவரது தேவைகளுக்கெல்லாம் போதுமானதாக இருந்தது. ஒவ்வொரு நாள் பிற்பகலிலும் அவரது நண்பரான யோசேப் அவர் வீட்டிற்கு வந்தால் நேரம் போவது தெரியாமல் இருவரும் வம்பளந்து கொண்டு இருப்பார்கள்.

நீண்டு கிடந்த காங்கேசன்துறை வீதிக்கு கிழக்குப் பக்கமாக அமைந்திருந்தது அவருடைய வீடு. வீட்டின் இடது புறத்தில் மாவிட்டபுரம் கந்தவேள் கோயிலின் கோபுரம் வானளவு உயர்ந்து நின்றது. ஜேசுதாஸ் கிறிஸ்தவராக இருந்த போதிலும் கோயில் ஆராய்ச்சி மணி அடிக்கும் போதெல்லாம் "கந்தா" என்று சொல்லிக் கொள்வார். அவரது பரந்த உலக நோக்கை இதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

அவரது வீட்டின் எதிர்ப்பக்கத்தில் வீதிக்கு அப்பால் புதியதாக ஒரு ஹோட்டல் ஆரம்பித்திருந்தார்கள். அதற்கு'சூர்யாஹோட்டல்' எனப்பெயரிட்டிருந்தார்கள். அங்கே அசைவ உணவும் போதைப் பானங்களும் தாராளமாக வழங்கப்பட்டன.

சமீப காலமாக அந்த ஹோட்டலுக்கு காங்கேசன் துறையில் குடிகொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவ வீரர்கள் வர ஆரம்பித்திருந்தார்கள், மாலை வேளைகளில் அவர்கள் வந்து குடித்துக் கும்மாளமிடும் சத்தம் அயலிலிருந்த வீடுகளை அதிர வைத்தது. அவர்கள் போடும் 'பைலா' இசையும், சத்தமும், சந்தடியும் அடங்க நடுநிசியாகும். அதன் பின்னரே அக்கம் பக்கத்தில் வசிக்கும் மக்கள் நித்திரைக்குப் போக முடியும்.

அன்று காலை வயிற்றில் இன்சுலின் ஊசியைப் போட்டுக்கொண்டு காலை உணவை முடித்தபின் வராந்தாவிலிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்த ஜேசுதாஸ் அப்படியே கண்ணயர்ந்து விட்டார். அவர் கண் விழித்துப் பார்த்தபோது ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த ஜீப் வண்டி ஒன்று சூர்யா ஹோட்டலின் முன் முற்றத்தில் வந்து நிற்பதைக் கவனித்தார். இராணுவத்தினர் பெரும்பாலும் மாலை ஏழு அல்லது எட்டு மணியளவில்தான் அந்த ஹோட்டலுக்கு வருவார்கள்; பகல் நேரங்களில் வந்ததை அவர் இதுவரை காணவில்லை.

அந்த ஜீப் வண்டியிலிருந்து இராணுவ காப்டனுக்குரிய சீருடை அணிந்த ஒருவன் கீழே இறங்கினான். ஜீப்பின் முன் கதவைத் திறந்து இடது கரத்தில் ஒரு பிரம்புக் கூடையை எடுத்துக் கொண்டான், அவனது இடுப்புப் பட்டியில் பொருத்தியிருந்த 'ரிவோல்வர்' பையின் தோல் மூடியைக் கழற்றிவிட்டான்; இப்போது சுலபமாக கைத்துப்பாக்கியை அவனால் எடுத்துக்கொள்ள முடியும். ஜீப்பின் பின் கதவைத் திறந்தபோது பதினேழு அல்லது பதினெட்டு வயதான, மிகவும் அழகான ஒரு பெண் கீழே இறங்கி அவனைப் பின் தொடர்ந்து ஹோட்டலுக்குள் சென்றாள். அவளது முகத்தில் ஒருவிதமான பீதி குடிகொண்டிருந்தது.


அந்த இராணுவ காப்டனின் முகத்தைப் பார்க்க விகாரமாக இருந்தது. அவனது முகம் கபாலத்தில் வெறும் தோலை ஒட்டியதுபோல் சதைப்பிடிப்பின்றி காணப்பட்டது. இடது கன்னத்தில் நீண்டதொரு தழும்பு. இப்படியான ஒரு விகாரமுகம் கொண்ட மனிதனை அவர் இதற்குமுன்னர் சந்தித்ததாக நினைவில்லை.

அவனைப்பின்தொடர்ந்துசென்ற அப்பெண்ணைக்

கண்டதும் ஜேசுதாஸிற்கு தனது மகளின் இளமைக் காலத் தோற்றம் நினைவிற்கு வந்தது. பார்ப்பதற்கு இந்தப் பெண் அவரது மகளைப்போலவே இருந்தாள். இந்த இளம்பெண்ணை என்ன காரணம் காட்டி இந்த இராணுவத்தான் அழைத்துப் போகிறானோ என எண்ணினார்.

அச் சமயம் பார்த்து ஜேசுதாஸின் நண்பர் ஒரு இளம்பெண்ணைக் கடத்திக்கொண்டு வந்திருக்கிறான்."

"இந்த ஆமிக்காரங்கள் எங்களின்ரை இளம் பெண்களைக் கடத்தி பாலியல் வல்லுறவுகளுக்கு ஆளாக்குவது பற்றித்தான் ஒவ்வொரு நாளும் பத்திரிகையில் படிக்கிறோமே. இன்றைக்கும் இது பற்றி உதயனில் கூறப்பட்டிருக்கு" என்றார் யோசப்.



யோசேப்' அங்கே வந்து சேர்ந்தார். இருவரும் வெளி வராந்தாவில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களது சம்பாஷனை வெளி வராந்தாவில் தொங்கிய லியனாடோ டாவின்ஸியின் புகழ் பெற்ற இறுதி இரவுப் போசனம் (The Last Supper) ஓவியம் பற்றித் திரும்பியது.

"யோசேப், உனக்குத் தெரியுமோ இந்தப் படத்தை வரைய டாவின்ஸிக்கு மூன்று ஆண்டுகளுக்கு மேல் பிடித்தது"

"ஏன் அவ்வளவு காலம் எடுத்தார்?"

"இதை வரைந்து கொண்டிருந்த காலத்தில் டாவின்ஸி ஒரு பெரிய பிரச்சினையை எதிர் கொண்டார்.

பரிசுத்தத்தை யேசுநாதரின் உருவத்திலும் கொடூரத்தை அவரைக் காட்டிக் கொடுத்த நண்பன் ஜூடாஸ் உருவத்திலும் பிரதிபலிக்க வேண்டிய தேவை.

பரிசுத்தத்தை சுலபமாக யேசுநாதரின் முகத்தில் கொண்டு வந்த டாவின்ஸியால், கொடுமைக்கார ஜூடாஸின் முகத்தை அத்தனை சுலபமாக வரைந் தெடுக்க முடியவில்லை.

கொடூர முகம் கொண்ட ஒருவனைத் தேடி- அப்ப டிப்பட்ட ஒருவனின் முகத்தை மாதிரியாக வைத்து அப்படத்தை முடித்துவிடலாம் என எண்ணி- மூன்று ஆண்டுகள் அலைந்து திரிந்தார்.

அத்தகைய முகம் கொண்ட ஒருவனை நீ வருவதற்கு சில நிமிடங்களுக்கு முன் எதிரே இருக்கும் சூர்யா ஹோட்டலில் நுழையக் கண்டேன். டாவின்ஸி இவனைக் கண்டிருந்தால் தலைகால் தெரியாமல் துள்ளிக் குதித்திருப்பார். அவர் தேடி அலைந்த கோர முகம் கொண்ட மனிதன் இவன்; ஜூடாஸ்க்கு மிகப் பொருத்தமான முகம்."

"இப்போது அவன் எங்கே இருப்பான்?"

"ஹோட்டலின் உள்ளேதான் இருப்பான்; அதோ நிற்கும் அந்த ஜீப் அவன் வந்ததுதான். தன்னோடு

> **ஸேர் அந்தப் பெண் தன்னிச்சையாகத்தான் இங்கே வந்திருந்தாள். கடத்தப்பட்டு வந்திருப்பவள் போலத் தெரிய வில்லை. மேலும் இது ஆமிக்காரன் விவகாரம்; நான் இத் தகவலை உங்களுக்குத் தருவதாலை எங்களுக்கு ஏதும் பிரச்சினை வருமோ தெரியாது**

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருந்தபோது அந்த இராணுவ காப்டன் கையில் ஒரு பிரம்புக் கூடையுடன் ஹோட்டலை விட்டு வெளியே வந்து ஜீப்பில் ஏறி அதை ஓட்டிக்கொண்டு சென்றான். அவனோடு அந்த இளம்பெண் திரும்பி வரவில்லை.

"இவன்தான் அந்தப் பெண்ணைக் கடத்திக் கொண்டு வந்தவன்; இப்போது அவள் அவனோடு திரும்பி வரல்லை" என்றார் ஜேசுதாஸ்.

"திரும்பாவிட்டால் என்ன; அவள் அந்த ஹோட்ட லில்தான் இருப்பாள். அப்படியானால் அவள் இஷ்டப் பட்டுத்தான் வந்திருப்பாளோ"

"இல்லை யோசேப், அவள் மிகக் கலக்கமுற்றுக் காணப்பட்டாள்; இவன் ஏதோ ஒரு உபாயத்தைக் கொண்டு அவளைக் கட்டுப்படுத்துறான் போலப்படுகுது, நாங்கள் ஒருக்கால் போய்ப் பார்த்திட்டு வருவோமா?"

"ஆமிக்காரரோடு நாம் சொறிவது நல்லதா?"

"எங்கட ஒரு பெண்ணை - எங்கட கண்ணுக்கு முன்னால ஒருத்தன் கடத்திக்கொண்டு வாறான்; நாங் கள் எப்படி அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியும்? நான் போய் விசாரிக்கப்போறேன்; விருப்ப மெண்டால் நீயும் வா"

"நானும் வாரேன்" என்றார் யோசேப்.

வீட்டினுள்ளே சென்ற ஜேசுதாஸ் அலுமாரியைத் திறந்து நீண்ட நாட்களாகப் பத்திரப்படுத்தி வந்த அவரது துப்பாக்கியை எடுத்து குண்டுகளைப் போட்டு நிரப்பினார்.

அடிக்கடி 'ஆயில்' போட்டுத் துடைத்து தயார் நிலையில் அவர் வைத்திருந்த துப்பாக்கி அது. அதை ஒரு சிறிய தோல்பையில் போட்டுக்கொண்டார். அதை உடலோடு இணைக்கக்கூடிய தோல் பட்டை ஒன்றையும் எடுத்துக்கொண்டார்.

இருவரும் சூர்யா ஹோட்டலை நோக்கி நடந்தார்கள்.

ஹோட்டல் வரவேற்பு மேசையிலிருந்த இளைஞன் அந்த ஹோட்டல் உரிமையாளரின் மகன்; ஏற்கனவே ஜேசுதாஸுக்குப் பரிச்சயமானவன்.

"என்ன மேஜர் ஸேர், இந்தப் பக்கம் வந்திருக்கிறியள்; ஏதாவது அறை தேவையா?"

ஜேசுதாஸ் நேரே விஷயத்திற்கு வந்தார்.

"தம்பி சுரேஷ், இப்போது அரை மணி நேரத்திற்கு முன்னர் அந்த இராணுவ காப்டன் ஒரு பெண்ணைக் கடத்திக் கொண்டு வந்தான். அந்தப் பெண்ணை இங்கே எந்த அறையில் அடைத்து வைத்திருக்கிறான் என்று தெரியணும்."

"ஸேர் அந்தப் பெண் தன்னிச்சையாகத்தான் இங்கே வந்திருந்தாள். கடத்தப்பட்டு வந்திருப்பவள் போலத் தெரியவில்லை. மேலும் இது ஆமிக்காரன் விவகாரம்; நான் இத் தகவலை உங்களுக்குத் தருவதாலை எங்களுக்கு ஏதும் பிரச்சினை வருமோ தெரியாது"

"தம்பி சுரேஷ், ஒரு ஹோட்டலிலை அவளது விருப்பத்திற்கெதிராக ஒரு பெண்ணைக் கொண்டு வந்து அடைத்து வைத்திருப்பது சட்டப்படி குற்றம். அதுவும் எங்கட ஒரு பெண்ணை ஆக்கிரமிக்க வந்த ஆமிக்காரன் பலவந்தமாகக் கொண்டு வந்து கெடுப்பதற்கு நாம் எப்படித் துணை போக முடியும்? நானும் அரச இராணுவத்தில் பணியாற்றியவன் தான். இதனாலை உங்களுக்குப் பிரச்சினை ஏதும் வந்தால் நான் உங்களுக்காகப் பேசுவேன்" என்றார் ஜேசுதாஸ்.

"அந்தப் பெண் 13ம் நம்பர் அறையில் இருக் கிறாள். நானும் உங்களோடு வருகிறேன்" என்ற சுரேஷ் அந்த அறையின் மற்றொரு சாவியை எடுத்துக்கொண்டு அவர்களை பதின்மூன்று இலக்க மிட்ட அறைக்கு அழைத்துச் சென்றான்.

13ம் இலக்கமிட்ட அறையின் கதவைத் தட்டி னார்கள்.

பதில் இல்லை.

"அவளுக்கு அறைக்கதவைத் திறக்க இஷ்ட மில்லைப் போல இருக்கு" என்றான் சுரேஷ்.

மேலும் அறைக் கதவைப் பலமாகத் தட்டி னார்கள்.

பதில் இல்லை.

உள்ளிருந்து ஏதோ முனகல் சத்தம் கேட்டது போலிருந்தது.

"கதவைத் திற சுரேஷ்"

சுரேஷ் அந்த அறைக் கதவைத் திறந்தான்.

அங்கே அவர்கள் கண்ட காட்சி-

யோசேப், சுரேஷ் இருவரும் திடுக்கிட்டு நின் றார்கள்.

மேஜர் ஜேசுதாஸ் மட்டும் எதுவிதமான அதிர்ச்சியும் காண்பிக்காமல்

"நான் எதிர்பார்த்ததுதான்" என்றார்.

அந்தப் பெண் கட்டிலில் படுத்திருந்தாள். அவளது கைகள் இரண்டும் பின்னால் முதுகுப்புறமாகக் கயிற்றால் கட்டப்பட்டிருந்தன. கயிற்றின் மறுமுனை கட்டிலின் தலைப் பலகையில் கட்டப்பட்டிருந்தது. அவளது வாயின் மேல் ஒரு பிளாஸ்டர் துண்டு ஒட்டப் பட்டிருந்தது. அவளது கண்களில் விவரிக்கமுடியாத பீதி குடிகொண்டிருந்தது. ●

(தொடரும்)

## அடுத்த மாதம் கமலின் ‘உத்தம வில்லன்’

கமல்ஹாசன் நடிப்பில் உருவாகியுள்ள ‘உத்தம வில்லன்’ ஏப்ரல் முதல் வாரம் வெளியாகும். கமலின் நண்பரும், நடிகருமான ரமேஷ் அரவிந்த் இயக்கியுள்ள இப்படத்தை திருப்பதி பிரதர்ஸும், ராஜ்கமல் பிலிம்சும் இணைந்து தயாரித்துள்ளது. ‘உத்தம வில்லன்’ படத்தில் மறைந்த இயக்குனர் கே.பாலச்சந்தர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். படத்துக்கு ஜிப்ரான் இசை. தெய்யாட்டாக் கலைஞராகவும், ஒரு முன்னணி நடிகராகவும் இந்தப் படத்தில் தோன்றுகிறார் கமல்.





## உள்ளாடை விளம்பரத்தில் சமந்தா!

தமிழ் சினிமா கதாநாயகிகளுக்கு இப்போது இலகுவாக கோடி கோடியாகப் பணம் சம்பாதிக்க கைகொடுத்திருக்கிறது விளம்பரம்!

கவர்ச்சி காட்டினால் போதும். போகிற போக்கில் நிர்வாணத்துக்கும் தயார்!

காஜல் ஆணுறை விளம்பரத்தில் நடிக்கிறார் என்று பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது. அதற்குள் குடும்பப் பாங்காக நடித்து வந்த சமந்தா, தற்போது உள்ளாடை விளம்பரத்தில் நடிக்கிறார். சம்பளம் ஆறு கோடி ரூபா.

இவர் ஏற்கனவே ‘அஞ்சான்’ படத்தில் பிகினி உடையில் தோன்றினார்.

## ரஹ்மான் இசை பள்ளி மாணவரின் இசையில் ஒரு புதிய படம் ‘கே 3’

‘கே 3’ என்ற பெயரில் ஒரு படம் தயாராகி, விரைவில் திரைக்கும் வரவுள்ளது. காமதேனு இண்டர்நேஷனல் தயாரிக்கிறது. விமல் ராஜா நாயகன், ஆதிரா நாயகி.

ஏ.ஆர்.ரஹ்மான் நடத்திவரும் ‘கே எம்’ இசைப் பள்ளியில் படித்துத் தேறிய சிவசங்கர் இசை அமைக்கிறார். அண்ணாதுரை இயக்குகிறார். படத்தின் திரை கதை, வசனம், ஒளிப்பதிவு எல்லாமே அவர்தான்! இரவு நேரங்களில் போஸ்டர் ஒட்டும் கதிர், கஞ்சா, கருப்பு என்ற மூன்று இளைஞர்களின் வாழ்க்கைதான் இந்தப் படம் என்று இயக்குனர் சொல்கிறார்.

## நடிகை ரம்பா வீட்டில் கொள்ளை!



கனடாவில், ரொறொன்டோவில் உள்ள இலங்கைத் தமிழரான தொழில் அதிபர் இந்திரன் பத்மநாபன் என்பவரை 2010இல் மணம் முடித்த நடிகை ரம்பா, தனது ஹைதராபாத்தில் உள்ள வீட்டில் தனது நகைகளை பீரோவில் பூட்டி வைத்திருந்தார். அந்த நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாக ரம்பாவின் சகோதரர் சீனிவாஸ் பொலிஸில் புகார் செய்துள்ளார். 4.5 கோடி பெறுமதி வாய்ந்தவை என்றும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது மனைவி குடும்பம்தான் இதனைச் செய்ததாக சொல்லுகிறார். தனது மனைவி பல்லவி குடும்பம், தான் வெளியே சென்ற சமயம் இதனைச் செய்ததாக புகாரில் தெரிவித்துள்ளார்.

கனடாவில் வசித்து வந்த ரம்பா சென்னையில் ரியாலிட்டி ஷோவில் ஒருவராகவும் இப்போது இருந்து வருகிறார்.



## நயன்தாராவுக்காக பிரியா ஆனந்த் குரல்

‘நானும் ரவுடிதான்’ படத்தில் நயன்தாரா மதுபானம் வாங்கும் காட்சி சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. இந்நிலையில் நயன்தாராவுக்கு ஆதரவாக நடிகை பிரியா ஆனந்த் குரல் கொடுத்துள்ளார்.

தனுஷ் தயாரிப்பில், விக்னேஷ் சிவன் இயக்கி வரும் இப்படத்தில் விஜய் சேதுபதி, நயன்தாரா நடிக்கின்றனர். இந்தப் படத்தில் மதுபானக் கடையில் நயன் ‘பியர்’ வாங்குவது போன்ற காட்சி உள்ளது. இது குறித்த படம் வெளியாகி பெரும் சர்ச்சையைக் கிளப்பி உள்ளது.

இந்தக் காட்சிக்கு இந்து மக்கள் கட்சியும், சில அமைப்புகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து, நயன்தாரா கொடும்பாவி எரிக்கப்பட்டது.

“நடிக, நடிகைகள், படத்தில் வரும் காட்சியை முடிவு செய்வதில்லை. இயக்குனர் சொல்வதைத்தான் செய்கிறோம். இந்தக் காட்சி படத்திற்கு எவ்வளவு முக்கியம் என்பது டைரக்டருக்குத்தான் தெரியும். படம் வெளிவந்த பின்னர் விமர்சிப்பதுதான் முறை. நயன் மீது பழி சுமத்துவது முறையல்ல” என்று நடிகை பிரியா ஆனந்த் எதிர்ப்புக் குரல் ஓங்கி ஒலித்திருக்கிறது.

## கார்த்தியுடன் இணைகிறார் விவேக்

நடிகர் கார்த்தி நடிக்கும் ‘காஷ்மோரா’ படத்தில் காமெடியனாக வடிவேலுக்குப் பதில் விவேக் நடிக்க இருக்கிறார்.

தொடர்ந்து தோல்விப் படங்களைக் கொடுத்து வந்த கார்த்திக்குக்கு ‘மெட்ராஸ்’ சிறிது ஆறுதலைக் கொடுத்தது. விரைவில் திரைக்கு வரவுள்ள அவரது ‘கொம்பன்’ கொஞ்சம் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் ‘காஷ்மோரா’ படத்தில் இரு வேடங்களில் கார்த்தி நடிக்கிறார்.

இப்படத்தின் ஜோடி நயன்தாரா. முதல் முறையாக கார்த்தியுடன் நடிக்கிறார். முதலில் வடிவேலு நடிக்க இருந்தார். ஆனால் விவேக் நடிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சூர்யாவுடன் சில படங்களில் விவேக் நடித்திருக்கிறார். கார்த்தியுடன் இதுதான் முதல் படம்.

## கீர்த்திக்கு இப்ப ரொம்ப ரொம்ப கிராக்கி!

தமிழில் சில படங்களில் நடித்தவர்தான் மேனகா. ஆனால் அவர் மகள் கீர்த்திக்கோ முதல் பட ரிலீசுக்கு முன்பே அடுத்து அடுத்து இரண்டு படங்கள் கமிட்டாகி இருக்கின்றன. அடுத்தடுத்த படங்களுக்கு வரிசையில் நிற்கிறார்கள் தயாரிப்பாளர்கள்! பள்ளி மாணவியாக இருந்த கீர்த்தியை, அம்மாவை அறிமுகப்படுத்திய பிரியதர்ஷனே ‘கீதாஞ்சலி’யில் அறிமுகப்படுத்தினார். முதல் படமே மோகன்லாலோடு! டபிள் செஞ்சுரி அடித்தார் கீர்த்தி!

தோழி அமலாபால், கீர்த்தியை அள்ளி வந்து கணவர் ஏ.எல்.விஜய் முன் நிறுத்தி, ‘இது என்ன மாயம்’ படத்தின் நாயகியாக்கிவிட்டார்! விக்ரம் பிரபுவின் ஜோடி. அடுத்து ‘ரஜினி முருகன்’ சிவகார்த்திகேயனின் ஜோடி. ஒரே ரவுண்டில் இளசுகளை வளைத்துவிட்டார் கிர்ததி,

தனக்கு இப்படி எல்லாம் வாய்ப்புக் கிடைத்தது பற்றி கீர்த்தியால் நம்பவே முடியவில்லை!

“எனக்கா இப்படி எல்லாம் நடக்குது என்று கிள்ளிப் பார்த்துட்டன். சொன்னா நம்ப மாட்டீங்க; எல்லாம் கடவுள் கருணை” என்கிறார்.



## ராசி இல்லா நடிகை



பழைய நடிகை ராதாவின் இளைய மகள் துளசியை 'கடல்', 'யான்' படங்களின் மூலம் மூட்டை கட்டித் தூக்கிப் போட்டுவிட்டார்கள், தமிழ் ரசிகர்கள். படங்களும் ஹிட்டாகாத நிலையில், அம்மணியை ராசியில்லாத நடிகை பட்டியலில் சேர்த்துவிட்டார்கள்!.

"சினிமாவில் நடித்துச் சம்பாதிக்க வேண்டும் என்ற நிலையில் நான் இல்லை. ஒரு படத்தில் நடித்தாலும், அதில் எனது கேரட்டர் ரசிகர்கள் மனதில் ஆழமாகப் பதியவேண்டும் என்று காத்து இருக்கிறேன். எனக்கும், அக்கா கார்த்திகாவுக்கும், அம்மா ராதாவுக்கும் அவசரப்படும் குணம் கிடையாது. எல்லா விஷயத்தையும் பொறுமையுடன் அணுகிச் சாதிப்போம்!" என்கிறார் இந்த ராசியில்லாத சின்னப் பெண்.

## விஜயகாந்த் மகனின் 'சகாபிதம்' எப்படி?

கேப்டன் விஜயகாந்த் மகன் சண்முக பாண்டியன் நடித்து வெளிவரவிருக்கும் 'சகாப்தம்' படத்தின் இசை வெளியீடு விழா சமீபத்தில் நடந்தது. மிகப் பிரமாண்டமான இவ்விழாவில் சத்தியராஜ், பிரபு, வாகை சந்திரசேகர், எஸ்.ஏ.சந்திரசேகர், பி.வாசு, கே.எஸ்.ரவிக்குமார், சுந்தர்.சி மற்றும் ஜெயம் ராஜா, சிபிராஜ், விமல், விக்ரம் பிரபு போன்ற பல கலைஞர்கள் கலந்துகொண்டு வாழ்த்துத் தெரிவித்தனர். இவ்விழாவில் மினி ஹெலிகாப்டர் மூலம் குறுந்தகடு வெளியிடப்பட்டது. இசை வெளியீட்டு விழாவில், முன்னோட்ட டிரெய்லர் வெளியிடப்பட்டது. இந்த டிரெய்லரை, You Tube இல் இரண்டு லட்சம் பேர் பார்த்துள்ளார்கள். விஜயகாந்தின் மகனின் முதல் படம் எப்படியோ?



## வருங்கால கணவன் படத்தில் ஜெய்க்கு ஜோடியாகிறார்!

திருமணத்துக்குப் பிறகு நடிப்பைத் தொடர்வதில் தெளிவாக இருக்கிறார் நடிகை திரிஷா.

திரிஷாவுக்கும், தயாரிப்பாளர் வருண் மணியனுக்கும் சில தினங்களுக்கு முன்பு திருமண நிச்சயார்த்தம் நடந்தது. விரைவில் திருமணம் நடக்கப்போகிறது.

இந்நிலையில் அஜித்துடன் திரிஷா நடித்த 'என்னை அறிந்தால்' படத்துக்கு நல்ல பெயர் கிடைத்துள்ளது.

இப்போது புதிய படங்களில் ஒப்பந்தமாகி வருகிறார் திரிஷா.

வருண் மணியன் தயாரிக்கிற பெயர் இடப்படாத ஒரு படத்தில் ஜெய்யுடன் திரிஷா ஜோடி சேர்கிறார்.



## பவர் ஸ்டாருக்கு வேறு வேலை இல்லையா?

பவர் ஸ்டார் எது பேசினாலும் பிரச்சினைதான்! சமீபத்தில் திரைக்கு வந்து வெற்றிகரமாக ஓடி கொண்டு இருக்கும் படம் அஜீத்தின் 'என்னை அறிந்தால்...'

இப்படத்தைப் பார்த்த பிறகு பவர் ஸ்டார் ஒரு சர்ச்சையான கருத்தை குறிப்பிட்டார். இதனால் ரஜினி ரசிகர்கள் கொதித்துப் போனார்கள்.

"அஜீத்தின் 'என்னை அறிந்தால்...' பார்த்தேன். மிகவும் நன்றாக நடித்துள்ளார். அவர் சூப்பர் ஸ்டார் இல்லை. அதுக்கும் மேல" என்று கூறியுள்ளார்.

ரஜினி ரசிகர்களுக்கு எப்படி இருக்கும்?.

## அறிவுரை கூறும் சன்னி லியோன்!

கவர்ச்சி நடிப்பின் மூலம், பாலிவுட் ரசிகர்களை கிறங்கடித்த சன்னி லியோன், தற்போது ரியாலிட்டி ஷோக்களுக்கு, வழிகாட்டியாக இருக்கப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

'ரியாலிட்டி ஷோ'க்களில் பங்குபெற விருப்பப்படும் பாடகர்கள், நடனமாட விருப்பமுள்ளவர்கள் மற்றும் நடிக்க விருப்பமுள்ளவர்கள் எவ்வாறு தங்கள் பங்களிப்பை செய்ய வேண்டும், என்னென்ன அம்சங்களை நடுவர்கள் எதிர்பார்ப்பார்கள் என்பது போன்ற அறிவுரைகளை பங்கேற்க விரும்புபவர்களிடம் கூறி, அவர்களை ரியாலிட்டி ஷோக்களில் வெற்றி வாகை சூடுவதற்கான வழிமுறைகளை சன்னி லியோன் அளிப்பார்.

2014ம் ஆண்டில் இணையத் தளங்களில் அதிகமாகத் தேடப்பட்ட இந்தியத் திரை நட்சத்திரம் என்ற பெருமை சன்னி லியோனையே சாரும்.

## லட்சுமி மேனன் சினிமாவுக்கு முழுக்கு!

என்னாச்சு இந்த லட்சுமி மேனனுக்கு? சினிமாவில் நடிக்கிற ஆர்வம் இல்லாததுபோல, பேட்டிகள் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்.

தமிழில் சுந்தர பாண்டியன் மூலம் அறிமுகமாகி, அடுத்தடுத்து வெற்றிப் படங்களில் நடித்துள்ளவர் லட்சுமி மேனன். இவர் தமிழில் நடித்துள்ள ஏழு படங்களுமே வெற்றி பெற்றதால், தயாரிப்பாளர்களுக்கு 'லட்சுமி தேவி'யாகத் திகழ்ந்த இவர் தற்போது நடிப்பதில் அவ்வளவு ஆர்வம் காட்டுவதில்லை.

"சினிமா போரடிக்க ஆரம்பித்துவிட்டது. சினிமாவை விட்டு விரைவில் விலக இருக்கிறேன். நிறையப் படங்களில் கிராமத்துப் பெண்ணாக நடித்துவிட்டேன். அதேபோன்ற வேடங்களில் தொடர்ந்து நடிக்கவே எனக்கு வாய்ப்புக்கள் வருகின்றன. இது எனக்குப் பிடிக்கவில்லை. எனவே, நான் சினிமாவுக்கு முழுக்கு போடுகிறேன். இனிமேல் படிப்பில் தான் கவனம் செலுத்தப்போகிறேன். படிக்கிறபோது, நல்ல வேடங்கள் கிடைத்தால் விரும்பும்போது நடிப்பேன்" என்று கூறுகிறார் லட்சுமிமேனன்.

அவர் கார்த்தியுடன் நடித்த கொம்பன் திரைக்கு விரைவில் வருகிறது.




## ஆபாச நடிகையாக மாறுகிறார் காஜல்!


தென்னிந்திய சினிமாவில் அதிக சம்பளம் வாங்கும் நடிகைகளில் காஜல் அகர்வாலும் ஒருவர். இவர் தற்போது எல்லாம் நடிக்கும் படங்களில் மிகவும் கவர்ச்சி காட்டுகிறார் எனக் குற்றச்சாட்டு எழுகிறது.

ஆனால், அதைப்பற்றி எல்லாம் அவர் கவலைப்படுவதில்லை. சமீபத்தில் கூட ஒரு காண்டம் விளம்பரத்தில் நடித்தார்.

இதேபோல் இவர் கடைசியாக ராம் சரணுடன் நடித்த படம், இவரின் பல கவர்ச்சிக் காட்சிகள் 'கட்' செய்த பிறகே திரைக்கு வந்தது.

# நெஞ்சினிலே... நெஞ்சினிலே...





## HEART BURN

அவர் ஒரு தனியார் தொழிற்சாலை நிர்வாகி. இருபது வருடங்களுக்கு முன்னர், அவருக்கு அப்போது ஐம்பது வயது.

என்னிடம் சிகிச்சைக்காக வந்தார்.

நெஞ்சு எரிவு (GASTRITIS அல்லது ACIDITY), வயிற்றின் மேல் பகுதியில் வலி மற்றும் செமிபாடு பிரச்சினை சம்பந்தமான நோய், அத்துடன் அவருக்கு ஆழ்ந்த தூக்கமின்மை, பகலில் சோர்வுத்தன்மை, கடுமையான உடல் அசதி போன்ற பிரச்சினைகளும் இருந்தன. மேலும் அவர் குடலுக்குள் காமிரா விட்டுப் பார்க்கும் ENDOSECOPY போன்ற நவீன பரிசோதனைகளும் செய்து முடித்திருந்தார்கள்.

தொடர்ந்து GEL போன்ற பால் மருந்து மற்றும் குளிகைகள் உட்கொண்டும், நிவாரணம் கிட்டாமல் சிகிச்சைக்கு என்னிடம் வந்திருந்தார்.

-இந்த இதழுக்காக ஹோமியோபதி டாக்டர் ஆர்.தியாகராஜன் 'நெஞ்சினிலே... நெஞ்சினிலே...' என்ற கதை



ஒன்றுடன் தனது மாதாந்த ஆலோசனையை ஆரம்பித்தார்.

ஒருவருக்கு நெஞ்சினிலே ஏற்பட்ட நெஞ்சு எரிவு. ஹோமியோபதி மூலம் எப்படியான தீர்வை வழங்கினார் என்பதை தொடர்ந்து விளக்கினார்:

அந்த நோயாளி என்னுடன் பேசும்போது, மனப் பதற்றத்துடனும், பய உணர்வுடனும் காணப்பட்டார். தனது இருதயத்தில் (HEART) ஏதாவது பாதிப்பு இருக்குமோ என்ற அச்சம் அவரை வாட்டிக்கொண்டிருந்தது. அவருடைய வாழ்க்கை முறை - உணவு பழக்க வழக்கங்கள் - வேலைப்பழு போன்றவற்றை அவரிடமிருந்து முழுமையாக அறிந்துகொண்டேன். உணவுக் குழாயில் பாதிப்புத் தவிர இதயத்தில் எந்தப் பாதிப்பும் இல்லை என்பதை தெரிந்துகொண்டேன்.

தொடர் ஹோமியோபதி சிகிச்சையை அவருக்கு அளித்தேன். அவரும் நான் வழங்கிய சிகிச்சையுடன் ஒத்துழைத்தார். வாழ்க்கை முறை மாற்றங்கள் (LIFE STYLE CHANGE) போன்றவற்றால், படிப்படியாக அவர் தனது பிரச்சினைகளில் இருந்து மீண்டு வந்து, தொடர்ந்து எந்தவித பயமும், பதற்றமும் இல்லாத அமைதியும், மகிழ்ச்சியுமான வாழ்க்கையை நடாத்திக் கொண்டு இருக்கிறார்.

இருபது வருடங்களுக்கு முந்தைய தனது அனுபவத்தை விபரித்த டாக்டர் தியாகராஜன், "அப்போது 50 வயதான ஒருவருக்கு ஏற்பட்ட இதுபோன்ற பிரச்சினைகள், சமீபகாலமாகப் பெண்களையும், வாலிப வயதினரையும், குழந்தைகளையும் கூட ஆட்கொண்டிருப்பதைக் காண்கிறேன். இந்தப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பலர் என்னிடம் சிகிச்சைக்கு வருகின்றனர்" என்று தெரிவித்துவிட்டு, தொடர்ந்து தனது ஆலோசனைகளை அளித்தார்.

"இப்படியான பிரச்சினைகள் ஏற்படுவதற்கு என்ன காரணம்? இது மிகவும் கவலைப்பட வேண்டிய விஷயம். ஏனெனில், நம் உடல் சம்பந்தமான அறியாமையினால், இவ்வாறான பாதிப்புக்குள்ளாகிறோம். எமது எதிர்காலச் சந்ததியினரையும் பாதிப்புக்குள்ளாக்குகின்றோம்.



**ஹோமியோபதி வைத்திய நிபுணர் ஆர். தியாகராஜன் பேசுகிறார்**

நீண்ட கால நெஞ்சு எரிவு என்ற ACIDITY பாதிப்புக்குள்ளாகிறவர்கள்தான் படிப்படியாக டயபட்டிக்ஸ், பிளட் பிரசர் போன்ற நோயாளிகளாக மாறுகின்றனர். இப்படிப்பட்ட பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே, சரியான ஹோமியோபதி சிகிச்சையை மேற்கொண்டு, முளையிலேயே கிள்ளி எறிவதன் மூலம் டயபட்டிக்ஸ், பிளட் பிரசர் போன்ற வாழ்நாள் முழுவதும் வாட்டி வதைக்கின்ற பெரும் நோய்களில் இருந்து தப்பிக்கொள்ளலாம்.

"இந்தப் பிரச்சினைகள் ஏன் வருகின்றன?"

நம் அனைவருக்கும் வயிற்றில் வீரியம் மிக்க அமிலம் (HYDROCHLORIC ACID) சுரந்து, நாம் சாப்பிடும் உணவு செரிமானத்துக்குப் பெரும் உதவியாக இருக்கின்றன. இந்த அமில சுரப்பின் அளவு, நேரம் போன்றவைகளைத் தூண்டுவதும், கட்டுப்படுத்துவதும், நிறுத்துவதும் நமது மூளையின் வசம் உள்ளது. இந்த அமில சுரப்பு ஏற்படுவதனாலேயே நமக்குப் பசி உணர்வும் ஏற்படுகின்றது.



நமக்கு ஏற்படும் பல்வேறு விதமான நெருக்கடிகள் (STRESS) காரணமாக எங்களுக்குப் பசி உணர்வு வந்ததும், உணவை உட்கொள்ளாமல், தாமதப்படுத்துவதனால், உடலில் உள்ள அமிலத் தன்மை மிகவும் தூண்டப்பட்டு, நெஞ்சுப் பகுதியிலுள்ள உணவுக் குழாய் மேல் நோக்கிச் செல்லும்போது, நமக்கு நெஞ்சினிலே எரிவு போன்ற உணர்வு HEARTBURN ஏற்படுகிறது. நமது இரைப்பையின் உட்பகுதி வீரியமிக்க அமிலத் தன்மையைத் தாங்கக்கூடிய திறன் உள்ளது. ஆனால், உணவுக் குழாயின் உட்பகுதி அமிலத் தன்மையைத் தாங்கும் திறனற்ற மெல்லிய தன்மை உடையது.

"உணவுக் குழாயில் வீரியமிக்க அமிலம் தொடர்ந்து நீண்ட காலம் மேலோக்கி வரும்போது, நமக்குத் தொடர்ந்து நெஞ்சு எரிவுத் தன்மையும், உணவுக்குழாயின் உட்பகுதியில் கடுமையான சேதமும் உண்டாகிறது.

இந்தத் தேவைக்கு அதிகமான அமிலத் தன்மையே (HYPER ACIDITY) பிரச்சினையை உருவாக்கி நம்மைப் படிப்படியான டயபட்டிக்ஸ், பிளட் பிரசர் நோயாளிகளாக மாற்றுகிறது.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமான STRESS என்ற வார்த்தை சமீப காலமாக சிறு குழந்தை முதல் முதியோர்கள் வரை பரவலாக உச்சரிக்கபட்டு வருகிறது. ஏன்? விலங்குகள் மற்றும் மீன் போன்ற பிராணிகளுக்கும்கூட STRESS வருவதாகக் கூறுகிறார்கள். இந்த STRESS என்ற பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமே வாழ்க்கையைத் தவறான கோணத்தில் அணுகுவதுதான். எனவே, சரியான கோணத்தில் வாழ்க்கையை அணுகும் முறையைக் கடைப்பிடித்து, (LIFE STYLE MODIFICATION) மனதிலும், உடலிலும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை எவ்வித பக்க விளைவுகளுமின்றி சீர் செய்யக்கூடிய ஹோமியோபதி சிகிச்சையை மேற்கொள்வதன் மூலம், அசௌகரியமான நெஞ்சு எரிவு (HEART BURN) பிரச்சினையிலிருந்து முழுமையாக மீண்டு வரலாம்!"

**அழகாகவும், இலகுவாகவும் புரியக்கூடிய வகையில் அருமையான ஆலோசனையை வழங்கினார் டாக்டர் ஆர். தியாகராஜன். டாக்டர் ஆர். தியாகராஜனிடம் மேலதிகமான இலவச ஆலோசனைகளுக்கு 020 8144 1553.**

ஈ.கே.ஆர்.

# ஆஸ்துமா



## ஹோமியோபதி மருத்துவம்
## +
## உங்கள் ஒத்துழைப்பு
## 100% தீர்வு

ஆஸ்துமா நோயாளிகள் ஏற்கனவே உட்கொள்ளும் ஆங்கில மருந்துகளுடன் ஹோமியோபதி மருந்துகளையும் உட்கொண்டால் கண்பாதிப்பு, தோல் மற்றும் பிறப்பு உறுப்பு அரிப்பு, நரம்புகள் பாதிப்பு, ஆண்மை குறைபாடு, கிட்னி பாதிப்பு போன்றவைகளை தவிர்க்கலாம்.







**உயர்தர மருத்துவம் ▪ பாதுகாப்பான மருந்துகள் ▪ விரைவான சேவை**

### சிறப்பு சிகிச்சைகள்

- **உயர் இரத்த அழுத்தம்** (B.P/HyperTension)
- **கொலஸ்ட்ரால்** (Cholesterol)
- **சிறுநீரக கோளாறுகள்** (Kidney Diseases)
- **மூட்டு வலி** (Arthritis)
- **தோல் வியாதிகள்** (Skin Diseases)
- **ஹார்மோன் பிரச்சனைகள்** (Hormone Disorders)
- **மாதவிடாய் கோளாறுகள்** (Menses Disorders)
- **செக்ஸ் பிரச்சனைகள்** (Sex Disorders)
- **குழந்தையின்மை** (Infertility)
- **டயாபட்டிஸ்** (Diabetes)



**இலவச மருத்துவ ஆலோசனைக்கு**

**0208 144 1553**


## HOMOEO CARE

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

போன்: 0208 144 1553

வெப்சைட்: www.homoeocare.com

இமெயில்: homoeocare@rediffmail.com


SRUTHYS
Supported By
Carnatic Vocal Recital of
Sanjay Subramaniam
முற்றிலும் தமிழிசை
music of the night
London Sivan Centre
4a, Clarendon Rise, London SE13~5ES
Sunday, 15~March~15, 6:30pm
Tickets
Single: £20.00 Front ~ £15.00 Rear
Family: £25.00 Rear
Shri Varatharajan
Neiveli B Venkatesh
Further Detail, Please Contact
A Raveendran - 07702 404 531 - Thamboo - 07861 393 295 (South East London)
M Sathyamoorthy - 07940 726 376 S Kuhanathan - 07908 241 721 (South London)
P Navendran - 07916 134 976 Mohan - 07723 308 255 (West London)
Raji Nadaraja - 07957 307 252 (East London)
You Tube
sruthys/

Aarti tv

# உலகின் மிகப் பிரமாண்டமான தமிழ் தொலைக்காட்சி நிலையம்!

- 35ற்கும் அதிகமான தமிழ் தொலைக்காட்சி சேவைகள் ஒரேதளத்தில்
- பதிவில் இருக்கும் 7 நாட்களுக்குரிய நிகழ்ச்சிகளை எவ்வேளையிலும் பார்வையிட வசதியானது.
- Local Time Broadcast: Indian Time / UK Time / European Time
- சற்றலைற்றுகளை பொருத்த தேவை இல்லை.



OVER 500 MOVIES AVAILABLE INSTANLY

## எந் நேரத்திலும் எச் சாதனத்திலும் பார்வையிட



Roku | Windows | App Store | Google play | Windows Phone | SMARTTV

## Multi Room Viewing

ஒரே வீட்டில் பல தொலைக்காட்சிகளை வைத்திருக்கின்றவர்கள் தாங்கள் விரும்பிய தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஒரே நேரத்தில் பார்க்கமுடியும்

## சிறப்பு சலுகை

12 Month SUBSCRIPTION + FREE SET TOP BOX £99

**24 மணிநேர வாடிக்கையாளர் சேவை இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்**

100% LEGAL

UK 0203 318 2004 / 0783 276 9522

WEB WWW.AARTITV.TV

15 Days Money Back GUARANTEE

# பேனாவை தூக்கிலிட்டு தனது நூல்களை வாபஸ் பெற்ற அபூர்வ தமிழ்ப் படைப்பாளி!

கூர்வாளையும் மிஞ்சும் தனது பேனா முனை மூலம் புதிய உலகம் காண புறப்பட்ட ஓர் படைப்பாளியை, மதவாத மற்றும் சாதிய சக்திகளினால் தற்கொலைக்குத் தூண்ட முடியுமா? மானஸ்தனான அந்த அபூர்வ எழுத்தாளன் கோழைத்தனமாக தனது உயிரை மாய்த்துக்கொள்ளாவிட்டாலும், தனது போராளிப் பேனாவை சவப்பெட்டியில் கிடத்தி, பெட்டி மூடிமீது ஆணிகள் அறைந்து சவக்குழியில் இறக்கிவிட்டான்! ஆறறிவு மானிடர்களைப்போல், அந்தப் பேனா எக்காரணம் கொண்டும் மீள் பிரேதபரிசோதனைக்குள்ளாகாது! படைப்பாளியும் அனுமதிக்கமாட்டான்!

"எனது எழுதும் கை அறுபட்டு, நான் இறந்துவிட்டேன். எனது கவிதைகள், சிறு கதைகள், கட்டுரைகள், நாவல்கள் ஆகிய எல்லா படைப்புகளையும் திரும்பப் பெற்றுக் கொள்கின்றேன். எனது நூல்களை வெளியிட்ட காலச்சுவடு, நற்றிணை, அடையாளம், மலைகள், கயல் கவின் ஆகிய பதிப்பகங்கள் இனிமேல் விற்பனை செய்ய மாட்டார்கள். இதற்கான நஷ்ட ஈடு வழங்கிவிட்டேன் என்று அந்த ஆதிக்க சக்திகளுக்கு அறிவித்துவிடுங்கள்" என்ற அந்தப் படைப்பாளி மரண சாசனம் எழுதிவைத்து, தமிழக எழுத்தாளர்கள் மத்தியில் மட்டுமல்ல, தமிழுணர்வாளர்கள் மத்தியிலும் ஒரு இலக்கியத் தாக்கத்தை கொந்தளிப்பை ஏற்படுத்திவிட்டான்! யார் இந்த படைப்பாளி.

நாமக்கல்லில் ஒரு கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றும் பெருமாள் முருகன் ஓர் எழுத்தாளர் ஆவார். பல நூல்களைப் படைத்த இவர் 2010-ம் ஆண்டில் "மாதொரு பாகன்' எனும் நாவலை எழுதியிருந்தார். அந்த நாவலில், நாமக்கல் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோட்டிலிருக்கும் அர்த்தநாரீஸ்வரர் கோவில் திருவிழாவில் நடைபெறும் சம்பவம்



குறித்து எழுதியிருந்தார். நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போது சில சாதி - மத அமைப்புகள், அந்தப் புத்தகத்திலிருக்கும் கருத்துக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர் போராட்டம் நடத்தியதுடன், பெருமாள் முருகனின் உயிருக்கும் மிரட்டல் விடுக்கப்பட்டது. நாவலில் உள்ள திருச்செங்கோடு எனும் ஊர்ப் பெயரை அகற்றிவிடுவதாக பெருமாள் முருகன் உத்தரவாதம் அளித்தார். பலனில்லை! மாவட்டம் முழுவதும் கடை அடைப்பு, பந்த் என்று போராட்டம் வெடித்ததும், சர்ச்சைக்குரிய அந்தப் புத்தகத்தையே திரும்பப் பெறுவதாக போராட்டக்காரர்களிடம் எழுதிக் கொடுத்தார். இதுவும் செயல்படவில்லை. இதற்கெல்லாம் மூல காரணம்; 'மாதொரு பாகன்' முன்னுரையில் "இது எனது கள ஆய்வின் அடிப்படையில் எழுதப்பட்டது" என்று நூலாசிரியர் குறிப்பிட்டிருந்ததுதான்! கள ஆய்வு என்றால், அவர் எழுதியதற்கு ஆதாரம் இருக்கவேண்டும். போராட்டத்தை முன்னெடுத்த சமுதாயத்தினர் நூலாசிரியரிடம் ஆதாரத்தை காட்டுங்கள் என்று கேட்டபோது, கள ஆய்வுக்கான ஆதாரம் நூலாசிரியரிடம் இல்லை! கருத்துச் சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும் என்றாலும், இந்தச் சுதந்திரமும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டதுதான் என்பதை மறுக்க முடியாது. குறிப்பிட்ட நாவலில், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை பெயர் குறிப்பிட்டு இழிவாக நாவலாசிரியர் சித்தரித்துள்ளார் என்பதும், இந்து மத நம்பிக்கைகளை சிதைக்கும் வகையில் எழுதியுள்ளார் என்பதும் எதிர்ப்புக்கு காரணமாம்.

ஒரு நாவலுக்கு, நான்கு ஆண்டுகள் கழித்து மாவட்ட மக்கள் சார்பாக எழுந்த போராட்டத்தின் உச்சத்தில் நூலாசிரியர் பெருமாள் முருகன், தன்னுடைய முக நூலில், "இதுவரை நான் எழுதிய எழுத்துக்கள் அனைத்தையும் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். எழுத்தாளர் பெருமாள் முருகன் இறந்துவிட்டான். அவன் மீண்டும் பிறக்க மாட்டான்" என்று, ஒரு பேனாவின் மரண அறிவித்தலை வெளியிட்டிருக்கிறார். இதன் எதிரொலி, தமிழ்நாட்டில் கருத்துச் சுதந்திரம் நசுக்கப்படுவதாக பல 'பேனாக்கள்' தலைதூக்கி உள்ளன! தமிழகத்துக்கு இது புதிசு!

(தமிழகத்திலிருந்து கே.ஜி.மகாதேவா)



# வயது ஏற ஏற குழந்தை பேறு ஏன் குறைகிறது?



இன்றைய இயந்திரத்தனமான உலகில் நாம் அனைவரும் இயந்திரங்களாகத்தான் வாழ்ந்து வருகிறோம். பணத்தின் மோகத்தினாலும், ஆடம்பர வாழ்க்கையின் ஆசையினாலும், அந்தந்த வயதில் செய்ய வேண்டியதை மறந்து விடுகிறோம், ஒரு பெண்ணாக இருந்தாலும் சரி, ஆணாக இருந்தாலும் சரி, வாழ்வின் முக்கியமான தருணம் குழந்தைப் பேறு. இவ்வுலகில் எதை வேண்டுமானாலும் சம்பாதித்துக்கொள்ளலாம். ஆனால் குழந்தைப் பேறு அவ்வாறு கிடையாது. வயதும், காலமும் கடந்துவிட்டால், எத்தனை கோவில் குளங்கள் ஏறி இறங்கினாலும், மருத்துவரிடம் சென்றாலும், குழந்தை பெறும் பாக்கியம் எளிதில் கிடைத்துவிடாது.

நம் முன்னோர்கள் அதைத்தான், அந்தந்தக் காலத்தில் நடக்க வேண்டியதை அந்தந்தக் காலத்தில் நடத்திட வேண்டும், இல்லையேல் சிரமம் என்று கூறியிருக்கின்றனர். குழந்தைப் பேறு காலம் கடந்துவிட்டால், தன்மானப் பிரச்சினை ஆகிவிடும். சமுகத்தில் இருக்கும் ஒவ்வொருத்தரும் கேள்வி கேட்க ஆரம்பித்து விடுவார்கள்.

இனியும் காலம் கடக்காதீர்கள். காலம் தாமதிப்பதால், தள்ளிப்போகும் குழந்தைப் பாக்கியம் பற்றித் தெரிந்து கொள்வோம்.

இருபதுகளின் ஆரம்ப வயதில்தான் ஆண், பெண் இருவரும் 100 சதவீதம் குழந்தைப் பேறுக்கான உடல் மற்றும் மனத் தகுதியோடு இருக்கின்றனர். இந்த வயதில் ஒரு பெண்ணிற்கு பத்து லட்சத்திலிருந்து இருபது லட்சம் வரை முட்டைகள் கருவில் உருவாகின்றன. இதில் ஒரு லட்சத்தில் இருந்து



இரண்டு லட்சம் முட்டைகள் கருத்தரிக்க நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும். அதேபோல்தான் ஆணிற்கும் விந்தில் அதிக சக்தியும், வேகமும் இருக்கும். கருத்தரிக்க, இந்த வயதுதான் ஏற்றது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். இருபதுகளின் கடைசிகளில் பெண்களுக்கு கருத்தரிக்கும் வலிமை குறைகிறது. 75 சதவீதம் வாய்ப்புகள் இருக்கின்றன. முப்பதுகளில் ஆரம்பத்தில், மாதவிடாய் காலத்தில் பெண்களின் கருமுட்டைகளின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் குறையத் தொடங்கும். இதனால் வாய்ப்புக்கள் குறையும். முப்பதுகளின் கடைசித் தருணங்களில் குழந்தைப் பேறுக்கான வாய்ப்பு 50 சதவீதமாகிறது. இயல்பாக நாற்பது, நாற்பத்து ஐந்து வயதில் பெரும்பாலான பெண்களுக்கு மாதவிடாயே நின்றுவிடுகிறது. இதனால் நாற்பதுகளில் குழந்தைப் பேறு என்பது மிகவும் சிரமம்தான்.

45 வயதுக்கு மேல் சில பெண்களுக்கு மட்டுமே இந்த வயதில் குழந்தைப் பேறு வாய்ப்பு உண்டு. ஆணின் விறைப்புத் தன்மை, வேகம் மிகவும் குறைந்திருக்கும் தருவாயில் குழந்தைப் பேறு மிகமிகக் குறைகிறது. ●

# விளையாட்டு





எழுபது வயது நிரம்பிய இளைப்பாறிய பாடசாலை அதிபர் சிதம்பரமும் அவரது மனைவி பரிமளமும் காற்று வாங்குவதற்காக அவர்களது வீட்டிற்கு அருகேயிருக்கும் அந்த அழகிய பூங்காவிற்கு வந்திருக்கிறார்கள். சிதம்பரத்தின் அருகில் டைகர் என அழைக்கப்படும் அவரது செல்லப்பிராணியான நாய். சிறுவர்களும் பெரியவர்களுமாக பூங்கா திருவிழா கோலம் கொண்டிருக்கிறது. ஏதேதோ சிந்தித்துக் கொண்டே மெதுவாக நடந்து கொண்டிருந்த சிதம்பரம் ஒரு மரத்தடியில் நின்று சிறுவர்கள் குழு ஒன்று விளையாடும் ஒரு விளையாட்டை ரசித்துப் பார்க்கிறார்.

சிறிது நேரம் அதானித்தபின் - அந்த விளையாட்டிற்கு பெரிதாக எந்தவித அர்த்தமும் இருப்பதாக சிதம்பரத்திற்கு தெரியவில்லை. அது ஒரு கடினமான விளையாட்டாகக்கூட அவருக்குப்படவில்லை. ஒரு வகையில் பார்த்தால் அது ஒரு வெறும் முட்டாள்தனமான விளையாட்டாகவே அவருக்கு தெரிகிறது. ஆனால் அதை விளையாடும் சிறுவர்களோ மகிழ்ச்சியில் துள்ளிக்குதிக்கிறார்கள். அடிக்கடி பெரிதாக சத்தமிட்டுக்கொள்கிறார்கள். தேவையில்லாமல் பதட்டப்படுகிறார்கள். ஒருவன் பிழைவிட்டால் கோபத்தில் அவனைத் திட்டுகிறார்கள். தோல்வியை தழுவும்போது சிலர் அழுகிறார்கள். வெற்றி பெற்றவனை பாராட்டுகிறார்கள். அவன் பெருமையில் நிலத்தில் விழுந்து உருளுகிறான்.

சிதம்பரம் அருகில் நின்ற தனது மனைவி பரிமளத்திற்கு கூறினார்:

பாவம் இந்த சிறுவர்கள்! ஒன்றுமே இல்லாத ஒரு விடயத்திற்கு தாங்களாகவே ஒரு அர்த்தத்தை கொடுத்து மகிழ்ச்சியில் திளைக்கிறார்கள் - கவலையில் வாடுகிறார்கள். இது வெறும் விளையாட்டுதான் என்று உணர்ந்து கொள்வதற்கு அவர்களுக்கு வயதும் அனுபவமும் போதாது.

ஆரம்பத்திலிருந்தே இவையெல்லாவற்றையும் நன்றாக பார்த்தும் கேட்டும் கொண்டு வந்த சிதம்பரத்தின் செல்லப்பிராணியான டைகர் தனக்குத் தானே பேசிக்கொண்டது:

பாவம் எனது எஜமான்! மனிதர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதுமே நினைப்பது - செய்வது எல்லாமே அர்த்தமற்ற வெறும் முட்டாள்தனமான விளையாட்டுகள்தான் என்று உணர்வதற்கு இவருக்கு அறிவும் அனுபவமும் போதாது. போன வாரம்தான் இவரது பேரனுக்கு திருமணம் நடந்தது. கடந்த ஐந்து வருடங்களாக அமெரிக்காவில் பல்கலைக்கழக காதலர்களாக இருந்த பையனையும் பெண்ணையும் இங்கு அழைத்து - இனியும் நீங்கள் காதலர்களாக இருக்க கூடாது - உங்களுக்கு நாங்கள் திருமணம் செய்து வைக்கப் போகிறோம் என்று ஊரைக்கூட்டி - பாடுபட்டு தேடிய பணத்தை பெருமளவு செலவு செய்து - பலருடைய நேரத்தை வீணாக்கி - மணவறை அமைத்து - மேள தாளம் ஒலிக்க - மந்திர ஒலி முழங்க - அம்மியை மிதிக்க வைத்து - அருந்ததியை காட்டி பெரியவர்கள் என்று தம்மை தாமே அழைத்துக்கொண்டு இவர்கள் அன்று விளையாடிய முட்டாள் விளையாட்டை நினைத்தால் எனக்கு இப்பொழுது சிரிப்பு வருகிறது. அன்று எத்தனை பேர்கள் தேவையில்லாமல் பதட்டப்பட்டார்கள் - கோபப்பட்டார்கள் - மகிழ்ச்சியடைந்தார்கள்!

இங்கு எல்லாமே அர்த்தமற்ற வெறும் முட்டாள்தனமான விளையாட்டுகள்தான். விளையாட்டின் பெயர் தான் மாறுகிறதே தவிர விளையாட்டு நிற்பதில்லை.

# கூர்ப்பு

கண்டதும் கற்று பண்டிதன் ஆவாய் - என்ற முதுமொழியை தவறாது கடைப்பிடிப்பவன் முரளி. அவன் எதையும் படிப்பான் - எப்போதும் படிப்பான் - எங்கு வேண்டுமானாலும் படிப்பான். தனது அறிவை பெருக்குவதில் அப்படி ஒரு ஆசை அவனுக்கு. கடந்த ஒரு மாத காலமாக அவனது மனத்தை குடைந்து கொண்டிருக்கும் ஒரு விடயம் - அவன் கடைசியாக படித்த டார்வினின் அந்த கூர்ப்பு கொள்கை. அது எப்படி நீரில் நீந்திய உயிரினங்கள் தரைக்கு வந்து - தரைக்கு வந்தவை நடக்க - நடந்தவை பறக்க - ஒன்றிலிருந்து ஒன்று வந்து - வந்தது இன்னொன்றாகி - குரங்கு மனிதனாகி - இது எப்படி நடந்தது என்று எவ்வளவோ யோசித்தும் முரளிக்கு விளங்கவில்லை.

டார்வின் ஒரு விஞ்ஞானி - அவர்தான் இவ்வாறு கூறுகிறார் என்றால் - அது எப்படி அவருக்கு எத்தனையோ ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த ஒரு சித்தர்கூட அதே விடயத்தை இன்னும் தெளிவாக - புல்லாகி - பூடாகி - புழுவாகி - மரமாகி - என்று பாடியிருக்கிறார். புழு எப்படி மரமாகிறது? பறவை எப்படி பாம்பாகிறது? முரளிக்கு எல்லாமே சிதம்பர சக்கரமாக இருக்கிறது.

இது பற்றி பலமாக சிந்தித்தவாறே கடற்கரைக்கு நடந்து வந்த முரளி எதுவுமே செய்யத்தோன்றாமல் கடலையேவெறித்தபடி நீண்ட நேரமாக அமர்ந்திருந்தான். காற்று பலமாக வீசுகிறது. கடலில் பெரிய அலைகளும் சிறிய அலைகளுமாக மாறி மாறி தோன்றிய வண்ணமே இருக்கின்றன. அந்த அலைகளையே சிறிது நேரமாக அவதானித்துக் கொண்டிருந்த முரளியின் மனதில் அந்த அலைகளைப் போலவே சில எண்ணங்கள்:



# என்ன உலகமடா?


## Doctor ஸ்ரீதரன்

அமைதியாக இருக்கும் கடல் சலனப்படுத்தப்படும்போது அதில் அலைகள் உண்டாகின்றன - ஒன்றல்ல - இரண்டல்ல - ஓராயிரம் அலைகள் - தோன்றிய எந்த அலையுமே நிரந்தரமாக நிலைத்து நிற்பதில்லை - தோன்றி - சிறிது நேரம் நிலைத்து - மீண்டும் கடலுடனேயே கலக்கிறது அலை - கலந்த அலை மீண்டும் இன்னொரு அலையாகிறது - முதல் தோன்றிய அலையும் அடுத்து தோன்றும் அலையும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை - ஒவ்வொரு அலையும் ஒவ்வொரு விதம் - ஒவ்வொரு உருவம். எத்தனை அலைகள் தோன்றினாலும் ஒன்றுபோல இன்னொன்று இல்லை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம்.

கடந்த ஒரு மாத காலமாக முரளியின் மனதைக் குடைந்து கொண்டிருந்த பிரச்சினைக்கு இப்பொழுது பதில் கிடைத்து விட்டது.

புல்லாகி - பூடாகி - புழுவாகி - மரமாகி - பல் மிருகமாகி - பறவை - பாம்பாய் - கந்தையாவாகி - சுப்பிரமணியமாகி - அகிலாவாகி - ஆண்டாளாகி - தமிழனாகி - - - அலைகள் ஓய்வதில்லை.

இங்கிருப்பதும் பூரணம் - அங்கிருப்பதும் பூரணம் - பூரணத்திலிருந்து தான் பூரணம் வந்தது - பூரணத்திலிருந்து பூரணம் வந்த பின் எஞ்சியிருப்பதுவும் பூரணம்.



# சிவப்பு



மிருகக் காட்சி சாலையில் பிறந்த - ஒரு வயதே நிரம்பிய அந்த குரங்குக் குட்டி ஒரு நாள் தன் தாயிடம் கேட்டது:

அம்மா! எனக்கு நீண்ட நாட்களாக ஒரு சந்தேகம். அது மனிதர்களைப் பற்றியது. இங்கு வரும் இளம் காதல் ஜோடிகள் ஒருவரை ஒருவர் உரசிக்கொண்டு மிகவும் நெருக்கமாக நடந்து செல்கிறார்கள். முகத்தில் அசடு வழிய ஒருவரை ஒருவர் பார்க்கிறார்கள். அடிக்கடி முத்தமிட்டுக் கொள்கிறார்கள். தெய்வீக காதல் - பூர்வ ஜென்ம பந்தம் - பாக்கியம் - அழகிய சீதேவி - என்னும் வார்த்தைகளை அடிக்கடி உபயோகிக்கிறார்கள்.

ரொம்பவும் பெருந்தன்மையுடன் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து நடந்து கொள்கிறார்கள். காதலி இங்கு விற்கும் எதைக் கேட்டாலும் காதலன் உடனே அதை வாங்கிக் கொடுத்து விடுகிறான்.

ஆனால் திருமணமாகிய - சிறிது வயதான ஜோடிகளோ விலகி விலகி நடக்கிறார்கள். ஒருவரை ஒருவர் அடிக்கடி வெறுப்பாக முறைத்துப் பார்க்கிறார்கள் - சண்டை வேறு போட்டுக் கொள்கிறார்கள். அப்பொழுது பூர்வ ஜென்ம பாவம் - அசிங்கமான மூதேவி - முட்டாள்தனமான காதல் - போன்ற வார்த்தைகளை அடிக்கடி உபயோகிக்கிறார்கள்.

மனைவி இங்கிருக்கும் எதைக் கேட்டாலும் கணவன் வாங்கி கொடுப்பதே இல்லை. மாறாக - அப்பன் வீட்டிலிருந்து காசு கொண்டு வந்தாயா? - என்று கூச்சலிடுகிறார்கள். இது ஏன் என்று எனக்கு விளங்கவில்லை அம்மா. கூறி விட்டு விலகிக் கொண்டது தாய் குரங்கு. எதுவுமே புரியாமல் தலையை சொறிகிறது குட்டி குரங்கு.

ஒரு நாள் - தனது கூட்டிற்கு முன்னால் நின்று தன்னையே நோக்கும் அந்த யுவதியின் கையில் இருக்கும் அந்த அழகான தோல் பையினுள் என்ன என்ன எல்லாம் இருக்கும் என்று குட்டி குரங்கு சிந்திக்கிறது. அதன் மனத்தினுள் அந்த பையைப்பற்றி ஆயிரம் கற்பனைகள். அது மட்டும் எனக்கு கிடைத்துவிட்டால் - எவ்வளவு கவனமாக பாதுகாப்பேன் அதை - எவ்வளவு பெரிய பாக்கியசாலி நான்!

திடீரென அந்தப் பெண்ணுடன்கூட வந்திருந்த சிறுமி தனக்கு அந்த பை வேண்டுமென்று அடம் பிடிக்கிறாள். கையிலிருந்த பிஸ்கட்டை வீசி எறிந்து விட்டு நிலத்தில் விழுந்து புரளுகிறாள். வேறு வழியில்லாது பை கை மாறுகிறது.

பையை நெஞ்சுடன் அணைக்கிறாள் சிறுமி. முத்தமிடுகிறாள். சிறிது நேரம் பையுடன் விளையாடிய பின் அதை ஆவலுடன் திறக்கிறாள் சிறுமி. குட்டி குரங்கு அதை விட ஆவலாக எட்டிப் பார்க்கிறது. பையினுள் ஒரு கைக்குட்டை - ஒரு சீப்பு - சில அலங்கார சாதனங்கள். பையை வீசி எறிகிறாள் சிறுமி.

அம்மா! எனக்கு எல்லாமே புரிந்துவிட்டது என்று ஆர்ப்பரிக்கிறது குட்டி.

ஜெ சக்தி சக்திதாசன்



# வண்ணமயமான கண்ணதாசன்!

**கவியரசர் கண்ணதாசனின் பாடல்கள் வண்ணமயமானது. அவரது ஆளுமை அப்படி. அலாதியான இயல்பு, மனதில் பட்டதைச் சொல்லும் குணம், கூர்மையான புத்திசாலித்தனம், ரசனை, மொழித் திறமை, கவித்துவம் ஆகியவைகளை அள்ளிப்பருகலாம்.**

தமிழைத் தேனாக்கி, தேனை விருந்தாக்கி, இனிய சுவை நாவினால் மட்டும் சுவைப்பது அல்ல, செவியினாலும் கேட்டு அதைச் சிந்தையில் குளிப்பாட்டி அதனுள் திளைத்திருக்கும் எம் தமிழின் அருஞ் சுவையைச் சுவைக்கும் வகையாக்கித் தந்தவர் எம் கவியரசர் கண்ணதாசன்.



சொற்களைக் கூட்டி அக்கூட்டின் கலவையினால் மொழியைச் செழிப்பாக்கி எந்த உணர்வை நாம் உணர வேண்டுமோ அந்த உணர்விற்கோர் வரைவிலக்கணமாய் தன் பாடல் வரிகளை அமைப்பதில் கவியரசருக்கு நிகர் அவரேதான்.

அவரது பாடல்களில் நான் என்னை மிகவும் மகிழ்ச்சியுடன் தொலைப்பேன். அத்தொலைந்துபோன கணங்களுக்குள் நான் மிதந்து திரியும் தூரம் அற்புதமானது.


அப்படியான ஒருவேளை எனது மனதைப் பந்தாடிய கவியரசரின் சொல்வளம் பொருந்திய இனிய தமிழ்ப்பாடல். காதலே தித்திக்கும் என்பார்கள். அத்தித்திப்பின் சுவையை இத்தனை அற்புதமாகச் சொல்ல இவரல்லால் எவரால் முடியும்?

ஆமாம்! அர்ச்சுனனின் மகன் அபிமன்யூ தனது மனைவியுடன் காதல் பொங்கக் களிப்புறும் பாடல்; எத்தனை அர்த்தம் பொதிந்த வரிகள். என் தமிழ் இத்தனை இனியதா என எண்ணிப் பெருமிதம்கொள்ள வைக்கும் கவியரசரின் கற்பனைத்திறன்.

'வீர அபிமன்யூ' படத்தில் கவியரசரின் வரிகள் கே.வி.மகாதேவனின் இசையில் பி.பி.ஸ்ரீநிவாஸ் அவர்களினதும் பி.சுசீலா அவர்களினதும் குரலில் ஒலித்த இனிமையான பாடல்.

'அவன் அவளைப் பார்த்தானாம்! பார்த்ததும் அவளின் மீது மையல் கொண்டு சிரித்தானாம். அது மட்டுமில்லையே, அவளைப் பக்கத்தில் வேறு அழைத்தானாம்.

அவளைக் கண்டதும் அவள் மீது அவன் மையல் கொண்டதும் அம்மையல் கொடுத்த இனிப்பான உணர்வினால் அவன் அவளையே தேன் என்று நினைத்துவிட்டானாமே! மலையில் இருந்து கொண்டு



## விரக்தியின் வெளிப்பாடு

கவியரசருக்கு ஒரு தடவை பண நெருக்கடி. ஒரு பெரிய தொகை அப்போது அவருக்குத் தேவைப்பட்டது. மிகுந்த நம்பிக்கையுடன் சென்று, தன் சகோதரர் ஏ.எல்.சீனிவாசனிடம் அந்தத் தொகையைக் கெட்டார். தனது சகோதரரே தன்னிடம் கைவிரித்த நிலையை எண்ணி கவியரசர் மனம் கசந்திருந்த தருணம் அது. அப்போது ஒரு படத்துக்கு பாடல் எழுத வேண்டி இருந்தது. அப்போது அவர் எழுதிய பாடல்தான்:

அண்ணன் என்னடா தம்பி என்னடா
அவசரமான உலகத்திலே....
ஆசை கொள்வதில் அர்த்தமென்னடா
காசில்லாதவன் குடும்பத்திலே...

வரும் தேன் இருக்கிறதே அதற்கு ஓர் தனியான சுவையுண்டு. இங்கே எம் கவியரசர் தமிழை எத்தனை லாவகமாகக் கையாள்கிறார் பாருங்கள்...

மலையில் இருந்து கொண்டுவரும் "மலைத்தேன்" என்று எண்ணி அவன் "மலைத்தானாம்!" எப்படி இருக்கிறது?

பார்த்தேன் சிரித்தேன்
பக்கத்தில் அழைத்தேன்
அன்று உனைத் தேன் என நான் நினைத்தேன்
அந்த மலைத் தேன் இதுவென மலைத்தேன்
பார்த்தேன் சிரித்தேன்
பக்கத்தில் அழைத்தேன்
உனைத் தேன் என நான் நினைத்தேன்
அந்த மலைத் தேன் இதுவென மலைத்தேன்

கொடியிலுள்ள தேன் "கொடித்தேன்" ஆம் பூங்கொடியிலுள்ள தேனல்லவா! அது இனி அவர்களின் குடித்தேனாம் பாருங்கள்! அது மட்டுமா? பார்வையினாலேயே ஒரு படி தேனை அள்ளிக் குடித்தாயிற்றாம்! என்னே காதல் உணர்வின் மகத்துவம்? எந்துணை அழகாம் எம் தாய்மொழி? எத்தகைய வித்தகராம் எம் கவியரசர்? இனிப்பான தேனைப் பருகும்போது நாம் எவ்வளவு கவனத்துடன் ஒரு துளி கூடச் சிந்தாமல் பருகுவோம். அதைவிட கவனத்துடன் அவ்வழகினை அவர்கள் அள்ளிப் பருகுகிறார்களாம். அக்களிப்பு அவர்களுக்கு இனிப்பையளிக்கிறதோ? அப்படியே அள்ளி எடுத்து அவளை அணைத்து அவளின் அழகினை ரசிக்கிறானாம் அபிமன்யூ.

கொடித் தேன் இனி எங்கள் குடித் தேன் என
ஒரு படித் தேன் பார்வையில் குடித்தேன்
கொடித் தேன் இனி எங்கள் குடித் தேன் என
ஒரு படித் தேன் பார்வையில் குடித்தேன்
துளித் தேன் சிந்தாமல் களித்தேன்
ஒரு துளித் தேன் சிந்தாமல் களித்தேன்
கைகளில் அணைத்தேன் அழகினை ரசித்தேன்
பார்த்தேன் சிரித்தேன் பக்கம் வரத் துடித்தேன்
உனைத் தேன் என நான் நினைத்தேன்
அந்த மலைத் தேன் இவரென மலைத்தேன்

அவள் என்ன சொல்கிறாள்? மலர்களில் சுரக்கும் தேனைப்போல அவள் மலர்ந்தாளாம். யாருக்காக? தனக்காகவா? இல்லையே. அதனைச் சுவைக்க வரும் வண்டான அவனுக்காக அல்லவா? அப்படி வளர்ந்த அவள் தக்க பருவத்தில் அவனை மணந்தாளாம்.

மலர்த் தேன் போல் நானும் மலர்ந்தேன் உனக்கென
வளர்ந்தேன் பருவத்தில் மணந்தேன்
மலர்த் தேன் போல் நானும் மலர்ந்தேன் உனக்கென
வளர்ந்தேன் பருவத்தில் மணந்தேன்.

இக்கதையின் இயக்குனர் கவியரசரிடம் இக்கதையின் முடிவின்படி அபிமன்யூ மரணிக்கும் சம்பவத்தைச் சூசகமாக இப்பாடலில் தெரிவிக்க வேண்டும் எனும் தன் விருப்பத்தைக் கூறினாராம். இப்பாடல் காட்சி முடிந்த அடுத்த கட்டத்தில் அபிமன்யூவின் மரணம்.

கருவைக் கொடுத்தால் என் குருவான கவியரசர் கண்ணதாசன் சும்மா இருப்பாரா, என்ன? இதோ அடுத்த வரிகளைப் பாருங்கள்.

எடுத்தேன் கொடுத்தேன் சுவைத்தேன்
எடுத்தேன் கொடுத்தேன் சுவைத்தேன்
இனி தேன் இல்லாதபடி கதை முடித்தேன்
இனி தேன்
இல்லாதபடி கதை முடித்தேன்

ஆமாம் அபிமன்யூ மரணமடையப் போகிறான் அல்லவா?

இனி அவர்கள் வாழ்வில் எங்கே "தேன்" இருக்கப் போகிறது? அத்தகைய ஒரு தித்திப்பு இல்லாதவாறு கதை முடியப் போகிறது என்பதை எத்தனை அருமையாக இரு வரிகளுக்குள் பூட்டி வைத்துவிட்டார் எம் கவியுலக வேந்தன்.

அபிமன்யூவின் கதை முடியப்போவதை இதைவிட சூசகமாக எப்படிச் சொல்லியிருக்க முடியும்?

கவியரசர் கண்ணதாசன் தமிழர்களாகிய எங்களுக்கு கிடைத்த ஓர் அரிய சகாப்தம். அவரைப் போன்ற அனுபவ அறிவு மிக்கவர்கள் அகிலத்தில் சொற்பமே! அவருடைய அற்புதமான பாடல் ஒன்றை உங்களுடன் சுவைக்க கிடைத்த சந்தர்ப்பத்தினால் மகிழ்கிறேன். •



# வரலாறுகளை உடைத்து வீசி விட்டது யுத்தம்!




முழு வாழ்க்கையின் அந்திமத்தை அழித்துவிட்டு இரத்தக் கடலாகக் கிடக்கிறது நந்திக்கடல். எல்லா வரலாறுகளையும் உடைத்து வீசிவிட்டது யுத்தம். முந்தியென்றால், கிட்டப்போனாலே ஒரு பரவசம் வரும். ஏனென்று தெரியாத பரவசம்.

"சாப்பிட்டுவிட்டு இலையில் மீதமிருக்கும் உணவைக் குப்பைத் தொட்டியில் போடாதீர்கள். அது பழுதாகவில்லை. அதனை பசியோடு இருக்கும் ஏழைக்கு கொடுங்கள்" - அன்னை தெரேசா.

எனது 7 வயதிலேயே அப்பா இறந்து விட்டார். ஐயாவையும் அம்மாவையும் யாரோ சூனியம் வைத்துப் பிரித்துவிட்டார்கள் என்றுதான் அம்மா சொல்லுவா. சிலவேளை இந்தக் காதல் கலியாணத்தில் விருப்பம் இல்லாத அம்மாவின் அண்ணன்தான் செய்திருப்பாரோ என்று அம்மாவுக்கு இன்னும் சந்தேகம்.

இப்பொழுதும் அம்மா அதனைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறா. அப்பா அம்மாவை விட்டுவிட்டு போனதன் பிறகு அம்மய்யாதான் எங்களை வளர்த்தெடுத்தார். அம்மாவின் ஐயாவை அப்படித்தான் நாங்கள் கூப்பிடுவோம்.

தங்கச்சி பிறந்த காலம்தான் ஐயாவை எங்களிடம் இருந்து பிரித்துவிட்டது என்று எங்கள் ஊர்க்காரர்கள் எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்தனர்.

அம்மாய்யாதான் எனக்கு எல்லாம் என்றிருந்த காலம் அது. ஐயாவின் பாசம் என்னோடு எப்பொழுதும் இருக்கும் நினைவு. கருவேலன்கண்டல் குணமண்ணையின் தேத்தண்ணி கடையில் தோசையும் சம்பலும் வாங்கித் தந்தது என்று இன்னும் அடிநாக்கில் அந்த ருசியும் தோசையின் மணமும் ஐயாவின் மனமும் அடிமனதில் ஒட்டிப்போய் கிடக்கிறது.

ஐயா இல்லையென்றாகிப் போனபின்பு அம்மய்யாதான் எங்களுக்கு எல்லாமாகிப் போனது. அம்மய்யா படிப்பறிவு இல்லாதவர். ஆனால் மிகப் பரந்த அனுபவ, அரசியல், சமூக அறிவு உடையவர். ஊரில் மிக நல்ல மனிதர். அவரைத் தெரிந்தவர்கள் எல்லாம் இன்றும் அவருக்காக என்னை மதிக்கிறார்கள்.

என்னை எழுத்தாளர், கவிஞர், அறிவிப்பாளர் ஆக்கியது எது என்று எல்லாப் பேட்டியிலும் கேட்கிறார்கள். எனக்கு குரு யாருமில்லை. என்னை எவரும் ஆகர்சிக்கவில்லை.

உண்மையில் என்னை அருளாமல் கொள்ளாமல் செப்பனிட்டவர் எனது அம்மய்யா என்றுதான் சொல்லுவேன்.

ஆனால் அதற்கு அவர் என்மீது எந்த அதீத முயற்சியும் எடுக்கவில்லை. என்னை "படி படி" என்று விரட்டவில்லை. என்னை அடிக்கவில்லை. ஒன்றுமே செய்யாத ஒரு விவசாயி அவர்.

அனேக அரசியல்வாதிகளோடு பழக்கம் கொண்டிருந்ததாக சொல்வார். தந்தை செல்வா மீது அதீத பற்றுக் கொண்டிருந்தவர். தந்தை செல்வா தள்ளாத வயதில் ஒட்டுசுட்டான் கோவில் வெளிவீதியில் ஒரு கூட்டத்திற்கு வந்தபோது முள்ளியவளையில் இருக்கும் பண்டாரம் ஒருவருக்கு சொல்லி செல்வா அளவிற்கு ஆளுயர பூமாலை ஒன்று ஓடர் கொடுத்து செய்வித்து இதனை அவரது தள்ளாத வயதில் அவர் கொண்டு போய் போட்டு விட்டு அழகு பார்த்தவர்.

ஒவ்வொரு நாள் விடியற்காலையிலும் ஒட்டுசுட்டானுக்கு புளியங்குளம் வீட்டில் இருந்து நடந்து போய் 'தினபதி' பேப்பர் வாங்கி வந்து வைத்திருப்பார். மாலையில் நான் பள்ளிக்கூடத்தில் இருந்து வந்ததன் பிறகு அவர் ஈஸி செயரில் படுத்துக் கொண்டிருப்பார்.










அவருக்கு பக்கத்தில் இருந்து பத்திரிகையின் தலையங்கம் முதல் இறுதிப் பக்கத்தின் கடைசி வரிவரை வாசிக்க வேண்டும். மிகவும் உரக்க வாசிக்க வேண்டும்.

உண்மையில் அந்த அறிவும், இந்த வாசிப்பும்தான் என்னை இந்தளவிற்கு கொண்டுவந்து விட்டதோ என்று இன்னும் நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

அவர் வாழ்ந்த, நான் வாழ்ந்த வீடு இப்பொழுது என்னவாகிக் கிடக்கிறது என்று எனக்குத் தெரியாமலேயே போய்விட்டது. ஒட்டுசுட்டானில் இருந்து ஒரு மைல் தூரத்தில் செழிப்பான எனது கிராமம். வாழை வேலி நெடுக போட்டார் அம்மய்யா. ஒவ்வொரு நாளும் வாழைப்பழம் சாப்பிடுவோம். வீட்டோடு சேர்த்து தென்னை மரங்கள், மாமரங்கள், நெல் வயல், தோட்டக்காணி, இரண்டு கிணறுகள் என்று செல்வச் செழிப்போடு வாழ்ந்த மனிதர்கள் நாங்கள்.

வியர்வையால் கட்டிய வீடு அது, என் கிராமம் அவ்வளவு அழகானது, குளம் நிறைந்த தண்ணீர், பாடசாலைகள், சுற்றிவர வயல்கள், தோட்டங்கள், நல்ல மனிதர்கள் என்று எல்லாம் மயானமாகிவிட்ட ஒரு பூமியாகி கிடக்கும் இப்பொழுது. வெறும்காடு பத்திப்போய்க் கிடக்கும் இப்பொழுது.

பார்த்துப் பார்த்துக் கட்டிய கிராமத்து உழைப்பாளிகளின் வீடுகள் எல்லாம் என்ன ஆகி இருக்குமோ தெரியாது.

ஒவ்வொரு குச்சு ஒழுங்கையிலும் எனது கால்கள் பட்டுத் திரிந்த காலம் நினைவுக்கு வருகிறது.

வற்றாப்பளை அம்மாள் கோவில் என்னவாகி கிடக்கிறதோ? நந்திக்கடல்தான் அப்பொழுது எங்களுக்கு ஒரு புனித நீர்த்தடாகம். அதில் இருந்து வைகாசி பருவம் நேரம் தண்ணி எடுத்துக் கொண்டுவந்து காட்டு விநாயகர் கோவிலில் தண்ணி ஊத்தி விளக்கு எரிப்பார்கள்.

எல்லாம் காடு பத்திப்போய்க் கிடக்கும். என் தெருக்கள் ஒவ்வொன்றும் எனதானவை. ஆனால் இப்பொழுது அவை அன்னியருக்கு சிங்களவருக்கே ஆகிவிடுமோ என்று மனதில் பேரச்சமாக இருக்கிறது.

வற்றாப்பளையில் நின்று பார்த்தால் நந்திக் கடல் ஒரு தேவதையைப் பார்ப்பதுபோல் பரவசமாயிருக்கும். ஆனால் இப்பொழுது அதுதான் ரத்தம் குடித்த கடலாக கிடக்கிறது.

முழு வாழ்க்கையின் அந்திமத்தை அழித்துவிட்டு இரத்த கடலாகக் கிடக்கிறது நந்திக்கடல். எல்லா வரலாறுகளையும் உடைத்து வீசிவிட்டு யுத்தம். முந்தியென்றால் பண்டார வன்னியன் நினைவுக்கல்லுக்கு கிட்டப்போனாலே ஒரு பரவசம் வரும். ஏனென்று தெரியாத பரவசம். வீரம் அவன் என்று. இப்பொழுது எங்களது கண்ணுக்கு முன்னால் எல்லாம் அழிந்து போய்க் கிடக்குது. பண்டார வன்னியன் ஆண்ட பூமி என்ற பெயர் மட்டுமே வெறுமையாக மனதினில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. முந்தி சங்கிலியன் ஆண்ட பூமி என்று யாழ்ப்பாணத்தை பெருமை பேசி திரிந்தோம். இப்பொழுதும் எமக்கு எமக்கான எமக்கேயான எங்களுடைய ஒரு துண்டு நிலமாவது சொந்தமாகக் கிடைக்குமோ என்று யோசிக்கக் கூட பயமாகக்கிடக்குது.

ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈசுவரர் என்ன ஆனாரோ தெரியாது. இரிகேஷன் டிப்பாட்மெண்ட், முத்தையன் கட்டுக்குளம், ஓட்டுத் தொழிற்சாலை, மானுருவி ஏத்தம், கருவேலன்கண்டல, பாடசாலை, கற்சிலைமடு, கள்ளுத் தவறணை எல்லாம் எங்களுடையவை.

ஆனால் இவையெல்லாம் எங்களுக்கு மீண்டும் தருவார்களா? மாட்டார்களா? தருவோம் என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள். நிம்மதியாக இருந்து விட்டுப்போகிறோம். தரமாட்டேன் என்றால் நாங்கள் அங்கேயே செத்திருக்கலாம். ஏன் எங்களை உயிரோடு கிடத்தி அணு அணுவாக கொல்கிறீர்கள்?

• இளைய அப்துல்லாஹ்



# THARANI JEWELLERY

அதி குறைந்த வட்டி
வீதத்தில் அடைவு பிடிக்கும் தலை சிறந்த நிறுவனம்



Our Rates of Interest
2.95%

Loan Term: Up to 6 Months

Documents Required:

- Photo ID - Passport or
- UK Driving License
- Proof of Address - Any Utility Bill or Bank Statement not Older than 3 Months.

Terms and Conditions The maximum loan term is for 6 months. If the loan cannot be repaid during this period, a renewal can be made, after interest on the loan is paid in full. If you have borrowed £75 or less, and if you redeem the loan in 6 months time, we will keep the pledged Gold. If you have borrowed more than £75 we are entitled to sell your pledge to cover the outstanding. The pledge remains your property until it is sold, but the loan remains outstanding and interest will continue to be charged till the loan is redeemed, or pledge is sold, if you have borrowed over £100, we will write to give you 14 days notice of our intent to sell your pledged Gold.

Interest on Gold loans is charged on daily basis. For example the interest on a £1000 loan after 15 days will be £16.25. For closing the loan after 15 days, you have to pay £1016.25. Non-redemption of these Gold will not affect your credit rating. Please keep the pledge receipt safely. You need to return the original pledge receipt to us for redeeming your Gold.

54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.

Tel: 020 8902 7111, 020 8902 6777

ashni23@aol.com

# ENGINE TEC MOTORS

we offer Facilities for

- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- ALL Types of Repair & Body Work
- Insurance Work Undertaken

என்ஜின் ரெக் மோட்டர்ஸ்
உங்கள் கார் திருத்த
வேலைகளுக்கு
நம்பிக்கையான நிறுவனம்

Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945

Email: vel@etmluk.com
rajan 339c@gmail.com
www.etmluk.com



Unit 5,339 London Road, Mitcham, Surrey CR4 4BE

தமிழிலேயே பேசி உங்கள் கார் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.

லலிதா ராம்

# உலகின் எட்டாவது அதிசயம்
# தமிழகத்தையே வியக்க வைத்த தவில் மேதை தட்சணாமூர்த்தி





காருக்குறிச்சி அருணாசலம் போன்ற நாகஸ்வர சிகரங்களுக்கு இணுவில் தெட்சணாமூர்த்தி தவில் வாசித்த காலத்தைப் பொற்காலம் என்றுதான் சொல்ல வேண்டும். அவரைப்போன்ற தவில் வித்துவான் அவருக்கு முன்னாலும் இல்லை, அவருக்குப் பிறகும் வரப்போவதில்லை. யார்க்கும் எட்டாத கற்பனையும், அதைச் செயல்படுத்திக் காட்டும் ஆற்றலும் கைவரப்பெற்ற அந்த மாமேதை, துரதிர்ஷ்டவசமாய், 1975ம் ஆண்டு, தனது 42வது வயதிலேயே மறைந்தார்.

தமிழகத்திலிருந்து இலங்கை சென்று பெரும் பெயர் ஈட்டியவர்கள் பலருண்டு. இலங்கையில், யாழ்ப்பாணத்தில், இணுவில் என்ற ஒரு சிறு கிராமத்தில் பிறந்து, தமிழகத்தில் ஒவ்வொரு ஊரிலும், "இவர் வந்து வாசிக்கமாட்டாரா?" என்று ஏங்க வைத்தவர்தான் இவர். அவர்தான் தவில் மேதை, குபேர ஞானபூபதி தட்சணாமூர்த்தி.

மறைந்த நாகஸ்வர மேதை செம்பனார்கோவில் வைத்தியநாதன், "நாங்கள் யாழ்ப்பாணத்துக்குச் சென்றபோது, ஒரு சிறுவன் வாசிக்கிறான் என்று சொன்னார்கள். காவேரிக் கரையில் நாம் பார்க்காத கலைஞர்களா என்று சற்று இளக்காரமாய்த்தான் நினைத்தோம். அந்தச் சிறுவன் வாசித்துக் கேட்டதும் ஸ்தம்பித்துப் போனோம்," என்று கூறியுள்ளார்.

மேதைகளின் இசைக்கு ஒரு பொதுத் தன்மை உண்டு. பற்பல அடுக்குகளாய் அமைந்து, பாமரர்க்கும் பண்டிதர்க்கும், ரசிக்கவும் கற்கவும் ஏதோ ஒன்று பொதிந்திருக்கும் தன்மையே அது.

தேர்ந்த கர்நாடக இசை ரசிகர்களே, லய நுணுக்கங்களை போதிய அளவு கவனம் செலுத்தி ரசிக்காத நிலையில், தமிழகத்தின் குக்கிராமங்களில்கூட, தட்சணாமூர்த்தியைப் பார்த்துவிடமாட்டோமா, அவர் வாசிப்பைக் கேட்டுவிட மாட்டோமா என்று கூட்டம் நிரம்பி வழிந்தது ஆச்சரியம்தான். இல்லாவிட்டால் கிருஷ்ணகான சபையில் இவர் வாசிப்பைக் கேட்ட பாலக்காடு மணி அய்யர், இவரை உலகின் 'எட்டாவது அதிசயம்' என்று சொல்லியிருப்பாரா?

ஒரு அட்சரத்தில் மூன்று, நான்கு, ஐந்து, ஏழு, ஒன்பது மாத்திரைகள் வரும் நடைகளே நடைமுறையில் இருக்க, ஒரு அட்சரத்தில் 11, 13 மாத்திரைகள் வரும் வகையில் நடை அமர்த்தி, முதன் முதலில் வாசித்தவர் தட்சணாமூர்த்திதான்!

எவ்வளவு நேரம், எவ்வளவு வேகமாக வாசித்தபோதும் ஒவ்வொரு சொல்லும் அதற்கு உரிய கனமுடன், தெள்ளத்தெளிவாய் வாசிக்கும் திறன், அவர் தனிச் சிறப்பு என்று, கேட்டவர்கள் இன்றும், அவரை நினைத்து உருகிப் போவதுண்டு.

"இயற்கையிலேயே லயப்பிண்டமாக பிறந்துவிட்ட தட்சணாமூர்த்தி தஞ்சாவூரில் இருந்தபடி, நீடாமங்கலம் சண்முக சுந்தரம் பிள்ளையுடனும், நாச்சியார் கோயில், ராகவ பிள்ளையுடனும் சேர்ந்து, காருக்குறிச்சி அருணாசலம் போன்ற நாகஸ்வர சிகரங்களுக்கு வாசித்த காலத்தை பொற்காலம் என்றுதான் சொல்ல வேண்டும்.

அவரைப்போன்ற தவில் வித்வான், அவருக்கு முன்னாலும் இல்லை; அவருக்குப் பிறகும் வரப்போவதில்லை," என்கிறார், தெட்சிணாமூர்த்தியுடன் நெருங்கிப் பழகிய, பி.எம்.சுந்தரம்.

யார்க்கும் எட்டா கற்பனையும், அதை செயல்படுத்திக் காட்டும் ஆற்றலும் கைவரப்பெற்ற அந்த மாமேதை, துரதிர்ஷ்டவசமாய், தனது 42வது வயதிலேயே மறைந்தார்.

### தட்சணாமூர்த்தி வாழ்க்கை

உலகுக்கு தவில் என்ற வாத்தியத்தின் பெருமையை உணரவைத்த தவில் மேதை தட்சணாமூர்த்தி குறுகிய கால வாழ்வில் அவர் சாதித்தவை, ஈழத் தமிழன் புகழுக்குச் சான்று பகர்ந்து கொண்டே இருக்கும்.

1933 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி பிறந்தவர் தட்சணாமூர்த்தி. யாழ்ப்பாணம் இணுவிலில் விஸ்வலிங்கம் - இரத்தினம் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். இசைக்குடும்பத்தைச் சேர்ந்த அவரது பெற்றோர் அவருக்கு ஆரம்பகால இசைப் பயிற்சிக்கு வழிவகுத்தார்கள்.

அளவெட்டி வடக்கில் திருமணம் செய்து நீண்ட காலம் அங்கு வாழ்ந்தவர். ஐந்து பிள்ளைகளின் தந்தை. கலைச் செல்வி, உதய செல்வி, ரவி சங்கர், உதயசங்கர், நயனபுத்திரன் -இவர் செல்வங்கள். இவர் பேரன் கீதாலயன், தாத்தா பெயரை நினைவூட்டிக் கொண்டிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தின் ஆலயங்களில் திருவிழாக் காலங்களில், இடி, மின்னல், சூறாவளி என்றெல்லாம் தட்சணாமூர்த்தியின் தவில் வாத்தியம் பக்தர்களை ஆட்கொள்ளும்.

இலங்கை, தமிழ்நாடு, மலேஷியா என்று தட்சணாமூர்த்தி புகழ் பரவியிருந்த காலத்தை எப்படிச் சொல்வது என்றே தெரியவில்லை. ●


ப.வை.ஜெயபாலன்
எழுதும் 'சங்கதி'
அடுத்த இதழிலிருந்து
தொடர்ந்து வெளிவரும்.


## தமிழ் அரச ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள்
## தகவல்கள் தந்து உதவுங்கள்

- ✓ இலங்கை சுதந்திரம் அடைந்தபோது அரசசேவையில் உயர்பதவிகள் உட்பட ஏனைய துறைகளில் 24 வீதமான தமிழ் பேசும் ஊழியர்கள் பணியாற்றி வந்தனர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப பாகுபாடு அற்றமுறையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டபடியால் 24 வீதமான தமிழ் ஊழியர்கள் அன்று பலதுறைகளிலும் பணியாற்றிவந்தனர்.
- ✓ சுதந்திரத்திற்குப் பின்பு சிங்கள தலைவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றதும் இனத்துவேசம் தலைதூக்கியது. அரசசேவையில் தமிழர்கள் உயர் பதவியிலும் ஏனைய துறையிலும் பணியாற்றுவதை துவேச கண்ணோட்டத்தில் பார்த்தனர்.
- ✓ பல்லின மக்கள் வாழும் நாட்டில் விகிதாசாரத்தின்படி 24 வீதமானவர்கள் பணியாற்றுவது ஜனநாயகம்.
- ✓ இந்த வரையறைகளை கடைப்பிடிக்காத சிங்களத் தலைமைகள் தமிழ் ஊழியர்கள் அரச சேவையை ஆக்கிரமித்துவிட்டார்கள் என்ற கோசத்தை எழுப்பி சிங்கள ஊழியர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க பிரசாரம் மேற்கொண்டனர்.
- ✓ கடந்த 67 ஆண்டுகளாக ஆடசிக்கு வந்த சிங்களத் தலைமைகள் தமிழ் ஊழியர்களின் தொகையைப் படிப்படியாகக் குறைப்பதற்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பல. சிங்களம் மட்டும் சட்டம் மிகப்பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது.
- ✓ இன்று அரச சேவையில் தமிழர் தொகை 5வீதமாக வந்துவிட்டதாக மதிப்பிடப்படுகிறது. இந்த அநீதியையும் தொழிலால் தமிழர்கள் ஒதுக்கப்படுவதையும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டியது அவசியமாகும்.
- ✓ நான் தமிழ்த்தொழிற்சங்க கூட்டணியின பொதுச்செயலாளராகவிருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வினாலும், யாழ் பல்கலைக் கழக அறிஞர் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வினாலும் கிடைக்கப் பெற்ற தகவல்களையும் அடிப்படையாக வைத்து தமிழ் அரச ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் என்ற தலைப்பில் 2003ம் ஆண்டுகளில் வீரகேசரியில் தொடர்ச்சியாக சில வாரங்கள் எழுதி வந்தேன். ஆனால் அத்தொடர் பூர்த்தியாகவில்லை.
- ✓ எல்லாத் தகவல்களையும் உள்ளடக்கி ஒரு நூலாக வெளியிடுவதற்கு முயன்று வருகின்றேன். அதற்கான மேலதிக தகவல்களை அரச சேவையில் பணியாற்றியவர்கள் மற்றும் அதுதொடர்பான தகவல்கள் வைத்திருப்பவர்கள் அவற்றை எமக்குத் தந்து உதவுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்களைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி உதவுக.

I.T.Sampanthan,15 Rutland Road,London E& 8PQ
E/Mail itsampanthan@hotmail.com Mob 07852950089

# மரண அறிவித்தல்



பிறப்பு :
11.09.1931

இறப்பு :
21.02.2015

## திருமதி செல்லம்மா செல்வத்துரை

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், உசனை வதிவிடமாகவும், பிற்காலத்தில் லண்டனை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா செல்வத்துரை அவர்கள் 21.02.2015 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற பெரியதம்பி செல்வத்துரை (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னப்பு - சின்னம்மா தம்பதியின் அன்புப் புதல்வியும்,

திருமதி சிவாஜினி ஜெயநாதன் (லண்டன்), ஜீவகன், (லண்டன்), Dr.அசோகன் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

காலஞ்சென்ற நமசிவாயம் (மலேஷியா), கனசபை (கனடா), திருமதி சிவக்கொழுந்து குலசேகரம் (சிங்கப்பூர்) ஆகியோரின் தங்கையும்,

Dr.ஜெயநாதன் (லண்டன்), திருமதி சாரதா ஜீவகன் (லண்டன்), Dr.நளினி அசோகன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

பரமேஸ்வரி, மகேஸ்வரி, குலசேகரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

Dr.மேஜர் ஜெய்சங்கர், Dr.உமா ஜெய்சங்கர், Dr.சரவணன், Dr.பிரியதர்ஷினி, ரட்சகி, சாம்பவி, சாயகி, சாதன்யன் ஆகியோரின் பேத்தியாரும்,

ஞானப்பழனி, சிவமுருகன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் அறிவிக்கப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர், தொடர்புகளுக்கு: 01689872796.**


## BHARATHIAR UNIVERSITY

**School of Distance Education**
**Coimbatore, India**

- ஐக்கியராச்சியம் மற்றும் ஐரோப்பா வாழ் கல்வி ஆர்வலர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.!!!
- வேலை செய்து கொண்டும், வீட்டில் இருந்துகொண்டும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பாரதியார் பல்கலைக்கழக BA, BBA, BCom, Bed ,BSc, MA, MBA, MCom,MSc பட்டதாரியாகலாம்.
- நீங்கள் விரும்பிய தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் க.பொ.த உயர்தரத்தில் மூன்று சித்திகளுடன் மிகவும் குறைந்த செலவில் கற்கைநெறி மற்றும் வழிகாட்டல் கைநூல் என்பவற்றுடன் அரிய வாய்ப்பினை தருகிறார்கள் இலண்டனில் பாரதியார் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற மேலை நாட்டுத் தமிழ் பாடசாலைகள் ஒன்றியத்தினர்.
- தொடர்புகள். மேலைநாட்டுத் தமிழ் பாடசாலைகள் ஒன்றியம்.

- B.A, B.A applied Tamil
- B.Com., B.Sc Mathematics
- B.Sc. Information Technology
- BBA Finance and Accounting,
- B Social work, M.A. Tamil, M.A. English,
- M.A. Sociology, M.A. Journalism M.Com,
- M.Social Work M.Sc Applied Psychology,
- M.Sc Maths M.Sc I/T,
- MBA General, Financial, Human Resource, Banking & Marketing Management





**WESTERN TAMIL SCHOOLS FEDERATION-UK**

Tel: Manoharan - 020 8540 0705, Vilvaraj, 079 5840 8280, Murugaiah 07960455853
E-mail: joseph.vilvaraj@gmail.com • web: www.westerntamilschoolsfederation.co.uk



## A-Lanka Travel Ltd

*We make it easy to take it easy*

171 Tooting High Street, Tooting, London SW17 0SZ
020 8672 5551, 020 8672 2010

வாரத்தில் 7 நாட்களும் எமது முழுமையான சேவை

We Serve all 7 Days in a week

உலகின் எப்பாகத்திற்கும் நியாயமான விலையில் விமானச் சீட்டுக்களை உடன் பெற்றிட நம்பிக்கையான தமிழர் ஸ்தாபனம்

For **Special Family Discount and Emergency Ticket** Only.
Please Contact Wimal on 07956 206 709

உங்கள் சகல பிரயாணத் தேவைகளுக்கும் அழையுங்கள்...

020 8672 5551
020 8672 2010

*Worldwide Travel Agent*

**Special Rates for**
(Subject to availability)
Colombo £210 + tax,
Madras £235 + tax,
(with British Airways)
Canada £?? + tax,
(with Sri Lankan Airlines )

For special offers please listen to Sooriyoothayam Radio on 1035MW Mon - Fri 10 to 11 pm

Indian Visa services available




அவசர உடன் டிக்கட்களுக்கு அழையுங்கள் : 07956 206 709
விமல் / விஜி 07957 121 696
Wimal / Viji.

Email: wimal@a-lankatravel.co.uk | Web: www.a-lankatravel.co.uk

கேட்போர் மனதை தனது தனித்துவம் பொருந்திய குரலால் லயிக்கச் செய்து, அதே நேரத்தில் தானும் அந்த இசையில் நனைந்து, கரைந்து, உருகி, இசை வடிவமாகவே மாறிவிடும் ஈடு இணையற்ற இளைய தலைமுறையின் முன்னணிப் பாடகிதான் நித்தியஸ்ரீ மகாதேவன்.

தனது நினைவுகளை தொடர்ந்து பகிர்ந்து கொள்கிறார் வைத்திய நிபுணர் நவரத்தினம்:



# இசை வடிவம் நித்தியஸ்ரீ!

பாரம்பரியமான இசைக்குடும்பத்திலிருந்து வந்தவர் நித்தியஸ்ரீ. பழம்பெரும் பெருமைமிக்கப் பாடகி டி.கே.பட்டம்மாள், நித்தியஸ்ரீயின் தந்தையார் மிருதங்க வித்துவான் சிவகுமாரின் தாயார். மறைந்த மிருதங்க மேதை பாலக்காடு மணி ஐயர், நித்தியஸ்ரீயின் தாயார் லலிதா சிவகுமாரின் தகப்பனார். இயற்கையாகவே தனக்கு அமைந்த சங்கீதத்தை முறையாகத் தாயாரிடமும், தன் ஆரம்ப வாய்ப்பாட்டு பயிற்சியினைப் பெற்று, பெரும் புகழுடன் அக்காலத்தில் கொடிகட்டிப் பறந்த தன்னுடைய பாட்டியார் டி.கே.பட்டம்மாளிடம் நித்தியஸ்ரீ இசை பயின்று தேர்ச்சி பெறத் தொடங்கினார்.

பாவபூர்வமாக அற்புதமாகப் பாடுகிற தன் பேரக் குழந்தையை நினைத்து பாட்டியே பெருமைப்படத் தொடங்கினார்.

1987ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத்தில்- பதினான்கு வயது நித்தியஸ்ரீக்கு வாய்ப்பாட்டு அரங்கேற்றம் நடந்தது.

சென்னை நுங்கம்பாக்கம் கலாச்சார மண்டபத்தில், டி.கே.பட்டம்மாள் உட்பட டி.கே.ஜெயராமன், கே.வி.நாராயணசாமி போன்ற பல இசை மேதைகள் முன்னிலையில் நடந்த இந்த அரங்கேற்றத்தில், அந்தச் சின்னஞ்சிறு வயதிலேயே அவரது குரலின் இனிமையும், பாடிய பாங்கும் சபையில் இருந்த அனைவரையும் பிரமிப்பில் ஆழ்த்திவிடுகிறது. 'எப்படி இச்சிறுமியால் இப்படிப் பாடமுடிகிறது? நிச்சியமாக எதிர்காலத்தில் ஒரு பெரிய பாடகியாகத் திகழ்வார்'

'இந்த வயதில் இப்படியா? போகப்போக சாதனை செய்வார்.'

இப்படி இசை மேதைகள் புகழ்ந்தார்கள்.

இந்தியாவின் பிரபலமான 'இந்து' நாளிதழ் 'இசை உலகின் மகாராணி' என்று எழுதி முடிசூட்டியும் வைத்தது.

பாட்டி, பேரன் போன்ற இசைக் குடும்பத்தில் உதித்ததும் சிறுமி நித்தியஸ்ரீக்கு வெற்றிப்படிகளில் ஏறிச் செல்வதற்கு இன்னொரு வாய்ப்பாக அமைந்தது.



இசை மீது எனக்கு ஒரு ஈர்ப்பு ஏற்பட்ட அந்தக் காலத்தை நினைத்துப் பார்க்கிறேன்.

1950ஆம் ஆண்டாக இருக்கலாம். சிறுவனாக இருக்கும்போதே டி.கே.பட்டம்மாளின் 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே...' என்ற பாடலை 'ஏறக்கோட்டை'ப்போட்டு கேட்டு ரசித்திருக்கிறேன்.

அதன் பின்னர் அவரது பாடல்களை விரும்பிக் கேட்பேன்.

1966ஆம் ஆண்டு. அப்போது நான் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருந்த 'லயன்ஸ் கிளப்'பில் நானும் ஒரு உறுப்பினர். இசைக் கச்சேரி ஒன்றை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்து, டி.கே.பட்டம்மாளை அழைத்திருந்தார்கள்.

சென்னையிலிருந்து விமானத்தில் பறந்து வந்த டி.கே.பட்டம்மாளை பலாலி விமான நிலையத்திலிருந்து எனது காரில் அழைத்து வந்தேன்.

மறைந்த ஈழத்துப் பிரபல பாடகி நாகேஸ்வரி பிரமானந்தாவின் கந்தர் மடத்திலுள்ள வீட்டிற்கு டி.கே.பட்டம்மாளைக் கூட்டிச் சென்றேன்.

யாழ் முற்றவெளியில் பிரமாண்டமான அந்தக் கச்சேரி நடந்தது.

அந்த இசை நிகழ்ச்சியை யாழ்ப்பாண மக்கள் திரண்டு வந்து ரசித்தார்கள். களைத்துப்போன உடலுக்கும், சோர்ந்து

## ஞாபகம் வருதே!

நிற்கும் உள்ளத்துக்கும் அருமருந்தென அந்த மதுரமான குரலில் அருவிபோலக் கொட்டியது டி.கே.பட்டம்மாளின் இசை.

எத்தனை வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. இன்றுவரை என்னுள்ளத்துக்கு அருமருந்தாக அந்த இசை புத்துயிர் தந்து கொண்டிருக்கிறது.

1989ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். லண்டனில் டாக்டராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். நம்நாட்டுப் பாடகி பிரமானந்தாவும் லண்டனில் இருந்தார்.

டிசம்பர் மாதத்தில் நான் சென்னைக்குப் போகிற சமயத்தில், யோகர் சுவாமிகளின் ஒரு புத்தகத்தை பிரமானந்தா என்னிடம் தந்து, டி.கே.பட்டம்மாளிடம் கொடுக்கும்படி சொன்னார்.

பட்டம்மாளின் கணவர் சிவசாமி ஐயர் அப்போது



மியூசிக் அகடமியின் செகரட்டரி. அவரை முதலில் சந்தித்து, சென்னை வீட்டுக்குப் போனேன்.

அங்கு போனபோது, பட்டம்மாளின் பேத்தி நித்தியஸ்ரீயும் இருந்தார்.

அழகான பதினாறு வயது இளம்பெண். இசைப் பரம்பரையில் பிறந்த இன்னொரு இளம் 'இசை' வடிவத்தை அன்றுதான் முதலில் நேரடியாகச் சந்தித்தேன்.

அந்த முறை மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப்பில் நித்தியஸ்ரீயின் இசைக் கச்சேரியை இரண்டாவது வரிசையில் இருந்து கேட்கிற வாய்ப்புக் கிடைத்தது.

இப்படி குயிலொன்றின் இசையை முழுமையாகக் கேட்டு ரசித்த அனுபவம் அன்றைய பொழுதில் என் மனதை நிறைத்தது.

நாத உலகில் ஒரு புதிய இசை வடிவம்- நாதஸ்வர ஓசையிலே- மூன்றுவித ஸ்தாயிலே லாவகமாக பாடுவது போன்ற உணர்வை நித்தியஸ்ரீ ஏற்படுத்தினார்.

பட்டம்மாள் பாடிய பிரபலமான பாடல்களைப் பாடி - உயர்ந்த இசையினைக் கேட்ட மன நிறைவை ஏற்படுத்திவிட்டது அந்த அற்புதமான குரல்!

தெவிட்டாத தெள்ளமுதாக விளங்கியது.

வழக்கமாக டிசம்பர் மாதத்தில் சென்னையில் நடக்கிற இசை விழாக்களை நான் பார்க்கத் தவறுவதில்லை. அதே போன்று பல இசைக் கலைஞர்களின் அழைப்பை ஏற்று அவர்கள் வீடுகளுக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும்.

நித்தியஸ்ரீயின் தந்தையார் சிவகுமார் அன்போடு அழைப்பார்.

நித்தியஸ்ரீயின் அக்கா காயத்ரி. அவருடைய கணவர் டாக்டர் சுந்தரராமன். அவரும் வைத்திய துறையில் இருந்ததால் எனக்கு நெருங்கிய நண்பரானார். தன் மனைவியின் சுகயீனம் குறித்து பேசினார். வைத்திய ஆலோசனை வழங்கினேன். இவ்விதமான வைத்தியத்துறை ஆலோசனைகளால் அந்தக் குடும்பத்துடனான நட்பு மேலும் அதிகரித்தது.

லண்டனுக்கு நித்தியஸ்ரீ நான்கு தடவைகள் வந்திருக்கிறார். அநாதைகள் அறக்கட்டளை நிர்வாகி அமரர் தெய்வேந்திரம் அழைப்பில். அவரது கச்சேரிகள் எல்லாம் லண்டன் தமிழர்களின் பெருமதிப்பைப் பெற்றன.

நித்தியஸ்ரீயின் குரல்வளத்தைக் கண்டுபிடித்து, அவரைச் சினிமாவுக்குள் கொண்டு வந்து, உலகத் தமிழ் இசை ரசிகர்களின் பிரியத்துக்குரியவராக்கியவர் ஏ.ஆர்.ரஹ்மான்.

'உலக அழகியான ஐஸ்வர்யாராய் நடித்த முதல் தமிழ் படமான மணிரத்தினத்தின் 'ஜீன்ஸ்' படத்தில், 'கண்ணோடு காண்பதெல்லாம்...' பாடி, நித்தியஸ்ரீ அசத்திவிட்டார்! ரஜினியின் 'படையப்பா'வில் 'மின்சாரக் கண்ணா...' பாடி கலக்கிவிட்டார். 'ஒரு நாள்.. ஒரு பௌர்ணமி...', 'தாய்த் திருநாடே...' என்பது போன்ற சினிமாப் பாடல்கள் நெஞ்சத்தை நெகிழச் செய்தவை.

தமிழ்த் தொலைக்காட்சிகளிலும் நித்தியஸ்ரீ மகாதேவன் பெயர் தனக்கென்றோர் தனித்துவ நிலைப்பாட்டை நிலைக்கச் செய்தது.

தொலைக்காட்சி சீரியல்களுக்கு 'டைட்டில்' பாடல்கள் நித்தியஸ்ரீக்கு இடமளிப்பதை தமது வெற்றியாகக் கருதினார்கள். இதனை பெருமையாக என்னிடம் சொல்லியிருக்கிறார், என் நெருங்கிய நண்பர் ஏவி.எம்.குமரன்.

ஜெயா டி.வி, ராஜ் டி.வி போன்ற தொலைக்காட்சிகளில் பாட்டு நிகழ்ச்சிகளை நித்தியஸ்ரீ நடாத்தி ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார். விஜய் டிவியின் 'சூப்பர் சிங்கர்' போட்டிகளுக்கு நடுவராகவும் இருந்து வருகிறார்.

பாரதியார் பாடல்களை பாடி ரசிகர்களைப் பரவசப்படுத்துவார். கோபாலகிருஷ்ண பாரதியாரின் பாடல்களையும், ஊத்துக்காடு வெங்கட சுப்பையர் இயற்றிய தமிழ் பாடல்களையுமே விரும்பிப் பாடுவார். தமிழ் இசை ரசிகர்களின் உள்ளங்களைப் பண்படுத்தி, ரசனையை மேம்பட்ட நிலைக்கு வளர்த்து, ஓர் உயர்ந்த நிலைக்கு அவர்களை அழைத்துச் செல்ல வேண்டும் என்பதே நித்தியஸ்ரீயின் குறிக்கோள்.

750க்கு மேற்பட்ட இசை ஆல்பங்களை தயாரித்து வெளியிட்டிருக்கிறார்.

உலக நாடுகள் எல்லாம் சென்று இசைக் கச்சேரிகள் நிகழ்த்தி வருகிறார். அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, மத்திய கிழக்கு நாடுகள், ஜெர்மனி, பிரான்ஸ், மலேஷியா, சுவிஸ், பெல்ஜியம், நியூசிலாந்து, தன்சானியா, இலங்கை என்று பல நாடுகளில் அவர் குரல் ஒலித்திருக்கிறது.

அவர் பிறந்தது 1973 ஆகஸ்ட் 25ம் திகதி. திருவையாறு பிறந்தகம். பதினான்கு வயதிலிருந்து அவர் மேடைகளில் பாடுகிறார். அன்று முதல் இன்று வரை அவர் பெற்ற பட்டங்கள் ஏராளம்.

தமிழ் நாடு அரசின் 'கலைமாமணி' விருதுடன், யுவகலா பாரதி, இசைப் பேரொளி, நவரசகானா நாயகி, கலைஞர் விருது என்று சொல்லில் அடங்கா.

விமர்சகர் 'சுப்புடு'வின் பாராட்டுதல்களை நித்தியஸ்ரீ பெற்றிருப்பது தனிச்சிறப்பு. 'குயிலின் குரலைவிட இனிமையானது' என்று அவர் ஒரு தடவை குறிப்பிட்டிருக்கிறார்.

### டாக்டர் நவரத்தினம் நினைவுகள்

இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவரது வாழ்வில் ஏற்பட்ட பேரிடியை எப்படித் தாங்கிக்கொள்ளப் போகிறாரோ என்று இசைப் பிரியர்கள் கவலைகொண்டனர்.

அவரது கணவர் மகாதேவனின் அகால மரணத்திலிருந்து மீண்டு, இப்போது பழையபடி பாடத் தொடங்கியிருப்பது ஆறுதல் தருகிறது.

இரண்டு பெண் குழந்தைகள்...

அந்தக் குழந்தைகளும், இசையும் அவரோடு இன்று உயிராக வாழ்ந்து கொண்டிருக்கிறது.

அன்போடும் பண்போடும் அவர் என்னோடு பழகிய நினைவுகள் நிறைய உண்டு. மரியாதை நிறையவே செய்வார்.

ஒரு சத்தியமான சங்கீத வித்துவானான நித்தியஸ்ரீயின் இசைப் பயணம் தொடர வாழ்த்துக்கள்.

**குறிப்பு: நித்தியஸ்ரீயின் அக்கா காயத்திரி- டாக்டர் சுந்தர ராமன் மகள் லாவண்யா, தனது சித்தி நித்தியஸ்ரீயின் இடத்தைப் பிடிக்கப்போகும் டி.கே.பட்டம்மாளின் பெயர் சொல்ல வரும் அடுத்த வாரிசு. ●**

# சித்தாவின் சேவைக்கு லண்டனில் கெளரவம்



**கடந்த தைத்திங்கள் 23ம் நாளில், இலண்டனில் ஈஸ்ற்காம் ஸ்ரீமுருகன் ஆலயத்தில், கைலை சிவ ஸ்ரீ நாக நாத சிவம் குருக்கள் ஐயா தலைமையில் சிறப்பான அபிஷேகத்துடன், சட்டத்தரணி திரு.குமாரசாமி சிதம்பரம்பிள்ளை அவர்களது 70வது பிறந்த தினவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.**

இல்ண்டனில் 33 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வரும், சித்தா-மகேஸ் தம்பதிகள் எனப் பாசத்தோடு கெளரவமாக அழைக்கப்படும் இந்த இணைபிரியாத் தம்பதிகளுக்கு அறிமுகம் தேவையில்லை. ஸ்ரீ முருகன் ஆலயத்தில், குருமார்கள் ஆண்டவன் சந்நிதியில் திரு.சித்தாவுக்குப் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து ஆசித்தனர். கோயில் மண்டபத்தில் நடைபெற்ற இராப் போசன விருந்து உபசாரத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் என 300க்கு மேற்பட்டோர் கலந்து மகிழ்ந்தனர். ஆலயத்தின் பிரதம குருக்கள் கைலை சிவஸ்ரீ நாகநாத சிவம் குருக்கள் அவர்கள் ஆசியுரை வழங்க முருகன் ஆலய நிர்வாக சபைத் தலைவர் திரு.சம்பத்குமார், அறங்காவலர், நிர்வாகிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். அடுத்து, சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு.ஆனந்த தியாகர் மற்றும் அறங்காவலர் சங்க நிர்வாகிகள் மற்றும் சங்க மனையில் அமர்ந்திருக்கின்ற சிவகாமி சமேதர சிதம்பரேஸ்வரர் ஆலயப் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ரமேஸ் குருக்கள் ஆகியோர் திரு.சித்தா அவர்களை வாழ்த்தி, மாலை அணிவித்துக் கேடயம் வழங்கி பெருமைப்படுத்தினர்.

இவர்களைத் தொடர்ந்து ARCHWAY உயர்வாசல் குன்று முருகன் ஆலயம், கற்பக விநாயகர் ஆலயம் (WALTHAMSTOW), லக்ஷ்மி நாராயணன் கோவில் (EASTHHM), ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் கோவில் (EALING), இலண்டன் சிவன் கோவில் (LEWISHAM) போன்ற முக்கிய ஆலயங்களைச் சேர்ந்த அனைவரும் திரு.சித்தா

**சரோஜினி சந்திரகோபால்**

- மகேஸ் தம்பதியினரைப் போற்றி அன்பு மழை பொழிந்தனர்.

திரு.சித்தா தன் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்த 'புற்றளை' மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் சார்பாக, அதன் முக்கியஸ்தர் திரு.வேலுப்பிள்ளை அவர்கள் புற்றளை பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக திரு.சித்தா அப்பாடசாலைக்காற்றிய பெரும் பணிகளை விரிவாக எடுத்துரைத்ததோடு, பழைய மாணவர் சங்கத்தின் 'போசகர்' என்றும் கௌரவித்தார். சித்தாவின் நெருங்கிய உறவினர்களில் ஒருவரான திருமதி செல்வி கௌரிதாசன் கவிதை மூலமும், திரு. ராதாகிருஷ்ணன் தம்பதியினரின் புதல்விகளான சோபனா, சரண்யா இன்னிசை மூலமும் சித்தாவை வாழ்த்தி விழாவிற்கு மெருகூட்டினர்.

மண்டப மேடையில் மேசை மேல் பல வர்ணத்தில் பலரையும் கவர்ந்த மிகப் பெரிய 'BIRTHDAY CAKE' திரு.லாலா அம்மா குகன் தம்பதியினரின் அன்பினைப் பறைசாற்றி மிளிர்ந்தது. சித்தாவின் நீண்ட கால நண்பரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரித்தானியக் கிளையின் தலைவருமான சட்டத்தரணி இரத்தின சிங்கம் மற்றும் தமிழ் சட்டத்தரணிகள் சங்கம் சார்பாக சட்டத்தரணி சிறீக்காந்தலிங்கம் அவர்களும் சட்டத்துறையில் திரு.சித்தா ஆற்றிய பெரும் பணி பற்றிப் புகழ்ந்து பேசினர்.

திரு.சித்தாவின் விழாவில் பேசியவர்களின் பேச்சில் இருந்து, திரு.சித்தா அவர்கள் பல தர்ம நிறுவனங்களுக்கும், பொதுமக்களுக்கும், நேரிலும் ஊடகங்கள் மூலமாகவும் தன் சட்ட அறிவினை மூலதனமாக்கி, சட்ட நுணுக்க அறிவுரைகளையும், அணுகுமுறைகளையும் விபரித்து உதவியமையை அறிய முடிந்தது. தான் பிறந்த மண்ணை மிகவும் நேசிக்கும் திரு.சித்தா அவர்கள், நம் தமிழ் மக்களின், மகிழ்ச்சிகரமான, மங்களகரமான நிகழ்வுகளில் மட்டுமின்றி, சைவக்குருக்கள் தலைமையில் நடைபெறும் மரணச் சடங்குகளிலும் மனப்பூர்வமாகக் கலந்துதவி, மயானத்தில் நடைபெறும் இறுதி யாத்திரையிலும் பங்குபற்றி, மரணித்தவரை ஆத்ம சாந்தி வேண்டி மரியாதையாக வழியனுப்புவதிலும் சிறப்பானவர்.

சைவ முன்னேற்றச் சங்கத்தினூடாக 30 வருடங்களுக்கு மேலாகச் சமூகப் பணி ஆற்றிவரும் திரு.சித்தா அவர்கள் பல ஆலயங்களுக்கும், நிறுவனங்களுக்கும் சட்ட ஆலோசனை மட்டுமன்றி, யாப்பு தயாரிப்பதிலும் கணிசமான நேரத்தைச் செலவிட்டு வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தனிநாயகம் அடிகளார் பாடசாலைத் தாபகர் துரைச்சாமி சிவபாலன் அவர்கள் - தம் பாடசாலைக்கான சித்தாவின் பங்கு, பொது சேவை பற்றி கவிதை பாடி சபையோர் மனங் கவர்ந்தார். பொதுமக்கள் சார்பில் பேசிய சிவத்தொண்டர் திரு.முருகானந்தன் அவர்கள் தனக்கே உரிய தனிப்பாணியில் 2 வேண்டுகோள்களை முன்வைத்து வாழ்த்தினார். சித்தாவின் சிறப்பான பணி எம் மக்களுக்குத் தொடர்ந்து இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட திரு.முருகானந்தன் அவர்கள், இன்னும் ஒருபடி மேலேபோய், திரு.சித்தாவின் நெருங்கிய நண்பர்களான இன்றைய இலங்கைப் பிரதமர் திரு.ரணில் விக்ரமசிங்க மற்றும் வடமாகாண முதல் அமைச்சர் நீதியரசர் திரு.சி.வி.விக்னேஸ்வரன் அவர்கட்கும் ஊடாக, எமது தமிழ் மக்களுக்கு ஒரு ஏற்கக்கூடிய, கௌரவமான, நீதியான, சமத்துவமாக வாழக்கூடிய ஒரு தீர்வை உருவாக்க முயற்சிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இத்தனை பேச்சுகட்கும் மகுடம் சூட்டினாற் போல, கனடாவில் இருந்து வருகை தந்திருந்த திரு.சித்தாவின் மூன்றாவது மூத்த சகோதரர் திரு.ஜெகநாதன் அவர்கள் குடும்ப சார்பில் பேசிச் சித்தாவின் கண்களில் நீர் மல்கச் செய்தார். திரு. ஜெகநாதன் அவர்களோடு பேசியதில் இருந்து வேறு சில சிறப்பம்சங்களையும் அறிய முடிந்தது.

அதாவது Australia, Melbourne நகரில் CARRUM DOWNS எனும் இடத்திலுள்ள சிவாவிஷ்ணு ஆலயத்தில், Australiaவில் வாழும் தன் 3 சகோதரர்களுடனும், ஒரே சகோதரியுடனும், தன் பிறந்த நாளான ஜனவரி 18இல் இறைவழிபாட்டுடனும், மதிய போசனத்துடனும் திரு.சித்தா தன் பிறந்த நாள் விழாவினைக் கொண்டாடியுள்ளார். 100க்கு மேற்பட்டோர் கலந்துகொண்ட இவ்விழாவில் இலண்டன் Archway முருகன் கோவில் நிர்வாக சபைத் தலைவர் திரு.நித்தியானந்தன் கலந்து சித்தாவின் சேவை பற்றிப் பேசியுள்ளார். அதேவேளையில் இலங்கை Hartley College இல் இவரோடு படித்த 6 சக மாணவர்கள் Australiaவின் பல பகுதிகளிலுமிருந்து சமூகம் அளித்துள்ளனர். இலங்கையில் A.G. Department இல் சித்தாவுடன் பணியில் இருந்த (DPP) சட்டத்தரணி திரு.சிவராசா அவர்கள் பேசுகையில் 1981இல் புலமைப் பரிசில் பெற்று பிரித்தானியாவுக்கு மேற்படிப்பிற்காக வந்த திரு.சித்தா நாட்டு நிலைமை காரணமாக 1983இல் இலங்கைக்குத் திரும்பாமல் விட்டது, தமிழ் மக்களுக்கு ஒரு பேரிழப்பு என்றும், அவர் அங்கு போயிருந்தால் சட்டமா அதிபராகவோ அல்லது வேறு உன்னத பதவியிலோ இருந்து நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் பெரும் சேவை ஆற்றியிருப்பார் என்றும் கூறியுள்ளார்.

தன் பிறந்த நாளன்று Australia விலும் தன் பிறந்த நட்சத்திரத்தன்று இலண்டனிலும் சிறப்பாக தன் பிறந்த தின விழாவைக் கொண்டாடிய திரு.சித்தாவின் ஏற்புரையுடனும் நன்றியுரையுடனும் விழா இனிதே நிறைவேறியது. நேரம் நள்ளிரவைத் தாண்டியபோதும், இராப்போசனத்தில் கலந்து மகிழ்ந்தனர், சித்தா-மகேஸ் தம்பதியினர் மேல் அன்பு கொண்ட நெஞ்சங்கள். இந்த நிகழ்ச்சியை தொகுத்தளித்தவர் திரு.இந்து சேகர் அவர்கள்.

# மோடியின் முகத்திரையை கிழித்தெறிந்த கெஜ்ரிவால்!

'மோடி அலை' என்ற பிரமை மூக்கு டைபட்டுள்ளது! இந்தியாவின் பொதுத்தேர்தலில் அமோக வெற்றி பெற்ற மோடியின் பாரதிய ஜனதாக் கட்சி புதுடில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் மண் கவ்வியது. மொத்தமுள்ள 70 தொகுதிகளில் 67 தொகுதிகளை கெஜ்ரிவால் தலைமையிலான ஆம்ஆத்மி கட்சி கைப்பற்றி, புதிய அத்தியாயம் படைத்துள்ளது. இந்தியாவை மோடி ஆண்டாலென்ன, இந்தியாவின் தலைநகரை ஆண்டு கொண்டிருப்பவர் ஆம்ஆத்மி கெஜ்ரிவால்தான்!

பாரதிய ஜனதாவுக்கு மூன்று ஆசனங்கள்மட்டுமே! காங்கிரஸுக்கு எவ்வித ஆசனமும் இல்லை.

முன்னைய தேர்தலில் 38 ஆசனங்களை வென்றிருந்த மோடி கட்சி இந்தத் தேர்தலில் அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளது. மக்கள் புதிய தலைமை ஒன்றை விரும்புகிறார்கள் என்பதை டில்லித் தேர்தல் உணர்த்தியிருக்கிறது!

கடந்த பொதுத் தேர்தலில் மோடி மக்களுக்குச் சொன்னது ஒன்று; செய்தது ஒன்று! அதுதான் மோடியின் படுபயங்கர தோல்விக்குக் காரணமாகியது. மோடி அரசின் முகத்திரையை புல்லி சட்டசபைத் தேர்தலில் கெஜ்ரிவால் கிழித்தெறிந்திருக்கிறார்.

**– தமிழன்**





# உலகத் தமிழர்களை அழவைத்த ஜெசிக்கா!

லட்சோப லட்சம் உலகத் தமிழ் மக்களை ஈழத்துச் சிறுமியான பதினைந்து வயது ஜெசிக்கா அழவைத்து விட்டார். கடந்த 20ம் திகதி சென்னையில் ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் நடந்த விஜய் டி.வி. சூப்பர் சிங்கர் ஜூனியர் - 4 நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சியில் முதல் ஆறு போட்டியாளர்கள் பங்கு பற்றி பாடினார்கள்.

“தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா?” என்ற ஈழத் தமிழர்களின் அவலத்தைப் பிரதிபலிப்பது போன்ற பாடலை ஜெசிக்கா உணர்வுபூர்வமான முகபாவத்துடன் பாடியபோது, நடுவர்களும், நேரில் பார்த்துக் கொண்டிருந்தவர்களும், உலகத்தின் மூலைமுடுக்குகளில் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்தவர்களும், ஈழத்து மக்களுக்கு நிகழ்ந்த கொடூரத்தை நினைத்து அழுதேவிட்டார்கள்! ஈழத் தமிழர்களை மட்டுமல்ல, தமிழகத் தமிழர்களையும் நெகிழச் செய்துவிட்டார் ஜெசிக்கா!

அடைக்கலம் தேடி அகதிகளாகத் தஞ்சம் புகுந்த நாட்டில், தன் பெற்றோர்களுக்கு கனடா நாட்டில் பிள்ளையாகப் பிறந்த ஜெசிக்கா இம் மாபெரும் போட்டியில், இரண்டாவது பரிசான லண்டன் பணத்தில் 25 ஆயிரம் பவுண்கள் பெறுமதியான ஒரு கிலோ தங்கத்தை ஈழத்தில் யுத்தக் கொடூரத்தால் பெற்றோரை இழந்து சீரழிந்து கொண்டிருக்கும் அனாதைச் சிறுவர்கள் வாழ்வுக்கு வழங்குவதாக அறிவித்த ஜெசிக்காவுக்கு வாழ்த்துக்கள்!

# அம்பலத்துக்கு வரும் மகிந்த மகன்கள் லீலைகள்



ஒட்டுமொத்த ஈழத் தமிழினத்தையே அழித்தொழித்துவிட கங்கணம் கட்டிக்கொண்டிருந்த மகிந்த ராஜபக்சவின் மூன்று மகன்கள் நடாத்திய அட்டகாசங்கள் அம்பலத்துக்கு வரத் தொடங்கியுள்ளன.

நாமல், யோசித, ரோஹித ஆகிய மூன்று ‘செல்லப் புதல்வர்’களும் இதுவரை எண்ணில் அடங்காத பெண்களின் வாழ்க்கையைச் சீரழித்துள்ளதாகவும், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இலங்கையின் சிங்கள அமைப்பான ஜாதிக ஹெறல உருமய தெரிவித்துள்ளது.

பல பெண்களைக் கட்டாயப்படுத்தி பாலியல் உறவில் ஈடுபட்டதுடன், பல பெண்களைக் கடத்தி பலாத்காரம் செய்துள்ளனர்.

இவர்கள் நடாத்திய நாசவேலைகளுக்கும், சீரழிவுகளுக்கும் தங்களிடம் ஏராளமான ஆதாரங்கள் இருப்பதாகவும், அதிலும் நாமல் ராஜபக்ச நீலப்படை என்ற பெயரில் பெண்களைக் கடத்தும் கும்பலையே வைத்து நடாத்தியதாகவும் ஜாதிக ஹெறல உருமய தலைவர் நிஷாந்த சிறிவர்ணசிங்கா தெரிவித்துள்ளார்.

இந்த மூவராலும் பாதிக்கப்பட்ட பெண்கள் எக்கச்சக்கமாக உள்ளனர். தங்களால் சீரழிக்கப்பட்ட பெண்களுக்கு ஏராளமான பணத்தையும், பதவிகளையும் கொடுத்து சரிக்கட்டியுள்ளனர். இந்த விபரங்களை விரைவில் வெளியிடப்போவதாக இந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

நாமல் இந்திய நடிகைகளுடன் தொடர்பு வைத்திருந்தார். அதுவும் பிரபலமான இந்திய சினிமா நடிகைகள் சிலர் நாமலின் காலடியில் சுருண்டு கிடந்த ‘கதைகள்’ அம்பலத்துக்குக் கொண்டுவர இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

## இலண்டன் இலக்கிய சங்கமத்தின் தங்கத் தாத்தா பெருவிழா

தங்கத் தாத்தா நவாலியூர் சோமந்தரப் புலவர். சோமந்தரப் புலவருக்கு இலண்டன் இலக்கிய சங்கமம் நினைவுப் பெருவிழாவைச் சமீபத்தில் லண்டன் அல்பேட்டனில், சென்ற் ஜேம்ஸ் சேர்ச் மண்டபத்தில் நடாத்தினார்கள். லண்டனின் நாலாபகுதிகளிலும் செறிந்து வாழும் பிரமுகர்களும் அறிஞர்களும் பங்கு கொண்டு சிறப்பித்த இவ்விழாவின் ஏற்பாடுகளை இலக்கிய சங்கமத்தின் அமைப்பாளர் சிவ தணிகாசலம் தம் இலக்கிய நண்பர் குழுவுடன் இணைந்து திறம்பட செய்திருந்தார். அவுஸ்திரேலியாவில் வாழும் தங்கத் தாத்தாவின் பேரனார் பல் வைத்தியர் டாக்டர் பாரதி (இளம்பூரணார் மகன்)யின் வீடியோ வாழ்த்துக்களுடன், புலவர் பற்றிய அறிஞர்களின் பேருரைகளும் இடம் பெற்றன. மனதை நிறைத்த பேச்சுக்களும், வயிறை நிறைத்த சிற்றுண்டி இரவு விருந்துபசாரம், மண்டபம் நிறைந்த மக்களின் நெஞ்சை நிறைத்தன. புதினம் அடுத்த இதழில் விரிவான உரைகளும் படங்களும் வெளிவரும்.






## மர்மம் என்ன?

மூக்குடைபட்டு, வீட்டில் முடங்கிப்போய்க் கிடக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக செய்திகள் வந்தாலும், இவரது மகன் யோசித ராஜபக்ஷ கொழும்பில் நிமிர்ந்து நிற்பதன் மர்மம் என்ன? இலங்கை வங்கியின் பிரசார, சந்தைப்படுத்தலை தனியார் நிறுவனத்திடம்தான் பொறுப்பு இருந்து வந்தது. ‘மெஜண்டா’ என்ற இந்த நிறுவனத்தை யோசித நடத்தி வந்தார். சில தினங்களுக்கு முன்னர் இலங்கை வங்கி வீட்டுக் கடன் திட்டம் ஒன்றை ஆரம்பித்தது. ஆட்சி மாறிய பின்னரும் யோசிதவின் கம்பனிக்கே ஆலோசனைகள் வழங்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது ஏன்?

## புலிகளாக மாறிவிட்டனர்

மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் பூனைகள்போல் பதுங்கியிருந்த வடமாகாண சபை இன்று புலிகளாக மாற ஆரம்பித்துவிட்டதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட சுத்தே ஞானசாரதேரர் சமீபத்தில் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

“விக்னேஷ்வரன் தனது வட மாகாண சபையில் நிறைவேற்றியபிரேரணை மூலம் இனவாத பிரிவினைக்கு முயற்சிக்கிறது என்பது தெரியவந்துள்ளது. மகிந்த ஆட்சி கட்டுப்பாட்டில் வடமாகாண சபையை வைத்திருந்தார். ஆனால், ஆட்சி மாற்றத்தின்பின் நாடு படுபாதாளத்திற்கே செல்ல ஆரம்பித்துவிட்டது” என்கிறார் தேரர். ●

## விமல் வீரவன்சா மனைவி கைது



முன்னாள் வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்சாவின் மனைவி சசி வீரவன்சா கைது செய்யப்பட்டார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்கா கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். இவர் மீது மோசடிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, விசாரணைகள் முடிவடைந்துள்ளன. கடவுச் சீட்டு மற்றும் ராஜதந்திர கடவுச் சீட்டுக்களில் பெயர், பிறந்த திகதி போன்ற தகவல்களை மாற்றியதாக சசி வீரவன்சா மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.



## எல்லாப் புகழும் அம்மாவுக்கே!

தமிழ்நாடு முதல்வராக இருந்து, இப்போது மக்கள் முதல்வராகிவிட்ட ஜெயலலிதாவின் சிறீரங்கம் தொகுதிக்கு நடந்த இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற அதிமுக வேட்பாளர் வளர்மதி (1,51,561 வாக்குகள்) புரட்சித் தலைவியைச் சந்தித்து ஆசிகளைப் பெற்றுக்கொள்கிறார். இரண்டாவது இடத்தை திமுக வேட்பாளர் ஆனந்த் பெற்றார். (55,045 வாக்குகள்) ஆம், எல்லாப் புகழும் அம்மாவுக்கே!

மாசிலன்

## லண்டனில் சிறப்பாக நடந்த

## விநோதினி பரதனின்

# ‘கலாநிகேதம்’










சென்ற ஜனவரி 24ம் திகதி Croydon Fairfield மண்டபத்தில் கலைவிழா ஒன்று நடந்தது. அதை கலைகளுக்கான விழா ஒன்று மண்டபம் நிறைந்த பார்வையாளர்களுடன் நடந்தது என்பதே மிகவும் பொருந்தும். தொடக்கத்திலிருந்தே விழாவைச் சுறுசுறுப்பு குன்றாது திகழ வைத்தது. தொகுப்பாளராகக் கடமையாற்றிய விக்கியின் (தி விக்னராஜா) குரல் ஆற்றலும் விழாவை நடத்திய மன்றத்தினர் நிகழ்ச்சிகளுக்கிடையில் இடைவெளி இல்லாத வகையில் நேர்த்தியாக செய்திருந்த ஒழுங்குகளுமே.

நிகழ்ச்சிகளைக் கண்ட அனைவருமே மாணவர்களின் கலை ஆற்றல் கண்டு வியந்தனர். ஒட்டு மொத்தத்தில், அதற்கான பெருமையின் பெரும்பகுதி அம்மாணவர்களை நெறிப்படுத்தி அவர்கள் கலை ஆற்றலை வெளிக்கொணர்ந்த மன்றப் பொறுப்பாளர் விநோதினி பரதனுக்கே சேரும். கலைத்துறையில் பிரபல்யம் பெற்ற இசைமாமணி யோகேஸ்வரனும், தமிழ் அவைக்காற்று பாலேந்திரா - ஆனந்தி தம்பதியினரும் பிரதம விருந்தினர்களாக வந்து விழாவை மேலும் சிறப்பித்தனர்.

இங்கு மகிழ்வுடன் கூறவேண்டிய விடயம் ஒன்றுமுள்ளது. கலாநிகேதம், இதை எளிய தமிழில் கூறுவதென்றால் கலைகளின் இல்லம் எனலாம். இம்மன்றம் பல்கலை ஆற்றல் கொண்ட ஒருவரின் பொறுப்பில் இருப்பதால், நடனம், வாய்ப்பாட்டு, வயலின் என பல கலைகளைப் பயிலும் மாணவர்களைத் தன்னுட் கொண்ட கலைகளின் இல்லமாகவே நிகழ்கிறது. இன்னும் பல மாணவர்களை கலைத்துறைக்கு இது அறிமுகம் செய்யும் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் அன்றைய பார்வையாளர் உள்ளங்களில் ஏற்படத்தான் செய்கின்றது. ●



# வாசகர் கடிதம்

### இன்னும் விடியவில்லை

தானைத் தலைவன் ஆட்சி வரும், தமிழீழம் மலரும் என்ற ஈழத் தமிழன் கனவு வெறும் கனவாகிவிட்டது... சந்திரிகா வந்தாலென்ன, மகிந்தா போனாலென்ன, மைத்திரி ஆண்டாலென்ன? விடிவில்லாத வாழ்வுதான் நமக்கு! இன்னும் விடியவில்லை.

**-கி.சுகுமாரன்,** *NEWMALDEN*

### புரிகிறது

முன்பக்க கருத்து, சுருக்கமாகக் கூறி, எமது நிலையை இடித்துரைத்திருக்கிறீர்கள். பக்கம் பக்கமாக எழுதிப் பயனில்லை. அளவாக எழுதி, புரிய வைத்துவிட்டீர்கள்!

**- தொ.கிருஷ்ணா,** *WEMBLEY*

### அறுசுவை

‘புதினம்’ இதழின் ஒவ்வொரு பக்கமுமே வித்தியாசமான சுவைகளைத் தருகின்றன. அறுசுவைகளுமே அடங்கியிருக்கின்றன. முதலில் விமலின் பக்கத்தைப் படிக்கத் தொடங்குவேன். ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு அழகாகத் தாவுவார். அது அவருக்கு கை வந்த கதை. அடுத்து கே.ஜி.மகாதேவாவின் தமிழக அரசியல், பத்திரிகை அனுபவம், அவர் எழுத்துக்களில் கதை பேசும். இதயச்சந்திரன், இலங்கை அரசியலைப் பிய்த்து வாங்கியுள்ளார். ஹோமியோபதி டாக்டரின் ஆலோசனைகளையும் படித்து, பின்னர் ஜெயபாலனின் சங்கதிக்குள் நுழைந்து, இளைய அப்துல்லாஹ்வின் ‘மற்றவை நேரில்’ எண்ணங்களையும் பகிர்ந்துகொள்ளத் தவறுவதில்லை. விம்பிள்டன் பிள்ளையார் கும்பாபிஷேகம் அருமையான ஆக்கம். சிவபரிமேலழகருக்கு நன்றிகள். அறுசுவை நிறைந்தது பெப்ரவரி இதழ்.

**ஆர்.செல்லப்பா,** *HAYES*

### விரும்பிப் படிப்பேன்

டாக்டர் ஸ்ரீதரனின் ‘என்ன உலகமடா’ துணிச்சலான ஆக்கம். ஒவ்வொரு முறையும் ‘புதினம்’ பத்திரிகையில், அந்தப் பக்கத்தைத்தான் விரும்பிப் படிப்பேன்.

**- செ.குமரப்பா,** *MORDEN.*


லண்டன் தமிழ் நாடகப் பள்ளி
தமிழ் அவைக்காற்று கலைக் கழகம்

இளையவர்களே எமது எதிர் காலம்
லண்டனின் முதலாவது சிறுவர்களுக்கான தமிழ் நாடகப் பள்ளி 12ஆவது வருடத்தை நோக்கி...

6 வயதில் இருந்து சிறுவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்.

சிறுவர்களை இணைக்க விரும்பும் பெற்றோர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

சிறுவர்களுக்கு ஆளுமை வளர்க்கும் அரங்கப் பயிற்சிகள்.

அரங்கப் பயிற்ச்சி அளிப்பவர்கள்
பாலேந்திரா,
ஆனந்தராணி பாலேந்திரா

Tamil Performing Arts Society
தமிழ் அவைக்காற்று கலைக் கழகம்
South Harrow Methodist Church Hall
Walton Avenue, South Harrow Middx.,HA2 8QU

வாரம் தோறும் செவ்வாய்கிழமை மாலை 7மணி
விபரங்களுக்கு : 02084222859




# 54 ஆண்டுகள் ஒரு நீண்ட நட்பின் பயணம்

கதிர் துரைசிங்கம்

**1957** மே மாதம் 10ம் திகதி திரு.பொ.கனகசபாபதி மகாஜனக்கல்லூரியின் H.S.C 1 வகுப்பில் இருந்த எனக்கு விலங்கியல் ஆசிரியராக வருகிறார். இரண்டாம் நாள் வகுப்பு எடுக்க வந்த கனகசபாபதி மாஸ்ரர் "வகுப்பின் உள்ளே மாத்திரம் நான் ஆசிரியர், வெளியே நான் உங்கள் நண்பன்" என்று பிரகடனம் செய்கிறார். மாத இறுதியில் சென்னை சென்ற மாஸ்ரர், B.Sc., (Hons) Zoology க்கான சான்றிதழோடு Madras Presidencyயின் முதல் மாணவனுக்கான தங்கப்பதக்கத்துடன் திரும்புகிறார்.

மறுநாள் மாஸ்ரர் வகுப்புக்கு வர, அவரின் பிரகடனம் ஞாபகத்திற்கு வந்தது. வகுப்பறைக்கு வெளியே மாஸ்ரரிடம் "உங்கள் சாதனையைக் கொண்டாட எங்களைப் படம் பார்க்கக் கூட்டிச்சென்று விருந்து பசாரமும் செய்யவேண்டும்" என நான் கேட்டேன். கலரி, 3rd உடயன மட்டும் தெரிந்திருந்த எங்களை 1st Classல் அமர்த்தி எங்களுடன் மாஸ்ரர் பார்த்து மகிழ்ந்த படம் "வணங்காமுடி". அன்றுதொட்டு இறுதியாத்திரை வரை வணங்காமுடியாக முழுமுடியுடன் திகழ்ந்தவர் எங்கள் கனெக்ஸ்.

1963ல் நான் விடுமுறையில் மாஸ்ரரைச் சந்தித்தபோது தனக்குத் திருமணப் பேச்சு நடக்கிறது என்று சொல்லி, பெண்ணின் விபரமும் கூறினார். கொழும்பு சென்றதும் G.P.O Libraryயில் ஒரு அங்கத்தவராகி அங்கு Librarian ஆக பணிபுரிந்த அமிர்தகௌரிநாயகியைக் கண்டு ஒரு நூல் பற்றிக் கேட்டதன் மூலம் அவரைப் புரிந்துகொண்டேன். எனது சிபாரிசை ஏற்ற மாஸ்ரர் அதே ஆண்டு கௌரியை மணந்தார். நட்பையும் நன்றியையும் வெளிக்காட்ட எனது திருமணத்தில் மணப்பந்தல் அலங்காரம், நிகழ்வொழுங்கு என்று பல பொறுப்புகளை மாஸ்ரர் ஏற்று அசத்தினார். எனது திருமண நாள், அவரின் பிறந்த நாள் (Sept 04) இரண்டும் ஒன்றாயின.


நைஜீரியாவின் Sokoto மாகாண அரசினால் ஆசிரியர்களாக ஒப்பந்த நியமனம் பெற்ற மாஸ்ரரும், அவரது மனைவியும் எனது துணைவியாரும் 1981ல் நைஜீரியா சென்றனர். தொழில் தேடி நானும் 1982ல் Sokoto சென்றேன். தனியார் மருத்துவமனையில் வைத்தியராக நான் நியமனம் பெறும் வரை எனது துணைவியாரும் நானும், மாஸ்ரர் மனைவி பிள்ளைகளுடன் ஒன்றாகவே இருந்தோம். கௌரியின் கைவண்ணத்தில் சமையலும் மாஸ்ரர் கௌரி தம்பதிகளின் விருந்தோம்பலும் பலருக்கு வரப்பிரசாதமாயிற்று. படம் பார்த்தல், சீட்டாடுதல், நண்பர்களுடன் கலந்துரையாடுதல் இவை யாவும் இருவருக்கும் நன்றாகப் பிடித்த பொழுதுபோக்கு.

ஆசிரியராக ஆரம்பித்த மாஸ்ரர் Sokoto மாகாண விவசாயக் கல்வி அதிகாரியாக உயர்ந்தார்.

எனது மருத்துவமனை 210 கி.மீ. தூரத்தில் இருந்தபோதும் வார இறுதியிலும் வசதி வரும்போதும் இரு குடும்பங்களும் சந்திப்பதை வாடிக்கையாக வைத்திருந்தோம். மாஸ்ரர் குடும்பமாக ஒருமுறை பயணிக்கும்போது விபத்தில் மோட்டார் வண்டி குடைசாய்ந்தது. எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. கௌரி சொல்லி எனது மனதில் பதிந்த வாசகம் "மாஸ்ரருக்கு மனைவி பொருந்தும் அமைஞ்சிட்டுது. ஆனால், வாகனம் பொருந்தும் அங்கும் இல்லை, இங்கும் இல்லை." கனடாவில் கனெக்ஸின் போக்குவரத்து வசதியை நிவர்த்தி செய்வதில் கணிசமான பங்கை நான் ஏற்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

நைஜீரியாவின் பொருளாதாரம் சுருங்குவதையும், இலங்கையின் நிலவரம் சீராக இல்லை என்பதையும் உணர்ந்த எம்மவர் கனடா வரத் தொடங்கினர். 87 ஜனவரியில் இரு குடும்பங்களும் ஒன்றாக அமெரிக்கா வந்து ஜன.21 அதிகாலை Montreal லில் அகதி நிலை கோரினோம். ஆசிரியராக, குடும்ப நண்பனாக இருந்த மாஸ்ரர் சகமாணவனாகி French, Computer, Book Keeping என்று என்னுடன் படித்தார். ஜூலை இல் S.I.N கிடைத்ததும் இருவரும் குடும்பமாக Toronoto வந்தோம். இருவரும் பாதுகாப்பு தொழிலை ஒரே நிறுவனத்தில் மேற்கொண்டோம். பின்னர், மாஸ்ரர் Gas Station ல் தனது தொழிலைத் தொடங்கினார். இதற்கு மத்தியில் சுவாசப்பையில் சத்திரசிகிச்சை பெற்ற கௌரிக்கு மீண்டும் சுவாசப்பை பாதிக்கப்பட்டு 1988 ஒக்ரோபரில் எம்மை விட்டுப் பிரிந்தார்.

வாழ்க்கையைச் சவாலாக எடுத்த கனெக்ஸ் தந்தையும் தாயுமாகி இயங்கினார். North York District School Board ல் ஆசிரியராக ஆரம்பித்த கனெக்ஸ் Counselor ஆகி பின்னர் பல்கலாசார ஆலோசகராக நியமனம் பெற்றார். கனடாவில் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்க மூலவேராக இருந்து


மறைந்த முன்னாள் மகாஜனா அதிபருடன் கட்டுரையாளர் கதிர் துரைசிங்கம்

தலைமை ஏற்று ஏழு வருடங்களாகக் கடமையாற்றினார். அவருடன் உபதலைவராக நான் பணியாற்றினேன். சங்க அங்கத்தவர்களில் 75 வீதமானவரை சேர்த்த பெருமை அவரையே சாரும். அங்கத்தவர்கள் அனைவரும் எனக்கும் நண்பர்களாகிவிட்டனர். இலங்கையில் ஒரு குறுகிய வட்டத்தில் இருந்து வந்த என்னுடன் பல்துறை நண்பர்களை கனடாவில் இணைத்த நண்பன் கனெக்ஸ். என்னை எழுதத்தூண்டி எதையாவது எழுதவைத்தவரும், பேசத்தூண்டி மேடையில் எதையாவது பேசவைத்தவரும் அவரே.

மூன்று வருடங்கள் மாணவனாக மாஸ்ரரிடம் படித்தது ஒரு பாடம். 54 வருடங்கள் நண்பனாகக் கனெக்ஸிடம் கற்று அறிந்தவை பல பாடங்கள்.

லண்டனில் இருந்து தொலைபேசியில் ஒரு நண்பர் "Sir தனியாக இருக்கிறீர்களே அவசர தேவை என்றால் என்ன செய்வீர்கள்" எனக் கேட்டிருந்தார். கனெக்ஸ் சொன்ன பதில்: "காலையும் மாலையும் கதிர் என்னுடன் தொடர்பு கொள்கிறார். தேவை என்று அழைத்தால் மறுகணமே வந்து விடுவார்". இக்கூற்று நட்பை மட்டுமன்றி என்மேல் அவர் வைத்திருந்த நம்பிக்கையையும் உணர்த்தியது. நட்பின் நிமித்தம் கனெக்ஸை சிலவேளைகளில் குறைகண்டு எடுத்துக்கூறியிருப்பேன். ஒருமுறை அவரைக் கண்டித்தும் விட்டேன். அமைதியாக இருந்துவிட்டு, மறுநாள் "நீர் என்னைக் கண்டித்தபோது துன்பமாக இருந்தது. பின்னர் யோசித்துப் பார்த்தபோது உமது சாடலில் உள்ள உண்மையும் அக்கறையும் புலப்பட்டது" எனக் கூறி,

*"நகுதற்பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்*
*மேற்சென் றிடித்தற் பொருட்டு"*

என்ற குறளின் பொருளையும் விளக்கினார்.

"சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடிந்தவரை முயல வேண்டும்", "அழைக்கப்பட்ட நேரத்திற்கு வைபவங்களுக்கு சமுகமளிக்க வேண்டும்" இவ்விரண்டும் அவரின் தாரக மந்திரம். கனெக்ஸ் உடன் இணைந்து செல்லும் சந்தர்ப்பங்கள் பல எனக்கு அமைந்த காரணத்தால் நானும் இவற்றைப் பின்பற்ற வேண்டியதாயிற்று. அளவுக்கு மீறிய தூக்கம், சோம்பல், மறதி, காலம் தாழ்த்துதல் இவை நான்கும் கனெக்ஸ்க்குப் பிடிக்காதவை. எங்கள் நட்புக்கு இவை உதவின. ரொறன்ரோ என்றுமே கண்டிராத வகையில் கனெக்ஸின் நூல்களின் வெளியீடு இரு தடவை இடம் பெற்றது. நிகழ்வு ஒழுங்காளராக இரண்டிற்கும் என்னைப் பணித்தார். திட்டமிடல், நேரடி அழைப்பு, நினைவூட்டும் அழைப்பு, விழாவிற்கு வந்தவர்களை முகமலர்ச்சியுடன் கவனித்தல், மறுநாள் ஒவ்வொருவரையும் அழைத்து நன்றி கூறல் எல்லாவற்றையும் அவர்தான் செய்தார். ஆனால், விழாவின் வெற்றிக்கு கதிர்தான் காரணம் என்று மேடையில் தனது உரையில் கூறினார். நடந்ததற்கு நன்றிகூறல், பிடித்ததைப் பாராட்டுதல், இரசித்ததைப் பகிர்தல் ஆகிய நற்பண்புகளை சிலரிடம்தான் காணலாம். அவர்களில் முதல் இடம் வகிப்பவர் கனெக்ஸ்.

நூல் வெளியீட்டு விழாவிற்கு இலங்கை சென்ற அவர், எனது தாயாரைக் கொழும்பில் சந்தித்து உரையாடினார். எனது தந்தை, தாயார், சகோதரங்கள், துணைவியார், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என நான்கு தலைமுறைகளுடனும் வயது வேறுபாடின்றி நட்புப் பேணி வந்தார்.

கர்நாடக இசை, மெல்லிசை இரண்டையும் கனெக்ஸ் நுட்பமாக இரசிப்பார், அவர் விரும்பிக்கேட்கும் பாடல்கள் எனக்கும் பிடிக்கும். இருவரும் இணைந்து இரசித்தவற்றுள் சில:

ராஜாஜியின் "குறை ஒன்றும் இல்லை ..." M.S.சுப்புலட்சுமி பாடியது, M.M.தண்டபாணிதேசிகரின் "தாமரை பூத்த தடாகமடி ...", பாரதிதாசனின் "துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ..." பாடலுக்கு தண்டபாணி தேசிகர் மெட்டு அமைத்தவிதம், பாரதியாரின் "தலைவாரி பூச்சூடி உன்னை ..." பானுமதி பாடியது. குறை ஒன்றும் இல்லை, துன்பம் நேர்கையில் எவர் பாடினாலும் கேட்டு மகிழ்வார்.

"கதிர் உலா" என்ற பாராட்டுப் பனுவலில் "இருவரும் ஒன்றாகவே பிரயாணிக்கிறோம்" என்ற தலைப்பிலும் "காதோடு காதாக" என்ற எனது நூலின் ஆசிரியர் அறிமுகத்தில் "மாணவனே தோழனுமாகி" என்ற தலைப்பிலும் "நண்பர்" என்ற எனது மணிவிழா மலரில் "முதன்மை மாணவனா?" என்ற தலைப்பிலும் கனெக்ஸ் என்னை வியந்து பாராட்டி எழுதி இருந்தார்.

எனது பிறந்த தினத்தை ஒட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நடந்த வைபவத்திற்கு நட்பின் நிமித்தம் கனெக்ஸ் உடன் வருகை தந்து உரையாற்றினார். பின்னர் நவம்பர் மாதம் மண்டபத்தில் நடந்த விழாவில் நகைச்சுவை ததும்ப உரையாற்றிக் கௌரவித்தார். இரண்டு இடத்திலும் "உங்களுக்காகவும் முக்கியமாக எனக்காகவும் கதிர் நீடு வாழ வேண்டும்" என வாழ்த்தினார்.

நான் இரவு வேலை செய்யும் காலத்தில் இரவு 11.45க்கும் பகல் வேலை செய்ய தொடங்கிய காலம் முதல் காலை 8.45 மணிக்கும் கனெக்ஸை தொலைபேசியில் தொடர்புகொள்வேன். 15 நிமிடங்களுக்கு மேல் நான் தாமதித்தால் அவர் அழைப்பார். கனடாவிற்கு வெளியே சென்ற வேளைகளிலும் இது தொடர்ந்தது. 27 ஆண்டுகள் இப்படிக் கழித்துவிட்டேன். டிசம்பரில் இருந்து தொலைபேசியில் காலை தொடர்புகொள்வதோடு மாலையில் அவரின் வீடு சென்று சந்தித்தும் வந்தேன். 24ம் திகதி காலை அழைத்தேன். அவர் பதிலளிக்காத முதல் அழைப்பு, எனது இறுதி அழைப்பாயிற்று.

"முதன்மை மாணவனா?" என்ற கட்டுரையின் இறுதியில் நண்பன் கனெக்ஸ் எழுதிய வரிகள் ...

"... எங்கள் நட்பு தொடர்கிறது
தொடரும்!
அடுத்த பிறவியிலும் கூட ..."

## HAIR LOSS ? NOT ANYMORE !

Are you suffering with the following conditions?

FREE CONSULTATIONS

LANDMARK
HAIR REPLACEMENT STUDIO OF LONDON
www.landmarkhair.com

- Thinning Hair
- Male Pattern Balding
- Receding hair line
- Alopecia
- All forms of hair loss conditions are solvable




STOP HAIR LOSS NOW!

HARLEY STREET TREATMENTS

MedContour

CHANGING LIVES IN OVER 50 COUNTRIES


After 1hr Treatment

Left side treated after 30mins, Right side untreated



Voted Best Non-Surgical Body shaping device in the world 2012


After 4 treatments




Daily Mail
'No.1 Flab Zapper'

www.med-contour.co.uk

## STUBBORN FAT ? NOT ANYMORE !

LONDON
32 – 34 Great Marlborough Street,
London. WIF 7JB
Tel : + 44 (0)20 7734 7113

BRISTOL
21 St Georges Rd.
Bristol, BS1 5UU
Tel: + 44(0) 117 302 0129

TAMIL No
Please call
LANDMARK
Tel: + 44 (0) 7958 407643

# LycaFly

## CALL US 24x7 on 0207 132 32 32




## Best deals to COLOMBO

SriLankan Airlines
from £460 Incl. taxes
40kg

| | | | | |
|---|---|---|---|---|
| TURKISH AIRLINES | OMAN AIR | JET AIRWAYS | QATAR AIRWAYS | Emirates |
| from £412 Incl. taxes | from £424 Incl. taxes | from £446 Incl. taxes | from £461 Incl. taxes | from £487 Incl. taxes |

PLUS **FREE** LYCAMOBILE TOP-UP WHEN YOU BOOK WITH US

(hundreds & thousands of free minutes worldwide)

* The free Lycamobile top-up offer is offered to each fully paid adult return ticket and will not be offered to child/infant and one way tickets. Offers are not valid for Emirates Airlines. LycaFly reserves the right to withdraw this offer at any time.

## Flights, Hotels & Holidays

## Any Airline... Any Destination... Lowest fare Guaranteed

CANARY WHARF
Walbrook Building, 195 Marsh Wall
London E14 9SG - 020 7132 3232

EAST HAM
180 High Street North,
East Ham E6 2JA - 0207 132 0056

WEMBLEY
14 Ealing Road, Wembley,
London HA0 4TL - 0207 132 0055

www.LycaFly.com

IATA

9624 PROTECTED


Lycamobile
Call the world for less
Special rates with UK plan
UK Plan
Only!
£15
Valid for 30 days
500 UK mins
6GB 4G DATA
Unlimited UK texts
Unlimited calls and texts
from Lycamobile to Lycamobile
To buy: Text 11244 to 3535
Sri Lanka
3p
/min
Landline + Mobile
Order your free SIM at
www.lycamobile.co.uk or call 020 7132 0322
Top-up your SIM online or where you see the following signs:
TESCO
Sainsbury's
ASDA
WHSmith
Martin McColl
Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears
Lyca mobile
Call the world for less